ராமாயணஸாராவளீ

18-5

ஸர்வஶாஸ்த்ர ஸார்வபௌம

திருப்புக்குழி ஸ்ரீ கிருஷ்ணதாத தேசிகன் திருவடிகள்,

ஸ்ரீமத்ராமாயண-வேதாந்த சாஸ்த்ர-தர்மசாஸ்திர-

ஜ்யோதிஷ சாஸ்த்ர விசாரத, பெருமாள் கோவில்

கொண்டங்கி தட்டை ராஜகோபாலாசாரியர் குமாரர்

ஸ்ரீநிவாஸராகவாசார்யரால்

இயற்றியது.

Printed at the
HINDI PRACHAR PRESS,
Thyagarayanagar, Madras.

 1940 [விலை ரூ. 1-0-0.

Respectfully dedicated
to my revered father

Ub. Ve. KONDANGI RAJAGOPALACHARYA

AND

His Holiness Sri Ramanuja
Paduka Sevaka Yati Swamigal

of All India Ramayana fame under
whose feet I sat by turns for
the Study of Ramayana

FOREWORD

My friend, Mr. T. Srinivasa Raghavacharya, has thought fit to ask me to write a Foreword to his "Ramayana Saravali" and it is not for me to question the wisdom of his choice in this respect. While complying with his request, I feel it my duty to make it clear that I have only ventured to express my appreciation of the work from the point of view of a student and that I am not to be understood as arrogating to myself any higher role.

The Ramayana has for centuries been a source of instruction and inspiration, of solace and wisdom to all Hindus. Having been made available in many of the Indian languages, in the works of great poets, the story of this Avathar has had behind it not only the appeal of religion but also all the advantage which its embodiment in classical poetry can give it. The familiar methods by which it has been expounded all these centuries have brought the story home to the learned and to the unlearned alike, to men, women and children. In the Tamil land the Ramayana has been shown by the writings of the great Acharyas and the commentators on the Divya Prabandha to be a mine of philosophical lore. In recent years, however, the opportunities available even to those who are interested in our religion to understand the true significance and inward meaning of several passages in the Valmiki Ramayana and of some of the incidents described in

it have for one reason or another, become more and more limited. It is perhaps natural that expositions of the subject by English-educated Indians should make a more effective appeal to others similarly situated than exposition by our Pandits, in the time-honoured way. At any rate, they serve to create in the English-educated Hindu an interest and appreciation which may often prove to be the stepping stone to a fuller and deeper study.

Mr. Srinivasa Raghavacharya has for more than a decade been rendering a great service by delivering discourses on the Ramayana, in all parts of the Presidency. Their quality is sufficiently attested to by the fact that they have not merely received general public appreciation but also won high encomiums from great scholars like the late Kapistalam Swami and Sri Jagadguru of the Kamakoti Pita and from leaders of our society like Messrs. V. V. Srinivasa Iyengar and K. S. Ramaswamy Sastri and the late Professors Ramanujachariar and Sundara Rama Iyer. It was a very happy thought of Mr. Srinivasa Raghavacharya that some of the ideas which he has been expounding from the platform and in the Press should be given a more permanent shape and be made available to a wider circle of readers by collecting a number of his articles in book form. In the modest language of the author (in his Preface) the articles certainly "provide food for thought".

May Sri Ramachandra, in His Grace, bless the author and his readers with true wisdom, is the humble prayer of

New Delhi
8-3-1940.

S. VARADACHARI

AUTHOR'S NOTE

Most of the articles that appear in these pages were first published in the 'Vedanta Dipika' and 'Sri Desika Sukthi Samrakshini.' As the remaining articles could not be published therein, I have embodied them all in a small book at the suggestion of several of my friends. I have also included in this book three articles (nos 11, 12 & 13) which I had specially written for the **10th Session of the All India Oriental Conference at Tirupati.** I do not for a moment claim any originality for these articles except for bringing together several verses and episodes occurring in different places of the Valmiki Ramayana and connecting them into a homogeneous whole. It is my primary aim to support all my theories and conclusions by the words of Bhaghavan Valmiki himself and not import extraneous authorities which may not be acceptable to all. The articles are particularly made brief and provide only food for thought and research by scholars. This being my first attempt to reduce to writing the gist of my Ramayanam lectures which I have been off and on delivering in different parts of India I have a great diffidence that many grammatical and other errors might have crept in. Any correction or suggestion for improvement will be most thankfully received.

My sincere thanks are due to Professor T. Viraraghavachariar of the Sanskrit College, Tirupati, and Sriman

D. Ramaswami Iyengar B.A.,B.L., Advocate, Madras for their valuable suggestions and proof corrections and to Sri P. V. Srinivasa Raghavachariar B.A., for writing the manuscripts to my dictation at a time when I was physically indisposed.

The book is printed on superior Antique paper and the price of the book could possibly have been reduced a little but for the tremendous increase in the cost of the paper due to War conditions. But I am sure that lovers of Ramayana will not mind this.

CHITTOOR
5-3-1940

T. SRINIVASA RAGHAVACHARYA.

அட்டவணை

श्रीः

रामायणसारावली

" जयत्याश्रितसन्त्रास-ध्वान्तविध्वंसनोदयः ।
प्रभावान् सीतया देव्या परमव्योमभास्करः " ॥ १ ॥

भगवद्भाष्यकाराय भवसागरसेतवे ।
भूयो भूयो नमस्कुर्यां भूरिकल्याणराशये ॥ २ ॥

वेत्तारं सर्वविद्यानां जेतारं जिह्मवादिनाम् ।
त्रातारं भवतप्तानां तोतारम्बात्मजं भजे ॥ ३ ॥

" நன்மையும் செல்வமும் நாளு நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
ஜன்மமும் மரணமும் இன்றித் தீருமே
இன்மையே ராமவென்றிரண்டெழுத்தினால்."

ராமாயணோதயம்.

वेदवेद्ये परे पुंसि जाते दशरथात्मजे ।
वेदः प्राचेतसादासीत् साक्षाद्रामायणात्मना ॥

வேதோபப்ருஹ்மணமான ஸ்ரீமத்வால்மீகிராமாயணம் எந்தச் சந்தர்ப்பத்தில் அவதரித்ததென்பதை பகவான் வால்மீகியின் ஸ்ரீஸூக்திகளாலேயே விசாரம் செய்வோம். முதன்முதல் கதாநாயகனான ஸீதாகாந்தனுக்கும் க்ரந்த கர்த்தாவான வால்மீகி மகரிஷிக்கும் சித்ரகூடத்திற்கு முன் ஸமாகமம் ஏற்பட்டது.

इति सीता च रामश्च लक्ष्मणश्च कृतांजलिः ।
अभिगम्याश्रमं सर्वे वाल्मीकिमभिवादयन् ॥

(अयो. 56. 14)

நித்ய தம்பதிகளை விபவாவதாரத்தில் தன்னுடைய ஆஶ்ரமத்திலேயே தான் நன்றாய் சேவித்த பிறகு, வெகு காலம் கழித்து பெருமாளுக்கும் பிராட்டிக்கும் காரணாந்தரத்தினால் வியோக மேற்பட்டு தேவியார் வால்மீகியின் ஆஶ்ரமத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில் அந்த கஷ்ட தசையிலும் அநந்ய பக்தியுடன் பர்த்தாவின் கல்யாண குண கணங்களையே அவள் அநுஸந்தானம் பண்ணிக்கொண்டிருக்கும்பொழுது வால்மீகி பகவான் உற்றுநோக்கிவந்தார்

அதன்மேல் இவ்வளவு குணகண விசிஷ்டரான புருஷோத்தமனுடைய லக்ஷணங்களை யதாவத்தாய் அறியவேண்டுமென்று திருவுள்ளம் கொண்டு

तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया என்கிறபடியே நாரதபகவானிடம் ஆசார்யவரணம் செய்து **कोन्वस्मिन् सांप्रतं लोके** என்று தொடங்கி விண்ணப்பம் செய்துகொண்டார். அதற்கு நாரதபகவானும் சுருக்கமாய் **रामोस्ति** " ஸ்ரீராமன் " என்று பதில் சொல்லவேண்டியிருக்க, ஸ்ரீராம கதையை ஸம்க்ஷேபமாய் உபதேசம் செய்தார். இதன் தாத்பர்யம் என்னவென்றால் வால்மீகிபகவானால் விஸ்தரிக்கப்பட்ட அநேக குணசமூஹங்களும் இந்த ஸம்க்ஷேப ராமாயணத்தில் அடங்கி இருப்பது என்பதே. ஒரு நாள் வால்மீகி மஹரிஷி சிஷ்யஸமேதராய் அனுஷ்டானத்திற்கு **जाह्नवीमविदूरतः** என்று கங்காதீரம் போகுமளவில் அதில் அபிநிவேசம் இல்லாமல் அருகாமையிலிருந்த தமஸா நதியிலேயே அனுஷ்டானம் செய்ய நின்று, பித்தம் பிடித்தவர் போலே ராமகதா ரஸாஸ்வாதனம் பண்ணிக்கொண்டிருக்கும்பொழுது வேடனொருவன் தன்னெதிரில் ஒரு பக்ஷியைச் சுட, அப்போது தன்னை யறியாமலே

मा निषाद प्रतिष्ठां त्वमगमश्शाश्वतीस्समाः ।
यत् क्रौञ्चमिथुनादेकमवधीः काममोहितम् ॥

என்று சந்தோரூபமான ஸூக்தியாலே அந்த வேடனுக்கு ஒரு சாபத்தைக் கொடுத்து அனுதாபப்பட்டு வந்

தார். இந்த சமயத்தில் ப்ரம்மதேவன் அவருக்கு ப்ரத்யக்ஷமாகி

मच्छन्दादेव ते ब्रह्मन् प्रवृत्तेयं सरस्वती ।

"பிரும்ம ரிஷே, என்னுடைய ஸங்கல்பத்தினாலே தான் ஸரஸ்வதி உம்முடைய நாவில் இப்படி வந்தாள்"

என்று அவருக்குத் தேறுதல் சொல்லி, நீர் நாரத பகவானிடம் உபதேசம்பெற்ற ராம சரிதத்தை ஆத்மார்த்தமாகவும் லோகோஜ்ஜீவனார்த்தமாகவும் சங்க்ஷேபமாய் விஸ்தரித்துக் கசடற எழுதக்கடவீர். உம்முடைய நாவில் கொஞ்சமும் பொய் வராது. உள்ளங்கைக்கனிபோல் எல்லாம் உமக்குத் தெரியக்கடவது என்று அனுக்ரஹித்து அந்தர்த்தானமானார். இப்படி வால்மீகி பகவான் புருஷோத்தமனைச் சித்ரகூட பிராந்தியத்தில் தர்சனம் செய்து, பிறகு அவனுடைய குணங்களைச் செவியுற்று, ஆசார்யமுகத்தினால் ஸம்சயமற உபதேசம் பெற்று, பிறகு வ்ரதானுஷ்டானம் செய்து, தர்மவீர்யத்தாலே ஸ்ரீராமனாயவதரித்தவன் விராட் புருஷனே என்று ரகுநந்தனனுடைய யாதார்த்யத்தை அறிந்து ஸ்ரீமத்ராமாயணம் என்கிற திவ்ய சரித்ரத்தை எழுதினார். இதற்கு ஆதிகாரணம் பிராட்டியினுடைய ராமகீர்த்தனமாகையாலே இந்த இதிஹாஸத்திற்கு "सीतायाश्चरितं महत्" (உத்தமமான ஸீதாசரிதம்) என்று திருநாமமளித்தார்.

ராமாயண மங்களச்லோகம்.

मा निषाद प्रतिष्ठां त्वमगमश्शाश्वतीस्समाः ।
यत् क्रौञ्चमिथुनादेकमवधीःकाममोहितम् ॥

இந்த ஆதிகாவ்யத்தின் ஆத்ய ச்லோகத்தை மங்கள ச்லோக மென்று சொல்வது யுக்தமேயாகிலும் ஒரு வேடனுக்கு சாபத்தை யளித்தது எவ்வாறு மங்களகரமாகு மென்று ஸந்தேகிப்பது உசிதமே. ஆயினும் மகாகவியின் திருவாக்கில் இவ்வாறு யாத்ருச்சிகமாய் வெளி வந்தது பரம மங்களமேயாகும் என்று ப்ரம்மதேவன் அனுக்ரஹித்துவிட்டபடியாலும் இந்த ச்லோகத்திற்கு அநேக விசேஷார்த்தங்கள் இருப்பதாலும் இது மங்கள ச்லோகமெனப் பொருந்தும். உடாரி முதலிய பெரியோர்கள் இந்த ச்லோகத்திற்கு அநேக ப்ரகாரமாய் வ்யாக்யானம் செய்திருக்கிறார்கள். சிலர்

द्वासुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते ।
तयोरन्यःपिप्पलं स्वाद्वत्ति अनश्नन्नन्योऽभिचाकशीति ॥

என்றபடி முண்டகோபநிஷத் வாக்யங்களினாலே நிரூபிக்கப் பட்ட ஜீவாத்மா பரமாத்மாக்களின் சம்பந்த விசேஷத்தை இந்த மங்கள ச்லோகத்தினாலே அறியலாம் என்று வ்யாக்யானம் செய்திருக்கிறார்கள். இதனுடன் அடியேனுடைய ஒரு வியாசத்தையும் ஸ்வீகரிக்கவேண்டுமாய் ப்ரார்த்திக்கிறேன். இந்த ச்லோகமே நீர் செய்யும் ஸ்ரீமத் ராமாயணத்திற்கு பீஜ ச்லோகமாக இருக்கக்கடவதென்று பிரும்ம

தேவன் வால்மீகி மஹரிஷிக்கு அனுக்ரஹித்தபடியாலே ஸ்ரீமத் ராமாயணத்தின் ஸப்த காண்டங்களுடையவும் அர்த்தமிருக்கும்படி இந்த ச்லோகத்திற்கு வ்யாக் யானம் செய்யலாமென்று அடியேனுடைய கொள்கை.

1. मानिषाद என்பதினாலே பாலகாண்டத்தினுடைய பாவம் ஸூசிப்பிக்கப்படுகிறது.

அதாவது : 'மாயா: நிஷாத:' பெரிய பிராட்டிக்கு வாசஸ்தானமாக இருப்பவனே, என்பதினாலே திவ்ய தம்பதி களின் சேர்க்கை இதனால் ஏற்படுகிறது.

2. प्रतिष्ठां त्वमगमश्शाश्वतीस्समा: "நீடூழிகாலம் நீர் ப்ரதிஷ்டையை அடைவீர்" என்பதினாலே பூலோக குபேர னான தசரதனுடைய திருமாளிகையில் ஸர்வேச்வரனான ராமன் அவதரித்து பித்ருவாக்ய பரிபாலன மென்கிற வ்யாஜத்தினாலே வேதப்ரோக்தமான உத்தமமான சரணாகத ரக்ஷண தர்மத்தை லோகோஜ்ஜீவனார்த்தமாகத் தானே அனுஷ்டிக்கத் தொடங்கி அதற்குப் பூர்வாங்கமாக ஸர்வ ராஜபோகங்களையும் துச்சமாக நினைத்து ஸர்வத்துக்கும் மேற்பட்டதாக அந்த தர்மத்தை வைத்தபடியாலும், தசரதனையும் பித்ருவாக்ய பரிபாலநத்தினால் கடைத்தேற விட்டபடியினாலும் ராமனுக்கு விசேஷமாக ப்ரதிஷ்டை ஏற்பட்டதை அயோத்தியா காண்டத்தினால் சொல்லப் பட்டது.

3. ச்லோகத்தின் உத்தரபாகத்தினால், காமமோஹி தர்களான திவ்ய தம்பதிகளுக்குப் பரஸ்பரவியோகம் ஏற் பட்டு அதனால் இருவரும் மனத்துயரமடைந்ததை சொல்வதினால் ஆரண்ய காண்டத்தின் கருத்து வெளி

யாயிற்று. இந்த இடத்தில் अवधी: என்கிற பதத்திற்கு ஹிம்ஸித்தாய் என்று அர்த்தம்.

4. காமமோஹிதர்களான வாலி, தாரை இருவர்களில் ஒருவனான வாலியைக் கொன்றாய் என்ற கிஷ்கிந்தா காண்டத்தின் பாவம் இந்த உத்தரார்த்தத்தினாலே ஏற்படுகிறது.

5. ஸமுத்ரத்தின் அக்கரையில் வைதேஹியும் இக்கரையில் ஸ்ரீராமனும் ஒருவர்க்கொருவர் இருப்பிடம் தெரியாமல் காமமோஹிதர்களாயப் பரிதபிக்கும் காலத்தில் ஹனுமான் மூலமாக பரஸ்பர யோகக்ஷேமங்கள் தெரிந்து இருவர்களும் ஸந்தோஷப்பட்ட விஷயம் ஸுந்தரகாண்ட முக்யார்த்தம். இதுவும் இந்த உத்தரார்த்தத்தினால் ப்ரகாசமாயிற்று. இவ்விடத்தில் अवधी: என்கிற பதத்திற்கு அறிந்தாய் என்று பொருள்; "கத்யர்த்தகாநாம் ஞாநார்த்தகத்வம்" என்கிற ந்யாயத்தினால் 'ஹந' தாதுவிற்கு அறிவது என்பதர்த்தம்.

6. காமமோஹிதர்களான ராவணன், மந்தோதரி இருவர்களில் ஒருவனான ராவணனுக்கு வதபர்யந்தமான தண்டனை ஏற்பட்டபடியால், யுத்த காண்டத்தின் முக்கிய விருத்தாந்தமும் மேற்சொன்ன உத்தரார்த்தத்தினாலே வ்யக்தமாயிற்று.

7. மறுபடியும் திவ்ய தம்பதிகளின் பிரிவினை ஏற்பட்டதைச் சொல்வதால் உத்தர காண்டத்தின் கருத்தும் மேற்கூறிய உத்தரார்த்தத்தினாலேயே வெளியாகிறது.

ஸ்ரீராமாவதார ரஹஸ்யம்.

ஸ்ரீராமன் ஜீவாத்ம கோடியில் சேர்ந்தவரென்றும் சௌர்யவீர்ய பராக்ரமங்களாலே உத்தம புருஷலக்ஷணங்களை யடைந்தார் என்றும் சிலருடைய அபிப்ராயம். கேவலம் சுத்தஸத்வமான ஸர்வேச்வரனென்றும் மனுஷ்ய ரூபம் எடுத்து தன்னுடைய ஸர்வ சக்தித்வத்தையும் ஸர்வ சரண்யத்வத்தையும் லோகத்தாருக்கு வெளியிட்டாரென்றும் மற்றவர்களுடைய கொள்கை. ஆனால் வால்மீகிபகவானுடைய ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு மீமாம்ஸாவிசாரம் செய்தால் ஸ்ரீராமாவதாரம் மற்ற அவதாரங்களைப்போலல்லாமல் ஓர் விலக்ஷணமான பூர்ணாவதாரமென்றே சொல்லலாம். ஸ்ரீராமன் கேவலம் சுத்தஸத்வமா அல்லது ஸத்வரஜஸ்தமோகுண ஸம்பன்னனாவென்று பார்த்தால் பின்கூறியதே யுக்தமென்று சொல்லலாம். கேவலம் கலப்பில்லாத சுத்தஸத்வமாயிருந்தால் பிராட்டியின் விச்லேஷ காலத்தில் ராமன் தன்னை மறந்து मानुषः प्राकृतो यथा என்று துக்கிப்பதும், சக்ரவர்த்தியாரின் நிர்யாணவ்ருத்தாந்தத்தைச் சித்ரகூடத்தில் கேட்டுதான் புலம்புவதும், பரதவிச்லேஷம் தாங்காமல் சித்ரகூடத்தில் रुदन्कुटीं स्वां प्रविवेश रामः என்று கேவிப் புலம்புவதும் யுக்தமாகாது. ஆனால் தாடகா வாலி-கர-ராவண ஸம்ஹார காலங்களிலேயும் தாசரதியின் தர்மாநுஷ்டானத்தையும் அடுத்த அவதாரத்தில் பதினெட்டு அத்யாயங்களாலே அர்ஜுனனுக்கு கீதோபதேசம்

செய்த ப்ரஹ்மவித்தையை இந்த அவதாரத்தில் ராமகீதை என்று சொல்லப்பட்ட பதினெட்டு ச்லோகங்களாலே சித்ர கூடத்தில் பரதாழ்வானுக்கு ப்ரஹ்மோபதேசம் செய்ததையும், நீச ஜாதியில் ஜனித்த குகனிடம் ஸௌப்ராத்ருக ஸம்பந்த விசேஷத்தைக் காட்டினதையும், ஜடாயு—சபரீ—ஸுக்ரீவாதிகளுக்கு ஸநகாதிகளுக்கும் துர்லபமான பரம பதத்தை யளித்ததையும், யோசித்துப் பார்த்தால் ஸ்ரீராம பிரானின் சுத்தஸத்வத்வம் விளங்கும். மேற்கூறிய வ்ருத்தாந்தங்களை ஸமந்வயம் செய்தாற்போலே விச்வாமித்ர ப்ருஹ்மர்ஷியும் இளையபெருமாளும் பகவான் வால்மீகியும் மற்றுமுள்ள பெரியோர்களும் அநேகவிடங்களில் ஸ்ரீராம பிரானை **महात्मा** (மகாத்மா) என்று சொல்லுகிறார்களே தவிர **परमात्मा** (பரமாத்மா) வென்று சொல்லவில்லை. ஆனால் **परमात्मा** (பரமாத்மா) வென்ற அபூர்வமான பதப்ரயோகத்தை பகவான் வால்மீகி ராவணஸம்ஹாரமானதும் மந்தோதரியின் வாக்கினால் அவள் பரதத்வநிர்ணயம் செய்யும் காலத்தில் ஒரே தடவை உபயோகப்படுத்துகிறார். இந்த மாதிரி இரண்டு ச்லோகங்களாலே பகவானுடைய நித்ய விபூதியையும் மற்ற இரண்டு ச்லோகங்களாலே அவனுடைய லீலாவிபூதியையும் சொல்லி மந்தோதரிரணரங்கத்தில் ஸ்ரீராமபிரானுடைய பரதத்வத்தை நிர்ணயம் செய்தாள்.

"व्यक्तमेष महायोगी **परमात्मा** सनातनः ।
अनादिमध्यनिधनः महतः परमो महान् ॥
तमसः परमो धाता शङ्खचक्रगदाधरः ।
श्रीवत्सवक्षाः नित्यश्रीः अजय्यः शाश्वतो ध्रुवः ॥

मानुषं रूपमास्थाय विष्णुः सत्यपराक्रमः ।
सर्वैः परिवृतो देवैः वानरत्वमुपागतैः ॥
सर्वलोकेश्वरः साक्षात् लोकानां हितकाम्यया ।
सराक्षसपरीवारं हतवांस्त्वां महाद्युतिः ॥"

ஆனல் மந்தோதரி வாக்யம் எப்படி நமக்கு ப்ரமாணமாகும் என்றால் அந்த சந்தேகநிவ்ருத்திக்காக அவள் சொன்னது யதார்த்தம் என்றுப்போலே பிராட்டியின் அக்னிப்ரவேசகாலத்தில் ப்ருஹ்மசங்கராதிகள் ஸ்ரீராமபிரானைத் துதிசெய்து மந்தோதரியின் ஸித்தாந்தத்தை ஸ்தாபனஞ் செய்தார்கள். இம்மாதிரியான ஸ்ரீராம தத்வத்தை அவதாரத்திற்கு முன்னாலேயே ஸூசநம் செய்தாற்போலே தசரதன் புத்ரகாமேஷ்டி செய்யும்போது யஜ்ஞவேதியில் பாயஸத்தை எடுத்துக்கொண்டு கிளம்பின புருஷனுடைய லக்ஷணமும் பாயஸம் அடங்கிய பாத்திரமும் வால்மீகிபகவானால் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. **स्वस्मै स्वप्रीतये स्वयमेव कारयति** ஆகையால் யஜ்ஞவேதியில் கிளம்பினமகாபுருஷன் யஜ்ஞஸமாராத்யனான மகாவிஷ்ணுவே. பாயஸரூபியாய் ஆவிர்பவித்த ஜகத்காரண வஸ்துவை தன்னுள் கொண்ட பாத்ரமும் பகவத்ஸ்வரூபமே.

ततो वै यजमानस्य पावकादतुलप्रभम् ।
प्रादुर्भूतं महद्भूतं महावीर्यं महाबलम् ॥
शुभलक्षणसंपन्नं दिव्याभरणभूषितम् ।
शैलशृङ्गसमुत्सेधं दृप्तशार्दूलविक्रमम् ॥

दिवाकरसमाकारं दीप्तानिलशिखोपमम् ।
तप्तजाम्बूनदमयीं राजतान्तपरिच्छदाम् ॥
दिव्यपायससंपूर्णां पात्रीं पत्नीमिव प्रियाम् ।
प्रगृह्य विपुलां दोर्भ्यां स्वयं मायामयीमिव ॥

இவ்விடத்தில் 'மஹத்பூதம்' என்கிற பதத்திற்கு **एको विष्णुः महद्भूतं** என்றபடி மஹாவிஷ்ணு என்று அர்த்தம் கொள்ளவேண்டும். மற்ற விசேஷணங்களெல்லாம் அந்த மகா விஷ்ணுக்கே பொருந்துமேயன்றி மற்றவர்களுக்குப் பொருந்தாது. தவிர, "வெள்ளி மூடி போட்ட தங்க பாத்திரத்தில்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்வர்ணத்தாலே நிர்மாமாணஞ் செய்த ஒரு பெரிய பாத்திரத்திற்கு தங்க மூடி செய்யாமல் வெள்ளியால் மூடி செய்ததற்குக் காரணம் என்ன? ஸத்வகுணத்தை வெள்ளையாகவும் ரஜோகுணத்தை மஞ்சள் அல்லது சிகப்பாகவும் வர்ணிப்பது வழக்கம்.

ஆகையால் பாத்திரத்தில் பாயஸரூபியாயடங்கிய ஸ்ரீ ராமன் மநுஷ்யபாவனையைக் கொண்டு ரஜோகுண ஸம்பந்த மான சில கார்யங்களைச் செய்தபோதிலும் அவருடைய எல்லா க்ருத்யங்களிலேயும் ஸத்வகுணமே மேலிட்டிருக்கும் என்பதை பாவிஸூசகமாக தங்க பாத்ரமும் வெள்ளி மூடியும் தெரியப்படுத்துகின்றன. இப்படி "**परावरक्रीडितकर्बुर**" (தெய்வத்தன்மையும் மனுஷ்யத்தன்மையும் கலந்து விளங் கும்படியான) பகவச்சின்னங்கள் ஸ்ரீராமாவதாரத்திற்கே அஸாதாரணபாத்யமாகும். அப்படிக்கில்லாமல் கேவலம் மனுஷ்யனாகவே ஸ்ரீராமபிரான் எக்காலத்திலேயும் பாவித்துவிட்டால் அது லோகத்தாருக்கு ப்ரயோஜன

மாகாது. அப்படியே க்ஷணே க்ஷணே தான் ஸர்வேச்வர னென்ற பாவத்தைக் காட்டினாலும் அது லோகோத்தாரக மாகாது. महतो मन्दैस्सह नीरन्ध्रसंश्लेषस्वभावः தாழ்ந்தவரோடு உயர்ந்தவர் நெருங்கிப் பழகும் தன்மை என்கிற திவ்ய குணத்தை ஸர்வேச்வரன் ஸ்ரீராமாவதாரத்தில் பூர்ணமாக அனுஷ்டித்துக் காட்டினார். ஆகையாலேதான் ஸ்ரீராமதத்வம் விலக்ஷணமானது.

ஸ்ரீராம குருகுலவாஸம்.

லோகத்தில் ஸச்சிஷ்யனுக்கு ஸதாசார்யப்ராப்தி எப்படி துர்லபமோ அப்படியே ஸதாசார்யனுக்கும் ஸச்சிஷ்யப்ராப்தி துர்லபம். காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருந்த பகவத்ராமானுஜரை சிஷ்யனுகச் செய்வதற்காகவே ஸ்ரீ ஆளவந்தார் பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளினதாகப் பெரியோர் சொல்வதுண்டு. ஸர்வேச்வரனே விபவாவதாரத்தில் சிஷ்யராக்கிக்கொள்வதற்காகவே अभ्यागच्छन् महातेजा विश्वामित्रो महामुनिः, என்கிறபடியே விச்வாமித்ர பிரம்மரிஷி தசரத சக்கரவர்த்தியினிடம் வந்து சக்ரவர்த்தித் திருமகனுரைக் தன்னிடம்ஸாதிக்கும்படி யாசித்தார். தாடகாதாடகேய ஸம்ஹாரத்தை உத்தேசித்து ஸ்ரீராமனை யாசித்தபோதிலும் வாஸ்தவமாய் ப்ரம்மரிஷியின் அபிப்பிராயம் ராகவனுடைய சேவையை ஏகாந்தமாய் அநந்ய பக்தியுடன் அனுபவிக்க வேண்டுமென்றும், ஸ்ரீராமகுருகுலவாஸம் என்கிற வ்யாஜத்தினுலே வஸிஷ்டரைத் தன்னுடைய பூர்வஜாதியில் ஜயிப்பதற்காக மஹாப்பிரயாஸத்தினுலே தான் கற்ற அஸ்த்ரசஸ்த்ர வித்யைகள் எல்லாவற்றையும், அவைகள் தனக்குப் பரகதிக்கு விரோதமானபடியாலே पुण्यपापे विधूय निरंजनः परमं साम्यमुपैति என்கிற கடோபநிஷத்தின் வாக்யத்தின்படி ஸர்வத்தையும் ப்ரத்

யக்ஞத்திலேயே ஸ்ரீராமார்ப்பணம் செய்துவிடலாமென்றும் திருவுள்ளம். தவிர அகாலத்தில் கல்யாணம் செய்வது அயுக்தமென்றும் குருகுலவாஸம் செய்து வித்யாப்யாஸம் பூர்த்தியான பின்னிட்டுதான் விவாஹம் செய்துக்கொள்ளுவது சாஸ்த்ர ஸம்மதம் என்றும் லோகத்தாருக்குத் தெரிவிப்பதற்காவே ஸ்ரீராகவனுக்குக் கல்யாணம் செய்யவேண்டுமென்று யோசனை பண்ணும் காலத்தில் ப்ரம்மரிஷி அதிபரபரப்புடன் ஓடிவந்து அந்த யோசனையைத் தடுத்தார். பலே, அதிபலே முதலிய வித்யைகளை எல்லாம் உபதேசித்த பின், தான் பரீக்ஷாரூபமாக துஷ்டநிக்ரஹசிஷ்டபரிபாலனார்த்தமவதரித்த மஹாபுருஷனை துஷ்டநிக்ரஹார்த்தமாகத் தாடகாவதத்தையும் சிஷ்ட ரக்ஷணார்த்தமாக அஹல்யா சாபவிமோசனத்தையும் ஸ்ரீராமனைக் கொண்டு செய்வித்து குருகுலவாஸம் பூர்த்தியாய்விட்டதென்று ஸ்ரீராமனுக்கு ப்ரதிஷ்டாபத்ரம் கொடுத்ததுமல்லாமல் திருக்கல்யாணத்தையும் தானே செய்துவைக்க வேண்டுமென்ற திருவுள்ளத்துடன் ராமனை ஸீதாபதியாய்ச் செய்துவிட்டார்.

ராவணாதிகளை ஸம்ஹாரம் பண்ணவேண்டுமென்பது ஸ்ரீராமாவதாரத்தின் கருத்தானபடியாலே தன்னிமித்தம் ஸ்ரீராமசந்திரன் 14 வருஷம் தண்டகாரண்யம் எழுந்தருளுவதற்குப் பூர்வாங்கமாகத் தாடகாவனம் முதலியவைகளுக்கு ஸ்ரீராமபிரானை ப்ரம்மரிஷி அழைத்துக்கொண்டு போய் அங்கே தபஸ்விகள் படும் கஷ்டத்தைப் புருஷோத்தமனுக்கு நேருக்குநேராகத் தெரிவித்து, வரப்போகும் வனவாஸ ஸங்கல்பத்தை த்ருடீகரணம் செய்தார்போலும். அனேக யாகங்களைக் காரணாந்தரத்தினால் செய்த

விச்வாமித்ர ப்ரம்மரிஷி, ப்ரம்மரிஷி பட்டம் வந்த பின்னிட்டும், ஸர்வேச்வரனுக்கு விபவாவதாரத்தில் ஆசார்ய பதத்தை வஹிக்கும்படியான பாக்யம் ஏற்பட்டபின்னிட்டும் மறுபடியும் ஸித்தாச்ரமத்தில் தீக்ஷிதராய் ஒரு யாகம் செய்ததின் உத்தேசம் என்ன? மேற்சொன்னபடி பகவத்ஸாயுஜ்ய பதவிக்குப் புண்ய பாபங்களிரண்டும் உபரோதமானபடியாலே தான் கற்ற அஸ்த்ரசஸ்த்ர வித்யைகளை ராகவனுக்கு உபதேசமென்கிற வியாஜத்தினலே வாயினலே பகவதர்ப்பணம் செய்ததை இப்போது ராம லக்ஷ்மணர்களான பகவத் பாகவத ஸன்னிதானத்தில் அக்னி ஸாக்ஷிகமாய் க்ரியாரூபமாய் ஸமர்ப்பித்து விட்டாரென்பது இந்த யாகத்தின் முக்ய உத்தேசம்.

தம்மிடம் உபதேசம் பெற்றமையை உடனே தாடகா—அஹல்யா விஷயங்களில் ஸ்ரீராமபிரான் அனுஷ்டித்துக் காட்டினதைக் கண்டு, முனிவரும் ஸந்தோஷமடைந்து பின் வரும் ப்ரதிஷ்டா பத்திரத்தை உகந்தளித்ததாகக் கம்பர் அருளிச் செய்கிறர்—

"இவ்வண்ணம் நிகழ்ந்தவண்ணம்; இனி இந்த உலகுக்கெல்லாம்
உய்வண்ணமின்றி மற்ரேர்துயர் வண்ணமுறுவ துண்டோ
மெய்வண்ணத் தாக்கிபோரில் மழைவண்ணத் தண்ணலே! உன்
கைவண்ண மங்குகண்டேன் கால்வண்ண மிங்குகண்டேன்."

இந்த ப்ரதிஷ்டாபத்திரத்தில் ஒரு விசேஷமுமுண்டு. உலகத்தில் ஸாதாரணமாய் கையால் தானம் செய்து ப்ரீதியைக் காட்டுவதும் காலால் உதைத்து நிக்ரஹம் செய்து அப்ரீதியைக் காட்டுவதும் ஸஹஜம். ஸ்ரீராகவனே கையாலே நிக்ரஹம் செய்து காலினல் அனுக்ரஹம் செய்தார். இதுவே

அவதாராரம்பத்தில் பரம புருஷ ஸூசகத்தைக் காட்டுகிறது. ஸ்ரீராமாவதாரத்திலும் கிருஷ்ணாவதாரத்திலும் முதல் நிக்ரஹமும் முதல் அனுக்ரஹமும் ஸ்த்ரீகள் விஷயமாகவே, (தாடகா பூதனை நிக்ரஹமும்—அஹல்யா கோபிகாகாஸ்த்ரீகளுடைய அனுக்ரஹமும்). ஸாதாரணமாய் ஸ்த்ரீ வதம் பாபஜநகமா யிருந்தபோதிலும் அத்யுத்கடமான பாபங்களைச் செய்தால் ஸ்த்ரீகளானாலும் வத்ய கோஷ்டியிற் சேர்ந்தவர்களென்று இதனால் நிதர்சிக்கப்படுகிறது.

ஸ்ரீராமஸுப்ரபாதம்.

कौसल्यासुप्रजा राम पूर्वा सन्ध्या प्रवर्तते ।
उत्तिष्ठ नरशार्दूल कर्तव्यं दैवमाह्निकम् ॥

(1) **कौसल्या सुप्रजाः,** லோகத்தில் ஸாதாரணமாக ஒருவருடைய பெயரைச் சொல்லும் காலத்தில் சொல்லுகிறவர் புருஷனாக இருக்கும் பக்ஷத்தில் தகப்பனுடைய பெயரையே சொல்லி அவனுடைய குமாரனென்றும் வக்தா ஸ்திரீயாக இருக்கும் பக்ஷத்தில் தாயின் பெயரைச் சொல்லி அவளுடைய குமாரனென்றும் சொல்வது வழக்கம். இந்த ப்ரகரணத்தில் விச்வாமித்ர மஹரிஷி ஸ்ரீராமனை எழுப்பும் காலத்தில் **दाशरथे,** என்று கூப்பிடுவது பொருத்தமாகவும் கௌஸல்யாஸுப்ரஜா: என்று சொல்வது கொஞ்சம் அலௌகிகமாகவும் தோன்றலாம். ஆனால் இது விஷயம் பர்யாலோசனை செய்தால் விச்வாமித்ர ப்ரம்மரிஷி சொன்னது தர்மலௌகிக சம்மதமேயாகும். முதலில் சக்ரவர்த்தியின் ஸன்னிதானத்திற்கு ப்ரம்மரிஷி போகும் காலத்தில் இவர் கேட்பதற்கு முன்னாலேயே **किं च ते परमं कामं करोमि किमु हर्षितः,** என்றும் **कर्ता चाहमशेषेण दैवतं हि भवान् मम,** என்றும் வ்யக்தமாய்ச் சொல்லிவிட்டு, அதன்மேல் ப்ரம்மரிஷி ரகுநந்தனனைத் தனக்கு ஸஹாயமாக அனுப்பும்படி ப்ரார்த்திக்கும் காலத்தில் **न रामं नेतुमर्हसि,** என்றும் **नैव दास्यामि पुत्रकम्,** என்றும் சக்ரவர்த்தி பதில்

கூறினார். இப்படி விச்வாமித்ர தசரத ஸம்வாதத்தை அருகாமையிலிருந்து செவியுற்ற கௌஸல்யை कृतस्वस्त्ययनं मात्रा पित्रा दशरथेन च என்கிறபடி ஒருவித அப்யந்தர மல்லாமலே ராகவனுக்கு மங்களாசாஸனம் செய்து விச்வாமித்ர ப்ரம்ம ரிஷிக்குக் கைங்கர்யம் செய்யும்படி அவர் பின்னால் அனுப்பி விட்டாள். தனக்கு ஏகபுத்ரனாக இருந்தும் தாயாரான கௌஸல்யா தேவியார் ராகவனை வனமனுப்ப முன்வந்த படியாலும், தசரத சக்ரவர்த்தி தன் விஷயத்தில் நான்கு புத்ரர்கள் இருந்தும் அவர்களில் ஒருவனான ராமனைக் கொடுக்க முதலில் சம்மதியாமல் ப்ரதிக்ஞா பங்கம் செய்தபடியாலும், தான் வஸிஷ்டாசாரியரின் சிஷ்யனாகவிருந்து படிப்பில் எவ்வளவு ஏற்றத்தை உடையவராக இருந்தபோதிலும், பக்தியும் பாரமார்த்திக ஜ்ஞானமும் கேவலம் கௌஸல்யா தேவியினிடத்தில் விசேஷமாய்க் குடி கொண்டது என்று எண்ணி விச்வாமித்ர பிரம்மரிஷி புண்ய காலமான ஸந்த்யா காலத்தில் உத்தமியான கௌஸல்யா தேவியை நினைப்பது நியாயமே தவிர தசரத ஸ்மரணமும் வருவது அவ்வளவு யுக்தமில்லை யென்று திருவுள்ளங்கொண்டாற்போல் "தாஸரதே" என்று சொல்லாமல் "கௌஸல்யா ஸுப்ரஜா:" என்று சொல்லுகிறார்.

(2) राम, 'ரமயதீதி ராம:' (ஸர்வஜன ரஞ்ஜகன்) என்றும் 'ரமந்தே யோகிந: யஸ்மிந்நிதி ராம:' (யோகிகளுக்கு உபாயமும் உபேயமுமானவன்) என்றும் ஸமாஸம். ஆகையாலே விச்வாமித்ர பிரம்மரிஷி அனேகமாயிர வருஷங்களாய் தவம் செய்து தான் ஸித்தியடைந்ததற்குப் பலம் ராம குணானுபவமே. தன்னுடைய தேஹாவஸானத்தில் பகவானு

டைய நித்யவிபூதியை அனுபவிப்பதைக்காட்டிலும் விசேஷமாக இக்தக் கர்மபூமியிலேயே பகவானுடைய வைபவத்தை ஏகாக்ரசித்தராய் தான் அனுபவித்து, பகவானுடைய யோகநித்ரையையும் விபவத்தில் திருமகனுரின் சயனேத்ஸவ வைபவத்தையும் ஸாத்ரிச்யம் கொண்டு ப்ரம்மரிஷி உஷ:காலத்தில் ராமகுணுநுபவம் செய்கிருர் என்பது கருத்து.

(3) **पूर्वा सन्ध्या प्रवर्तते**, எப்படியானுல் லோகோபத்ரவம் செய்கிற திருடர்களும் ரஜனீசரர்களான ராக்ஷஸர்களும் சூர்யோதயமான பிறகு அவர்களுடைய க்ரூரச் செயல்களை நிறுத்திக் கொள்வார்களோ, அதே மாதிரி பூர்வ ஸந்த்யைபோல் அவதரித்த மஹாபுருஷன் படுக்கையிலிருந்து எழுந்தவுடனே ராக்ஷஸாதிகளின் கொழுப்பு அடங்குவதுமல்லாமல் அஜ்ஞானந்தகாரத்தில் முழுகின அனந்தகோடி சேதனர்களும் பகவானுடைய ஜ்ஞான வைராக்யானுஷ்டானங்களாலேயே ஜ்ஞானேதயமுண்டாகி பகவத்கருணைக்குப் பாத்ரமாவார்களென்று விளங்குகிறது.

(4) **उत्तिष्ठ नरशार्दूल**, க்ஷீராப்தியில் நீர் யோகநித்ரையில் இருந்தபோதிலும் விபவத்தில் **आत्मानं मानुषं मन्ये** என்று திருவுள்ளப்படுகிறபடியால் லோகஸங்க்ரஹார்த்தம் அருணேதயத்திற்கு முன்பாகவே எழுந்திருப்பது சாஸ்த்ர ஸம்மதமேயாகும். பதினுரடி வேங்கைப்புலி தூங்குங் காலத்தில் காட்டிலுள்ள முயல் முதலிய சிறிய மிருகங்கள் யதேஷ்டமாய் ஓடியாடும். ஆனுல் அந்தப் புலி விழித்து எழுந்தவுடனே இந்த சிறு மிருகங்கள் கண்ணுக்ககப்படா

மல் ஓடி ஒளியும், இல்லையேல் புலிக்கு இரையாய்விடும். அதுபோல் ராகவா! நீர் இந்த வனத்தில் தூங்கும் காலத்தில் ஓடியாடுகிற தாடகை, சுபாகு, மாரீசன் முதலிய குள்ள நரிகள் போன்ற அரக்கர்கள் நீர் எழுந்த உடனே சிலர் ஓடுவர், சிலர் மாளுவர் என்று கருத்து.

(5) **कर्तव्यं दैवमाह्निकम्**, நீர் விராட்புருஷனாக இருந்த போதிலும் மனுஷ்யாவதாரத்தில் ஸந்த்யா காலத்தில் ஸந்த்யாவந்தன ஜபஹோமாதிகளைச் செய்வது லோக ஸங்க்ரஹத்திற்காக யுக்தமேயாகும். இந்த வாக்கியத்தில் விசேஷார்த்தமும் ஸூசிதமாகிறது. 'கர்த்தவ்யம்' என்கிற க்ரியாபதத்திற்கு, 'செய்யவேண்டும்' என்று அர்த்தம். யார் செய்யவேண்டும் என்று விசாரம் செய்தால் 'த்வயா கர்த்தவ்யம்' என்பது ஸாமான்யார்த்தமும், 'மயா கர்த்தவ்யம்' என்பது விசேஷார்த்தமுமாக த்வனிக்கிறது. அனேக வருஷகாலங்களாய் தான் தபஸ் செய்து அதனுடைய பல ப்ராப்திகாலம் ராமகடாக்ஷத்தினால் வந்துவிட்டதென்றும், தான் செய்யவேண்டிய நித்யகர்மானுஷ்டான ஜபஹோமங்களை பகவத்ஸன்னிதானத்திலே நேருக்கு நேராகவே பகவதர்ப்பணம் செய்து அதனால் தான் க்ருதார்த்தனாக வேண்டுமென்றும் ப்ரம்மரிஷியின் வாஸ்தவமான கருத்தென்பதை இதனால் தெரிந்துகொள்ளலாம்.

[6]

மஹாராஜன வாக்யமும் ஸ்ரீராமனின் பரத்வமும்.

इच्छामो हि महाबाहुं रघुवीरं महाबलम् ।
गजेन महता यान्तं रामं छत्रावृताननम् ॥

ஸ்ரீராமனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்யவேண்டுமென்று சக்ரவர்த்தி திருவுள்ளம் கொண்டு மஹாஜனங்களுடைய அபிப்ராயத்தையும் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற அபிலாஷையினால் தன்னரண்மனைக்கு எல்லோரையும் வரவழைத்து ஸபைகூட்டி ஸ்ரீராமனுக்கு முடி சூட்டும் விஷயத்தில் அவரவர்கள் அபிப்ராயத்தை ஸங்கோசமில்லாமல் வெளிப்படையாய்ச் சொல்லவேண்டுமென்று விநயத்துடன் கேட்க, அப்போது அவர்களெல்லோரும் ஏகாபிப்ராயமாய் மேற்கூறிய ச்லோகப்படி தங்கள் உள்ளத்தை வெளியிட்டார்கள். அதாவது, "ஆஜாநுபாஹுவாயும், ரகுகுலதிலகனுயும், மஹாபலசாலியாயுமுள்ள ஸ்ரீராமனை (பட்டாபிஷேகத்திற்குப் பூர்வாங்கமாக) பட்டத்துப் பெரிய யானையின் பேரில் எழுந்தருளப்பண்ணி, திருமுக மண்டலத்தை வெண்குடையால் மறைத்துத் திருவீதி ப்ரதக்ஷிணம் செய்யும்போது நாங்கள் எங்கள் மனமாறச் சேவிக்கவேணுமாய் ஆசைப்படுகிறோம்" என்றார்கள். ஆனால் மேற்கூறிய ச்லோகம் மஹாஜனங்கள் திருவாய்மலர்ந்தருளினதாகையால் இதில் ஸ்ரீராமனின் பரத்வமும் த்வனிக்கிறது. "அஹிமஹாபாஹும்" என்று பதவிபாகம் செய்யவேண்டியது.

(1) अहिमहाबाहुं—अहौ महाबाहुः यस्य तं—शेषशायिनमित्यर्थः ।

(2) रघुवीरं—" रघि गतौ," " गत्यर्थकानां ज्ञानार्थकत्वं " रघुः ज्ञानीत्यर्थः, विना पक्षिविशेषेण, गरुडेनेति यावत्, ईर्ते गच्छति इति वीरः, रघुश्चासौ वीरश्च रघुवीरः तं ।

(3) महाबलम्—महती अबला यस्य तं—लक्ष्मीकान्तं ।

(4) रामं—रमन्ते योगिनः यस्मिन्निति रामः तं ।

(தாத்பர்யம்) "நித்ய விபூதியில் சேஷசாயியாயும், ஸர்வஜ்ஞனையும், ஸ்ரீய: பதியாயும், யோகிகளுக்கு த்யேய வஸ்துவுமான ஸ்ரீராமனை விபவத்தில் கஜாரூடனாய் "அதிஸ்நேஹ: பாபசங்கீ" என்றபடியே எங்கள் த்ருஷ்டிதோஷம் வாராதபடி குடையால் மறைக்கப்பட்ட திருமுகமண்டலத்தோடே நாங்கள் மனமாறச் சேவிக்க ஆசைப்படுகிறோம்" என்று கருத்து. அநேகமாய் இந்த ஐதிஹ்யத்தைக் கொண்டே நாளைக்கும் ஸ்ரீ காஞ்சி மகாநகரில் பேரருளாளன் கருடோத்சவத்தில் உஷ: காலத்தில் ஸன்னதியின் கோபுரவாசலில், கோடிக்கணக்கான ஜனங்கள் முதல் நாள் ராத்திரிமுதல் பெருமாளுடைய கோபுரவாசல் சேவைக்குக் காத்துக்கொண்டிருக்கும்போது, பகவானுடைய திருமுக மண்டலம் வெண்குடைகளால் மறைக்கப்பட்டு சேவையாகிறது.

ஸௌமங்கலிகளின் ஆபரணங்கள்.

ஸநாதன தர்மானுஷ்டானம் செய்யும் நம்முடைய பரதகண்டத்திலுள்ள ஸௌமங்கலிகள் தரிக்கும்படியான ஆபரணங்களை வால்மீகிபகவான் மூவகையாகப் பிரித்திருக்கிறார்.

(1) போகாபரணங்கள்—அதாவது உற்சவ காலங்களிலேயும், பர்த்தாவுடன் கூடவிருந்து இல்லற வாழ்க்கையை நடத்திவரும் காலங்களிலேயும், இன்னும் மற்ற விசேஷதினங்களிலே ஸௌகானுபவம் பண்ணும் காலங்களிலேயும், தங்களுக்குண்டான விலையுயர்ந்த ஆபரணங்களையெல்லாம் ஸௌமங்கலிகள் தரித்துக்கொள்வது லோக வழக்கம். இவைகள் போகாபரணங்கள்.

(2) மங்களாபரணங்கள்—பர்த்தாவின் பிரிவினையையடைந்து போகங்களை வெறுத்து தாங்கள் துயரப்படும் காலத்தில் ஸௌமங்கல்யத்தைக் குறிக்க எவ்வளவு மாத்திரம் அவசியமோ அவ்வளவு மட்டும் ஆபரணங்களை உத்தமிகள் தரிப்பார்கள். இவை மங்களாபரணங்கள்.

(3) விவாஹ முகூர்த்தாபரணங்கள்—கல்யாணகாலத்தில் சுபமுகூர்த்தத்தில் தங்கள் மாமனாரிலேயோ "கன்யாம் கனகஸம்பன்னாம்" என்று மந்த்ரோச்சாரணம்

செய்து பிதாவினாலேயோ கொடுக்கப்பட்ட ஆபரணங்கள் விவாஹ முகூர்த்தாபரணங்கள் எனப்படும். திருமங்கல்யம், அங்குளீயகம் முதலானவை இந்த வகுப்பில் சேரும்.

ஸ்ரீராம பட்டாபிஷேக விருத்தாந்தத்தைத் தெரிவிப்பதற்காக தசரதசக்ரவர்த்தி கைகேயியின் அந்தப்புரம் செல்ல அவள் தலைவிரி கோலமாய் கோபகிருஹத்திலிருப்பதைக் கண்டார். தவிர—

अनेकशतसाहस्रं मुक्ताहारं वराङ्गना ।
अवमुच्य वरार्हाणि शुभान्याभरणानि च ॥

என்றபடியே தான் தரித்திருந்த ஸகலாபரணங்களையும் கழற்றி எறிந்திருப்பதையும் கண்டார். தான் அந்த காலத்தில் ஸுமங்கலியாயிருந்தபோதிலும் இரண்டொரு தினத்தில் தனக்கு ஏற்படப்போகிற வைதவ்யத்தின் ஸூசகமாகத் தன்னுடைய மங்களாபரணங்களையும் கழற்றிவிட்டாள். மேற்கூறிய ச்லோகத்தால் ஸுமங்கலிகளின் ஆபரணங்கள் மூவகையென்று ஏற்படுகிறது. 'வரார்ஹாணி' என்பதால் முதல் வகுப்பும் 'சுபாநி' என்பதால் இரண்டாம் வகுப்பும் 'ச' காரத்தால் மூன்றாம் வகுப்பும் நிதர்சிக்கப்படுகிறது. இப்படி உள்ளடக்கமாகச் சொன்னதை பகவான் வால்மீகி ஸ்ரீ சுந்தர காண்டத்தில் வெளிப்படையாயருளிச் செய்கிறார். ஸ்ரீராமதூதனான ஹனுமார் சிம்சபாவிருக்ஷத்தின் மேலிருந்து முதல் முதல் ஸீதாதேவியைச் சேவிக்கும்போது, தேவியார் அடியிற் சொன்ன அவஸ்தாவிசேஷத்திலிருப்பதைக் கண்ணால் கண்டார்.

वैदेह्या यानि चाङ्गेषु तदा रामोऽन्वकीर्तयत् ।
तान्याभरणजालानि शाखाशोभीन्यलक्षयत् ॥
सुकृतौ कर्णवेष्टौ च श्वदंष्ट्रौ च सुसंस्थितौ ।
मणिविद्रुमचित्राणि हस्तेष्वाभरणानि च ॥

முதல் ச்லோகத்தில் கூறிய ஆபரணங்களைத் பர்த்தாவின் பிரிவினை காலத்தில் தேவியார் ஒதுக்கி விட்டபடியால் அவைகளை போகாபரணங்களென்று சொல்லலாம்.

இரண்டாவது ச்லோகத்தில் விவரித்துச் சொன்ன மூன்று திருவாபரணங்களை (அதாவது தோடு, கெசை அல்லது மாட்டல், கைவளையல்) தன் திருமேனியில் தரித்துக் கொண்டிருந்தபடியால் அவைகள் பர்த்தாவின் க்ஷேமத்தை உத்தேசித்து ஸுமங்கலிகள் எக்காலத்திலும் சரீரத்தை விட்டுப்பிரியாமல் தரிக்கத்தகுந்த மங்களாபரணங்களென்று ஏற்படுகிறது.

एष चूडामणिः श्रीमान् मया सुपरिरक्षितः ।

என்ற ச்லோகத்திலும் சூடாமணி வைபவத்தை வர்ணிக்கும் பின் ச்லோகங்களாலேயும் கன்யகாதான காலத்தில் மந்த்ரப்ரயுக்தமாய்க் கொடுத்த ஆபரணங்களுக்கு அதிக ஏற்றமென்று ஏற்படுகிறது. அது காரணம் கொண்டே புருஷோத்தமனும் தன்னுடைய ஸர்வஸ்வத்தை யாத்ரா தானம் செய்து மறையுரி க்ருஷ்ணாஜினம் தரித்து தண்டகம் போகும் காலத்திலேயும் தன்னுடைய திருக்கல்யாணத்தில் மாமனாரினால் தனக்கு ஸம்பாவனை செய்யப்பட்ட

கணையாழியை மாத்திரம் தன்னுடன் கொண்டுவந்தாரென்பது ஸுவ்யக்தமாய்த் தெரிகிறது.

ஆகையால் மேற்கூறிய அயோத்யா காண்ட ஸுந்தர காண்ட ச்லோகங்களை ஸமன்வயம் செய்துபார்த்தால் ஸுமங்கலிகள் தரிக்கும் நகைகளை பகவான் வால்மீகி மூவகையாக விபாகம் செய்தாரென்று ஸப்ரமாணமாய்ச் சொல்லலாம்.

[8]

ஸுமந்த்ரனின் ஸூக்ஷ்மஜ்ஞானம்

ஸ்ரீராமபிரான் தாம் புருஷோத்தமன் என்பதை ஸ்ரீமத் ராமாயணத்தில் எங்கும் வெளிப்படையாய் அருளிச்செய்ய வில்லை. தவிர आत्मानं मानुषं मन्ये रामं दशरथात्मजं என்று தாம் மனுஷ்யனென்றே கண்டோக்தியாய் வெளியிட்டார். விச்வாமித்ர ப்ரஹ்மரிஷியும், மாரீசன், அகம்பனன், மால்ய வான், தாரை முதலானவர்களும் மஹாத்மாவென்றும் அதி மாநுஷன் என்றும் சொன்னார்களே தவிர, ஸ்ரீமத்ராமா யணத்தில் ப்ரஹ்மஸ்துதியை நீங்கலாக வேறு ஓரிடத்திலும் ஸீதாகாந்தனை ஸர்வேச்வரன் என்று சொல்லவில்லை. சத்ரு வும், சத்ருபத்னியான மந்தோதரியும் तं मन्ये राघवं वीरं नारायणमनामयं என்றும் व्यक्तमेष महायोगी परमात्मा सनातनः என்றும் சொன்னது காரணாந்தரங்களைக்கொண்டு ஸ்ரீராம பிரானுடைய பரதத்வத்தை ஊஹித்தார்களத்தனை. அவ் வளவிலும்கூட ஸப்ரமாணமாய் ஸ்ரீராகவனுடைய பர தத்வத்தை வேறு ஒருவரும் தெரிந்துகொண்டார்களில்லை. ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினாலேயும், ஆப்தவாக்யத்தினாலேயும், அநுமானத்தினாலேயும் ஸ்ரீராமனின் பரதத்வநிரூபணம் செய்தவர் ஸுமந்த்ரர் ஒருவரே. பாலகாண்டத்தில் ரிஷ்ய ச்ருங்கரைக்கொண்டு புத்ரகாமேஷ்டியைச் செய்வதற்காக வஸிஷ்டாசாரியர் ஸங்கல்பித்தபோது சக்ரவர்த்தியாரிடம் ஸுமந்த்ரன் ஒரு தேவரகஸ்யத்தைச் சொன்னார். அதாவது,

सनत्कुमारो भगवान् पूर्वं कथितवान् कथाम्।
ऋषीणां सन्निधौ राजन् तव पुत्रागमं प्रति ॥

ப்ரஹ்மஸபையில் ஸநகாதி மகரிஷிகளினுலே ரஹஸ்யமாய்ச் சொல்லப்பட்ட ராமாவதார ரகஸ்யத்தை நன்கறிந்த ஸுமந்த்ரன் இந்த கர்மபூமியில் ஜனித்து ஸாமான்ய வ்ருத்தியான ஸாரத்யம் செய்தது எப்படி ஸம்பாவிதமாகும்? பூர்வோக்தர விஷயங்களை ஸமந்வயம் செய்தால் நித்ய முக்த பத்தர்களான ஜீவாத்மகோடியில் ஸுமந்த்ரன் நித்யரோ, அல்லது முக்தரோவாகவேண்டுமேயன்றி பத்தரில்லை. ஆனுல் பகவந்நியமனத்தாலேயோ ஸ்ரீ ராகவனுடைய விபவாவதார மஹோத்ஸவத்தை தான் கண்டு களிக்க வேண்டுமென்ற திருவுள்ளத்தாலேயோ இந்த கர்ம பூமியில் கர்மாதீனமான சரீரமில்லாமல், ஸ்ரீ ராமாவதாரத்திற்கு முன்னுலேயே ஸ்வேச்சாசரீரமெடுத்து தசரதாதிகளுக்கு ஊழியம் செய்து ஸ்ரீராகவனுடைய ஸேவையை அஸாதாரணபாத்யத்துடன் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலேயும் அடைய வேண்டுமென்ற திருவுள்ளத்துடன் அதற் கனுகுணமான வ்ருத்தியை தான் ஏற்றுக்கொண்டார். இந்த அபிப்ராயத்தை நன்கு அறிந்த ஸீதாகாந்தனும் பட்டாபிஷேகத்திற்கு முன்னதாக சக்ரவர்த்தியாரின் நியமனத்தின்பேரில் தம்மை அழைத்துப் போவதற்காக ஸுமந்த்ரர் வரும்போது தம்முடைய நித்யவிபூதி ஸேவையை லீலாவிபூதியிலேயே ஸுமந்த்ரனுக்கு அநுக்கிரகித்தார்.

तं वैश्रवणसंकाशं उपविष्टं स्वलंकृतम् ।
ददर्श सूतः पर्यङ्के सौवर्णे सोत्तरच्छदे ॥

वराहरुधिराभेण शुचिना च सुगन्धिना ।
अनुलिप्तं परार्ध्येन चन्दनेन परंतपम् ॥

स्थितया पार्श्वतश्चापि वालव्यजनहस्तया ।
उपेतं सीतया भूयः चित्रया शशिनं यथा ॥

तं तपन्तमिवादित्यं उपपन्नं स्वतेजसा ।
ववन्दे वरदं वन्दी विनयज्ञो विनीतवत् ॥

இப்படி அந்யாத்ருசமாயும் யோகிகளுக்கும் அலப்யமாயுமுள்ள பகவானின் முன்ஸேவை ஸுமந்த்ரனுக்குக் கிடைத்தது. ஸ்ரீ ராமபிரான் ஸுமந்த்ரனால் ஓட்டப்பட்ட தேரிலிருந்திறங்கி சக்ரவர்த்தியாரின் திருமாளிகை செல்லும் போது ஸுமந்த்ரனும் ஏகாந்தமாய் கைகூப்பிக்கொண்டு ஸ்ரீராகவனின் பின் ஸேவையையும் நன்ருக ஸேவித்து ஆநந்தபரிதரானர் என்பது அடியில் கண்ட வால்மீகி வாக்யத்தினால் வ்யக்தமாகின்றது.

अवतार्य सुमन्त्रस्तं राघवं स्यन्दनोत्तमात् ।
पितुस्समीपं गच्छन्तं प्राञ्जलिः पृष्ठतोऽन्वगात् ॥

அகார உகார மகாரஸ்வரூபிகளான திவ்யதம்பதிகளும் இளையபெருமாளும், பித்ருவாக்யபரிபாலனர்த்தமாக தண்டகாரண்யம் எழுந்தருளும்போது அயோத்தியில் ஆபால கோபாலர்கள் புரண்டுருண்டு அழும்போது ஸுமந்த்ரனுடைய அழுகைக்கு மாத்திரம் வால்மீகி பகவான் 'सुमन्त्रोऽपि जगाम मूर्च्छाम्' என்று ஸர்வப்ராதான்யம் கொடுத்தார்.

தாத்பர்யம்: ஸ்ரீராமாவதார ரகஸ்யத்தை ப்ரமாணபூர்வகமாக நன்றாயறிந்தவரும் ஸ்ரீராமபிரானுடைய விபவாவதாரத்தின் ஸேவைக்காகவே நெடுநாளாகக் காத்திருந்த ப்ரஹ்மஞானியான ஸுமந்த்ரனும் சரண்யனுடைய திவ்ய மங்கள விக்கிரகத்தின் விச்லேஷத்தை ஸகிக்க முடியாமல் மூர்ச்சையடைந்தாரென்பது கருத்து. இப்படி மேற்சொன்ன விஷயவாக்யங்களால் ஸ்ரீராமாவதார ரஹஸ்ய ஸூக்ஷ்மஜ்ஞானமுள்ளவர் ஸுமந்த்ரனொருவரே யென்று த்ருடமாய்ச் சொல்லலாம்.

தேவாலயங்கள்

இந்தியாவில் தேவாலயங்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன் தான் ஏற்பட்டனவென்றும் ராமாயண காலத்திலில்லையென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இதனடியில் கண்ட ஸ்ரீமத்ராமாயண வாக்கியங்களினால் ஸ்ரீ ராமாவதார காலத்திற்கு முன்னமேயே அநேக தேவாலயங்களிருந்தன வென்பது ஸுஸ்பஷ்டமாய் விளங்கும்.

(1) "सह पत्न्या विशालाक्ष्या नारायणमुपागमत् ।"
"श्रीमत्यायतने विष्णोः शिश्ये नरवरात्मजः ॥"

பட்டாபிஷேகத்திற்குப் பூர்வாங்கமாக ஆசார்யநியமனம் கொண்டு ஸ்ரீராகவன் ஸீதாஸமேதனாய் ஸ்ரீமந்நாராயணனை விஷ்ணுவாலயம் சென்று உபவாஸமிருந்து பகவத் த்யானம் செய்தார்.

(2) सिताभ्रशिखराभेषु देवतायतनेषु च ।

பட்டணத்து மகாஜனங்களெல்லோரும் ஸ்ரீராம பட்டாபிஷேக மஹோத்ஸவத்தைக் கொண்டாடுவதற்காக எல்லா தேவாலயங்களிலேயும் ஜயக்கொடிகளை நாட்டி மங்கள வாத்திய கோஷங்களைச் செய்தார்கள்.

(3) देवागाराणि शून्यानि न चाभान्ति यथापुरम् ।
देवायतनचैत्येषु दीनाः पक्षिगणास्तथा ॥

ஸ்ரீராம வனவாஸானந்தரம் பரதாழ்வான் ஆசார்யநியமனம்கொண்டு கேகயதேசத்திலிருந்து ஸ்ரீமதயோத்யா பட்டணம் எழுந்தருளும்போது திருவயோத்தியிலுள்ள ஸமஸ்த தேவாலயங்களிலும் புஷ்பாலங்கார வாத்தியகோஷ

மில்லாமையையும், திருவாராதனமில்லாமையையும், ஆலயங்களிலுள்ள மாடப்புறா முதலிய பக்ஷிக் கூட்டங்களெல்லாம் ரொம்ப தைன்ய ஸ்திதியிலிருப்பதையும் கண்ணால் கண்டார்.

(4) देवस्थानैः प्रपाभिश्च तटाकैश्चोपशोभितः ।

'கச்சித்' ஸர்க்கத்தில், அநேக தேவாலயங்கள், தடாக நடவாபிகள் நிறைந்த ஸ்ரீமதயோத்யா பட்டணம் க்ஷேமமாவென்று ஸ்ரீராமபிரான் பரதாழ்வானைக் கேட்கிறார்.

(5) दैवतानि च सर्वाणि चैत्यानि नगरस्य च ।
सुगन्धमाल्यैर्वादित्रैरर्चन्तु शुचयो नराः ॥

ஸ்ரீராமாகமன க்ஷேம ஸமாசாரத்தை ஹநுமான் பரதாழ்வானுக்கு விஜ்ஞாபனம் செய்யும்போது நகரத்திலுள்ள எல்லா தேவதைகளையும் சைத்தியங்களையும் சுகந்த புஷ்பமாலைகளாலேயலங்கரித்து பெரியோர்களைக்கொண்டு தேவார்ச்சனை செய்ய வேண்டியதென்று பரதாழ்வான் கட்டளையிட்டார்.

(6) चैत्यं निकुम्भिलां नाम यत्र होमं करिष्यति ।

இந்தரஜித் இரண்டாவது தடவை லக்ஷ்மணன் பேரில் பிரம்மாஸ்த்ரத்தை உபயோகிக்கப்பதற்கு பூர்வாங்கமாய், நிகும்பிலை என்ற ஒரு கோயிலுக்குப் போய் அங்கே ஒரு யாகம் செய்யத் தொடங்கினான்.

இப்படி மேற்சொன்ன வால்மீகி மஹரிஷியின் அநேக ஸ்ரீஸூக்திகளாலே அநாதி காலமாய் பரதகண்டத்திலேயும் லங்கையிலேயும் தேவாலயங்களிருந்தனவென்று எதிர்த்தடையில்லாமல் ஸந்தேகமற ஏற்படுகிறது.

[10]

பகவத் பாகவதாபசாரங்கள்

பாபஜனகமான கார்யங்களை ஒருவரும் எக்காலத்திலேயும் புத்திபூர்வகமாக செய்யக்கூடாதென்பது ஸ்ரீமத் ராமாயணத்தின் முக்கியமான ஸாராம்சம். இதை அநேகவிடங்களில் பகவான் வால்மீகி வெளிப்படையாகவும் உட்கருத்தாகவும் உபமானோபமேய ரூபங்களாகவும் அறிவித்திருக்கிறார். விசேஷமாய் यस्यार्योऽनुमते गतः, என்னும் ஸர்க்கத்தில் பரதாழ்வான் கௌஸல்யா தேவியாரின் முன்பாக, ஸாதாரணமாய் ப்ரபஞ்சத்தில் நடக்கும் அநேகவிதமான பாப கார்யங்களைச் சொல்லி, தன்னுடைய அனுமதியின் பேரில் ஸ்ரீராமன் காட்டிற்குச் சென்றிருக்கும் பக்ஷத்தில் மேற்கூறிய பாப ஸமூஹங்களைச் செய்த மஹாபாபிகளுக்கு எந்த துர்கதியோ அக்கதி தனக்குக் கிடைக்கக்கடவதென்று சபதம் செய்தார். இதனால் அவர் விவரித்த பாபங்களை ஒருவரும் செய்யக்கூடாதென்பது க்ரந்த கர்த்தாவின் திருவுள்ளம்.

ஸ்ரீமதாரண்ய காண்டத்தில் பிராட்டிக்கும் புருஷோத்தமனுக்கும் நடந்த ஸம்வாதத்தில் தேவியார் மற்ற பாபங்களை யெல்லாம் தள்ளிவிட்டு

त्रीण्येव व्यसनान्यत्र कामजानि भवन्त्युत

என்று ஆரம்பித்து மூன்றுவிதமான பாபங்களையே ஸ்ரீராம ஸன்னிதானத்தில் வற்புறுத்திச் சொல்லுகிறாள். இப்படி,

न कश्चिन्नापराध्यति லோகத்தில் பாபம் செய்யாதவர் ஒருவருமில்லை என்று திருவுள்ளம் பற்றின ஸீதாதேவியாருக்கும் துஸ்ஸஹமான பாபங்கள் மூன்றுண்டென்பது மேற்கூறிய ஸீதாவாக்யத்தினுல் ப்ராகாசமாகிறது

முன்னுரைத்த இருவகையான பாபஸமூஹங்கள் தவிர ரொம்பவும் முக்யமாக மஹாபாபங்கள் இரண்டுண்டென்பது வால்மீகி பகவானின் திருவுள்ளம். அதாவது, பகவத் ஸன்னிதானத்தில் பாகவதாபசாரப்படுவதும், பாகவதஸன்னிதானத்தில் பகவதபசாரப்படுவதும். இவைகளை அடியிற் சொன்ன வாக்கியங்களினுல் நிரூபித்து மனோ வாக் காயங்களினுல் செய்த பாபங்களுக்கு மனோ வாக் காயங்களினுலேயே ப்ராயச்சித்தமுண்டென்று அடியிற் கூறிய ச்லோகங்களாலேயே நிரூபணம் பண்ணுகிறுர்.

தாயாரான கைகேயியை பரதாழ்வான் பிரார்த்தித்து,

योमे भ्राता पिता बन्धुः यस्य दासोऽस्मि धीमतः ।
तस्य मां शीघ्रमाख्याहि रामस्याक्लिष्टकर्मणः ॥

என்னருமைத் தமையன் எங்கேயென்று கேழ்க்க, ஸ்ரீராகவன் ஸீதா சமேதனுய் தண்டக ப்ரவேசம் செய்தாரென்று அவள் பதில் சொல்ல, பரதன் துக்காக்ராந்தனுய் ஸ்ரீராம வனவாஸத்திற்குக் காரணம் தன் மாதாவேயென்று தெரிந்து அவளை நிந்தித்தார். பரதனுக்கு அதிக கோபம் வந்து விட்டதையும் அவன் ராஜ்யத்தை ஸ்வீகரிக்காததையும் கைகேயி தெரிந்துகொண்டு ஸ்ரீராமனே திரும்பி வந்து ராஜ்யத்தை ஏற்றுக் கொண்டால் தனக்குத் திருப்தி என்று நினைத்து, சித்திரகூடத்திற்கு ஸ்ரீராமனை எழுந்தருளப் பண்

ணுவதற்காக பரதாழ்வான் யாத்திரை செய்யும்போது முதன் முதல் அயோத்தியை விட்டுக் கூடப்புறப்பட்டது கைகேயியே.

कैकेयी च सुमित्रा च कौसल्या च यशस्विनी ।
रामानयनसंहृष्टाः ययुर्यानेन भास्वता ॥

ஜ்யேஷ்ட க்ரமத்தை உத்தேசித்தாலும் புத்திரவியோக காரணத்தை யோசித்தாலும் ராம மாதாவான கௌசல்யாதேவி முதலில் புறப்படவேண்டியிருக்க, கைகேயியே முன் புறப்பட்டாளென்பதற்காகவே பகவான் வால்மீகி புத்திபூர்வகமாக க்ரமமான ஆனுபூர்வியை மாற்றி 'கைகேயி' என்று ச்லோகத்தை ஆரம்பித்தார். ஸீதாகாந்தன் ஸ்ரீமதயோத்யா பட்டணத்திற்கு திரும்பி எழுந்தருளும் காலத்தில் **शिरस्यञ्जलिमाधाय कैकेय्यानन्दवर्धनः**, என்றபடியே முதன்முதல் பரதன் ஸ்ரீராமனுக்கு அஞ்ஜலி செய்து நல்வரவு கூறின விஷயத்தில் கைகேயிக்கு ஏற்கனவேயிருந்த ஸந்தோஷம் மேன்மேலும் விருத்தியாயிற்று. ஆகையால் பாகவதோத்தமனான பரத ஸன்னிதானத்தில் பகவானான ஸ்ரீராமன் விஷயத்தில் தான் முதலில் அபசாரப்பட்டு அந்த மஹாபாபத்திற்கு ப்ராயச்சித்தமாக அதே பாகவதோத்தமனுடன் தானே முதலில் சித்ரகூட யாத்ரைக்குப் புறப்பட்டு ராமாகமனத்தினாலுண்டான ஆனந்தத்தை தானே முதலில் அடைந்தபடியால், அந்த பாகவத ஸன்னிதானத்திலேயே பகவதபசாரம் செய்து பாப விமோசனமடைந்தாளென்பது கருத்து. இதேமாதிரியாக பகவானான ஸ்ரீராம ஸன்னிதானத்திலே இளையபெருமாள்

भरतस्य वधे दोषं नाहं पश्यामि राघव ।
पूर्वापकारी भरतः त्यक्तधर्मश्च राघव ॥

பரதனைக் கொல்லும் விஷயத்தில் பாபமொன்றுமில்லை என்று சொல்லி பரம பாகவதோத்தமனான பரதாழ்வான் விஷயத்திலே மஹாபசாரப்பட்டார். இது பெருமாள் விஷயத்தில் அத்யந்த பக்த்யதிசயத்தை காட்டினபோதிலும் மஹா பாபகரமான வார்த்தைகளை லக்ஷ்மணன் சொன்னபடியால் ரகுநந்தனன் अहं ह्यप्रियमुक्तः स्यां भरतस्याप्रिये कृते, 'பரதனைச் சொன்னது என்னைச் சொன்னமாதிரி' என்றுரைத்து அவன் திருவுள்ளம் சீறினபிறகு தான் செய்த அபசாரம் இளையபெருமாளுக்கு ஞாபகத்திற்கு வந்தது. இதை உத்தேசித்துத்தான் ஸ்ரீமதாரண்ய காண்டத்தில் ஸ்ரீராம ஸன்னிதானத்தில் லக்ஷ்மணன்

अस्मिंस्तु पुरुषव्याघ्रः काले दुःखसमन्वितः ।
तपश्चरति धर्मात्मा त्वद्भक्त्या भरतः पुरे ॥
पद्मपत्रेक्षणो वीरः श्यामो निरुदरो महान् ।
धर्मज्ञः सत्यवादी च ह्रीनिषेधो जितेन्द्रियः ॥
प्रियाभिभाषी मधुरो दीर्घबाहुररिन्दमः ।
संत्यज्य विविधान् भोगान् आर्यं सर्वात्मनाश्रितः ॥
जितः स्वर्गस्तव भ्रात्रा भरतेन महात्मना ॥

இத்யாதி வாக்கியங்களினாலே பரதனை ஸ்தோத்ரம் செய்ய பகவான் திருமுகமண்டலம் மலர்ந்து तामेवेक्ष्वाकुनाथस्य भर-

तस्य कथां कुरु, பரதனுடைய புண்யகதையையே சொல்லிக் கொண்டிருவென்று ஆனந்தபரிதராய் ஸ்ரீராகவன் நியமிக்க, பரதகதாம்ருதாஸ்வாதனத்தை வக்தாவும் ச்ரோதாவுமான ராமனும் லக்ஷ்மணனும் சேர்ந்து அனுபவிக்கிறார்கள்.

மற்றொரு ஸமயத்தில் ஸுமந்திரன் கங்காதீரந்தாண்டி அக்கரையில் ராம லக்ஷ்மணர்களைச் சேர்த்து ஸ்ரீமதயோத்யா நகரம் திரும்பும்பொழுது अहं तावन्महाराजे पितृत्वं नोपलक्षये (தசரதன் என் தகப்பனில்லை) என்று ஸ்ரீராம ஸன்னிதானத்திலேயே லக்ஷ்மணன் ஸுமந்திரரிடம் சொல்ல, அப்போது ராகவன் மனங்கலங்கினர். அதை அச்சமயத்தில் வெளியில் காட்டாமல் பிதாவின் நிர்யாண ஸமாசாரத்தை பரதாழ்வான் சித்ரகூடத்தில் தெரிவிக்கும்போது पित्रा हीनोऽसि लक्ष्मण உன் பிதா மரணமடைந்தார் 'मरणान्तानि वैराणि' (சாகும்வரைதான் த்வேஷம்) என்கிற ந்யாயத்தினால் இனி மேலாவது பிதாவைப் பழியாமல் இருப்பாயென்று சுட்டிக் காட்டினர் போலும். இதை மனதில் வைத்துக்கொண்டு தான், வீரகோதண்டபாணிகள் இருவரும் ரிச்யமுக பர்வதம் சென்று சுக்ரீவ சன்னிதானத்தில் இளையபெருமாள் சரணுகதி செய்யும் போது

राजा दशरथो नाम द्युतिमान् धर्मवत्सलः ।
चातुर्वर्ण्यं स्वधर्मेण नित्यमेवाभ्यपालयत् ॥
स च सर्वेषु भूतेषु पितामह इवापरः ।
अग्निष्टोमादिभिर्यज्ञैः इष्टवानाप्तदक्षिणैः ॥

என்று சக்ரவர்த்தியாரை ஸ்தோத்ரம் செய்து தான் அவரிடம் பட்ட அபசாரத்தைப் போக்கடித்தார். அதுவுமல்லா

மல் ஸ்ரீராகவனை ஸுக்ரீவனிடம் தெரிவிக்கும் காலத்தில், पिता यस्य पुरा ह्यासीत् शरण्यो धर्मवत्सलः, என்று மறுபடியும் சக்ரவர்த்தியாரைத் துதி செய்து, அப்படிப்பட்ட உத்தமனுடைய ஜ்யேஷ்ட குமாரன் ஸ்ரீராகவனென்று அருளினார். இப்படி பாகவத ஸன்னிதானத்தில் பகவதபசாரப்பட்ட கைகேயியும் பகவத் ஸன்னிதானத்தில் பாகவதாபசாரப் பட்ட லக்ஷ்மணனும் தத்ரூபமாகவே ப்ராயச்சித்தம் செய்து பாப விமோசனமடைந்து க்ருதார்த்தர்களாகி பகவத் க்ருபைக்குப் பாத்திரர்களானார்க ளென்பது மேற்கூறிய வ்ருத்தாந்தங்களினாலே தெரிகிறது.

[11]

பரதன் காட்டிய வழி

भरताय परं नमोऽस्तु तस्मै प्रथमोदाहरणाय भक्तिभाजाम् ।
यदुपज्ञमशेषतः पृथिव्यां प्रथितो राघवपादुकाप्रभावः ॥

(पादुकासहस्रम्)

ஸர்வ ஜகத்துக்கும் ஸ்வாமியான பகவானிடத்தில் தாஸனாயிருக்கும் ஆத்மா இருக்கவேண்டும் நிலையையும் அவன் அதனால் பெறும் பேற்றையும் ஸ்ரீராமனிடத்தில் நடந்துகொண்ட பரதனுடைய வ்ருத்தாந்தத்தைக்கொண்டு ஸ்ரீ வால்மீகி வ்யங்க்யமாகக் காண்பித்திருப்பதை இங்கே சுருக்கி வெளியிடுகிறேன்.

முதலில் ஸ்ரீராமனை விலக்கி ராஜ்யத்தைத் தனக்காக ஏற்படுத்தின தாயான கைகேயியை நிந்தித்ததிலிருந்து, சேஷனாயிருப்பவன் சேஷிக்காக ஸர்வத்தையும் உபயோகிக்கவேண்டியதே தவிரத் தனக்காக வைத்துக் கொள்வது கூடாதென்பதை பரதன் விளக்கினார். இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு தன்னை வனத்தில் ஸ்ரீராமனிடம் சேர்ப்பிக்கச் சொல்லும் கௌஸல்யாதேவியைப் பார்த்து—

कृता शास्त्रानुगा बुद्धिर्मा भूतस्य कदाचन ।
सत्यसन्धस्सतां श्रेष्ठो यस्यार्योऽनुमते गतः ॥ (2-75-20)

என்றவிதால் சேஷியான பகவானை விலக்கினால் அவனுக்கு சாஸ்திரத்தை யனுஸரித்து சரியான புத்தியிராதென்கிற

சாஸ்திரார்த்தம் தெரிந்தவன் பகவத் ஸம்பந்தத்தை விட மாட்டான் என்றறிவித்தார். இதற்குமேல் அனேக ச்லோகங்களாலே பகவானைவிட்டவனிடம் எல்லா பாபங்களும் குடி கொண்டிருக்குமென்று தெரிவித்தார். இப்படித் தெரிந்து பாபத்திற்கு பயந்து நடந்து வருகிறவனுக்கு ஸத்கதியுண் டென்பது கௌஸல்யாதேவியின்—

दिष्ट्या न चलितो धर्मादात्मा ते शुभलक्षणः ।
वत्स सत्यप्रतिज्ञो मे सतां लोकानवाप्स्यसि ॥ (2-76-62)

என்கிற ஆசீர்வாத வாக்யத்திலிருந்து வெளியாயிற்று. மோக்ஷம் போகவேண்டியவனுக்கு तस्य तावदेव चिरम् என்று சரீரபாதம் வரையில்தான் தாமதம் என்பதுபோல்இவருக்கு பிதாவான தசரதரின் உத்தர கைங்கர்யத்துக்கு வேண்டிய நாட்கள் மாத்திரமே ஸ்ரீ ராமனைப்பெறப் புறப்பட விளம்ப மாயிற்று.

अयोध्यामटवीं विद्धि என்கிறபடி ஸ்ரீராமன் எழுந்தருளி யிருந்த சித்ரகூடமே அப்போது அயோத்யை.

याऽयोध्येत्यपराजितेति विदिता नाकं परेण स्थिता

என்னப்பட்டது ஸ்ரீவைகுண்டம். அதைச் சேருவதற்கு எப் போதும் நித்ய சத்ருக்களான காமக்ரோதாதிகளை ஜயித்த வரான சத்ருக்னனோடும், பரிவாரத்தோடும் போக நினைத்த பரதனுக்கு கங்காநதி வரையில் செய்து வைத்த மார்க்கமே அர்ச்சிராதி மார்க்கம். இத்தால் அடையவேண்டிய சித்ர கூட ப்ரதேசம் வைகுண்டமென்பதை—

अतिमात्रमयं देशो मनोज्ञः प्रतिभाति मा ।
तापसानां निवासो यो व्यक्तं स्वर्गपथो यथा ॥ (2-94-18)

என்று ஸ்வர்க்க பதத்திற்கு முக்யப் பொருளான ஸ்ரீவைகுண்டத்தை திருஷ்டாந்தமாகக் காண்பிக்கும் வ்யாஜத்தினாலே மஹர்ஷி ஸூசித்தார்.

सुभगश्चित्रकूटोऽसौ गिरिराजोपमो गिरिः ।
यस्मिन् वसति काकुत्स्थः कुबेर इव नन्दने ॥

என்கிறவிடத்திலும் சித்திரகூடமானது 'असौ' அந்த ஸ்ரீவைகுண்டம் என்றர்த்தம். இப்படியுள்ளவிடத்தைப் போய்ச் சேருவதற்கு அர்ச்சிராதி மார்க்கத்திலே அமானவரென்று சொல்லப்பட்ட ஓர் ஆதிவாஹிகராக ஆனார் ஸ்ரீராமஸகாவான குஹர். விரஜாநதியைத் தாண்டுகிறமாதிரி கங்காநதியைத் தாண்டி அக்கரையிலுள்ள தேசமாகிய ஸ்ரீவைகுண்டத்திலே பரதன் ப்ரவேசித்தார். மோக்ஷத்திற்குப் போகும் அதிகாரியை ஸ்ரீவைகுண்டத்தில் ப்ரவேசித்தவுடன் शतं मालाहस्ताः शतमञ्जनहस्ताः என்றிப்படி அனேகம் பகவத் பரிஜனங்கள் மர்யாதையுடன் வரவேற்று ஸத்கரிப்பது போலுள்ளது இங்கே நடந்த பரத்வாஜாதித்யம். பரத்வாஜ மஹர்ஷி தம் தபோபலத்தாலே அனேக ஸ்திரீகளையும் புருஷர்களையும் பரிஜனங்களாக ஏற்படுத்திச் செய்த ஆதித்யத்தின் பெருமை வாசாமகோசரம். பகவானிடம் நெருங்கிச் செல்லும்போது பரதன் மொழிந்த நாலு ச்லோகங்களை நன்று நோக்கினால் அவர் மோக்ஷத்திலுள்ள ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம் என்னும்

பேதங்களைத் தாம் விரும்பினதாகவேற்படுகிறது. எப்படி யென்னில்—

यावन्न रामं द्रक्ष्यामि लक्ष्मणं वा महाबलम् ।
वैदेहीं वा महाभागां न मे शान्तिर्भविष्यति ॥ (2-98-6)

यावन्न चन्द्रसंकाशं द्रक्ष्यामि शुभमाननम् ।
भ्रातुः पद्मपलाशाक्षं न मे शांतिर्भविष्यति ॥ (2-98-7)

यावन्न चरणौ भ्रातुः पार्थिवव्यञ्जनान्वितौ ।
शिरसा धारयिष्यामि न मे शांतिर्भविष्यति ॥ (2-98-8)

यावन्न राज्ये राज्यार्हः पितृपैतामहे स्थितः ।
अभिषेकजलक्लिन्नो न मे शांतिर्भविष्यति ॥ (2-98-9)

என்கிற நாலு ச்லோகத்திலே முதலிலுள்ள இரண்டு ச்லோகங்களுக்கு அதிகமாக அர்த்தபேதமில்லை. அப்படியிருக்கும்போது தாத்பர்யத்தை யோசித்தால் ஸாலோக்யம், ஸாமீப்யம் என்றும் அம்சங்களை அபேக்ஷிப்பதாகத் தெரிகிறது. முதலில் ஆதிசேஷனையும் அவர் செய்யும் கைங்கர்யத்தைப் பெற்றுள்ள பிராட்டியையும் பெருமாளையும் பார்க்க வேணுமென்று ஸாலோக்யத்தைச் சொன்னார். ஒரு லோகத்திலிருந்தால்தானே ஒருவரை ஒருவர் பார்க்க முடியும்.

இரண்டாவது ச்லோகத்திலே சந்திரனைப் போன்ற ப்ரகாசமும், அழகும், ஆனந்தத்தைக் கொடுக்கும் ப்ரகாரமுமுடையதாய் செந்தாமரையிதழ் போன்ற திருக்கண்களை

யுடையதும் சுபமுமான ப்ராதாவின் திருமுகத்தைப் பார்க்க வேணுமென்றுவல் கொண்டிருப்பதை வெளியிட்டதிலிருந்து நெருங்கி யிருந்தாலொழிய இப்படி அவயவம் அவயவமாகத் திருமுகத்தையும் திருமேனியையும் ஸேவிக்க முடியாதாகை யாலே ஸாமீப்யம் கோரப்பட்டது.

மூன்றுவது ச்லோகத்திலே ஸ்ரீராமனுடைய திருவடியை சிரஸா வஹிக்கவேணு மென்று சொன்னதாலே வைகுண்டத்திலே சேஷபர்யங்கத்திலே எழுந்தருளியிருக்கும் பெருமாளுடைய திருவடியை சிரஸில் வஹிக்கும்படி அவ்வளவு அணுகி அவர் திருமேனி ஸம்பந்தத்தைப் பெறும் படிக்குத்தான் அடையவேண்டிய ஸாரூப்யத்தை—அதாவது அவரைப்போல் அழகிய சுத்தமான அப்ராகிருத சரீரத்தைப் பெற்றிருக்கவேண்டியிருப்பதைக் குறித்தார். ஸாரூப்யத்தை அடையாத வரையில் பகவானை ஸ்பர்சிக்க அதிகாரம் கிடைக்காது. திருவாராதன காலத்திலும் தான் தேவனுகி தேவனை ஆராதிக்கவேணுமென்று ப்ரமாண வசனம்.

நாலாவது ச்லோகத்திலே ஸ்ரீராமனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்து பார்க்கவாசைப்பட்டிருப்பதைச் சொன்னதால், தான் ஸாயுஜ்யத்தைப் பெற்ற பிறகுதான் இட்டவழக்காக பகவான் ஸ்வாதீனப்பட்டுத் தான் செய்யக்கோலிய கைங்கர்யங்களை யெல்லாம் அவர் ஸ்வீகரித்து ஸபரிவாரமாய் ஸர்வவிபூதியோடு அவர் அனுபவிக்கும் அனுபவத்தைக் கொடுத்துத் தன்னை ஆனந்தப்படுத்த வேணுமென்பதை விளக்கினர். அவர் பட்டாபிஷேகம் செய்து கொண்டு

போகத்தை அனுபவிக்காவிட்டால் இவருக்கு போக ஸாம்யமாகிற ஸாயுஜ்யம் கிடைக்காதன்றே.

பிறகு இவர் ஸ்ரீராமனுடைய பாதுகைகளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு திரும்பவும் அயோத்தியைக்கு வந்ததிலிருந்து பகவானுடைய நியமனத்தாலே அவருடைய ப்ரஜைகளைக் காப்பதற்கு முக்தர்கள் மீண்டும் இவ்வுலகம் வருவதுண்டு என்பதை வெளியிட்டார். தன்னேடு பரிவாரங்களையெல்லாம் அழைத்துச் சென்றதிலிருந்து எல்லோரும் பின்னிட்டு இப்படிப் பெருமாளைப் பெறப்போவதைக் காண்பித்தார்.* பாதுகாராதனம் செய்து ராஜ்யபரிபாலனம் செய்ததிலிருந்து ஒவ்வொரு மனிதனும் தன்னையும் தன்னுடைய ஸர்வ வஸ்துக்களையும் பகவானுக்கென்று அர்ப்பணம் செய்தே வைதிக லௌகிக ஸர்வகார்யங்களையும் செய்ய வேணுமென்று அறிவித்தார். மேலும்

उपाख्यातां तथात्वेन वसिष्ठाद्यैर्महर्षिभिः ।
उपायफलयोः काष्ठामुपासे रामपादुकाम् ॥ (पादुकासहस्रम्)

என்கிறபடி ஸ்ரீராம பாதுகையே ஒவ்வொருவனுக்கும் உபாயமும் பலமும். ஆக அதை ஆராதித்துவருவதே புருஷார்த்தமென்பதையுமறிவித்தார். பரதன் தனக்கேற்பட்ட ஐச்வரியத்தோடு மஹத்தான ராஜ்யைச்வர்யம் வந்தபோது அதை உபேக்ஷித்ததிலிருந்து, ஒருவனுக்கு அற்பமான போகமுள்ளபோது வைராக்யம் உண்டாகலாம்; அந்த சம

*(Cf.) " One far-off divine event
To which the whole creation moves "
(*Lord Tennyson*)

யத்தில் பரீக்ஷார்த்தமாக ஈச்வரன் விசேஷ போகங்களுக்கு வழி வைத்தால் அவ் வைராக்யம் பறந்துபோய் விடும்; அப்படியிராமல் அந்த சமயத்திலும் வைராக்யம் வந்தாலல்லது பகவத் ஸம்பந்தம் கிடைக்காதென்பது அறிவிக்கப்படுகிறது. குஹனோடு ஸமாகமம் பெற்று ஸ்ரீராமனிருக்கும் விதத்தை யறிந்துத் தானும் அவரைப்போல் மரையுரி, ஜடை இவற்றை தரித்து எப்போதும் பகவத் ஸாரூப்யமே தனக்கு வேண்டுவதென்பதை விளக்கினார். இப்படியெல்லாம் பார்த்தபோது பகவானிடத்தில் ப்ரஜைகள் நடந்துகொள்ள வேண்டியதற்கு பரதன் ஸ்ரீராமனிடத்தில் தான் நடந்துகொண்டு மார்க்கதர்சியானார் என்று நிதர்சிக்கப்படுகிறது.

இளவீரன் காட்டிய வழி

ஸ்ரீமத் ராமாயண மகா காவ்யத்தில் லக்ஷ்மணன் ஒரு பிரதான பாத்திரம். பால்யம் முதற்கொண்டு ஸ்ரீராமபிரான் கைங்கர்யத்திலீடுபட்ட மஹாத்மா.

वाल्यात्प्रभृति सुस्निग्धो लक्ष्मणो लक्ष्मिवर्धनः ।
रामस्य लोकरामस्य भ्रातुर्ज्येष्ठस्य नित्यशः ॥

सर्वप्रियकरस्तस्य रामस्यापि शरीरतः ।
लक्ष्मणो लक्ष्मिसम्पन्नो वहि:प्राण इवाऽपरः ॥

न च तेन विना निद्रां लभते पुरुषोत्तमः ।
मृष्टमन्नमुपानीतमश्नाति न च तं विना ॥

यदा हि हयमारूढो मृगयां याति राघवः ।
तदैनं पृष्ठतोन्वेति सधनुः परिपालयन् ॥

பால்யம் முதல் ஸ்ரீராமபிரானிடம் அத்யந்த ஸ்நேகம். சரீரம் மாத்திரம் வேறு. இவர் ஸ்ரீராமனுக்கு வெளிப் பிராணன். இவரில்லாமல் ஸ்ரீராமன் தூங்கவும் மாட்டார், புஜிக்கவும் மாட்டார். வேட்டைக்குச் சென்றுலுடனே தனுர்த்தாரைக லக்ஷ்மணன் ஸம்ரக்ஷணைக்குப் பின் செல்வார். இம்மாதிரியான ப்ராத்ரு பக்தியுள்ள லக்ஷ்மணனுடைய சரித்திரமெல்லாம் ஸ்ரீராமசரித்திரத்தை யொட்டினதாகவே வரும். தனித்து ஒன்றும் கிடையாது.

விச்வாமித்ர ப்ரம்மருஷி ஸ்ரீராமனை யழைத்துக் கொண்டு போகும்பொழுது கூடவே லக்ஷ்மணனும் புறப் பட்டார். விச்வாமித்ரர் இவரைக் கிஞ்சித்தேனும் கவனித் ததாய்த் தெரியவில்லை. மந்த்ரோபதேசங்கள் ஸ்ரீராமபிரானு க்கு மாத்திரம்தான் செய்தார். லக்ஷ்மணன் ஸ்ரீராமபிரானிட மடங்கியவர். தனியாக ஒன்றுமபேக்ஷித்தவரன்று. ஸ்ரீராம சந்த்ரன் ஆக்ஞையை எப்பொழுதும் சிரஸா வஹித்து நடத்திவருகிறவர். ஸ்ரீஸீதாகாந்தன் பட்டாபிஷிக்தராக வேண்டுமென்று தசரத சக்ரவர்த்தி நிச்சயம் செய்தபோது, ஸ்ரீராமபிரான் லக்ஷ்மணனிடம் சொல்லுகிறார்:—

लक्ष्मणेमां मया सार्धं प्रशाधि त्वं वसुंधराम् ।
द्वितीयं मेऽन्तरात्मानं त्वामियं श्रीरुपस्थिता ॥

லக்ஷ்மண! நீ என்னோடு ராஜ்யபாலனம் செய்யவேண் டும். நீ என்னுடைய இரண்டாவது பிராணன். ஆகை யால் என்னோடு உன்னையும் இந்த ராஜ்யலக்ஷ்மி அடைந்தது.

सौमित्रे भुंक्ष्व भोगांस्त्वमिष्टान् राज्यफलानि च ।
जीवितं च हि राज्यं च त्वदर्थमभिकामये ॥

உனக்கு வேண்டிய போகங்களையும் ராஜ்ய பலன்களையு மெல்லாம் நீ யனுபவிக்கலாம். பிராணனையும் ராஜ்யத்தை யும் உனக்காகத்தான் நான் வஹிக்கிறேனென்றார். இதற்கு லக்ஷ்மணன் பதில்கூட சொல்லவில்லை. அவர் ராமாஜ்ஞை யெதுவானாலும் 'ததேயோஸ்மி' யென்று நினைக்கப்பட்டவர். அபேக்ஷை யொன்றுமில்லாதவர். நிஷ்காம யோகத்தை லக்ஷ்மணனிடந்தான் பார்க்கலாம். பிறகு அபிஷேக பங்க மும் வனவாஸமும் ஸ்ரீராமபிரானுக்கு ஏற்பட்டபொழுது

லக்ஷ்மணனுக்கு அளவில்லாத ஸத்தியாக்கிரஹம் வந்துவிட்டது. ஸ்ரீராமபிரான் பட்டாபிஷேகத்திற்கு பிதாவுள்படயார் குறுக்கே வந்தாலும் ஸம்ஹரித்து விடுவேனென்கிருர், நிஷ்கபடமான ஹ்ருதய முள்ள மஹாத்மா லக்ஷ்மணன். அப்பொழுது சபதம் செய்கிருர்.

दीप्तमग्निमरण्यं वा यदि रामः प्रवेक्ष्यति ।
प्रविष्टं तत्र मां देवि त्वं पूर्वमवधारय ॥

ஸ்ரீராமன் ஜ்வாலாக்னியில் பிரவேசித்தாலும் வனத்தில் பிரவேசித்தாலும் அவருக்கு முன் பிரவேசம் நான் செய்வேன்.

ஸ்ரீ ராமபிரானருளிச் செய்கிருர்:—

तव लक्ष्मण जानामि मयि स्नेहमनुत्तमम् ।
विक्रमञ्चैव सत्त्वं च तेजश्च सुदुरासदम् ॥

நீ என்னிடம் வைத்திருக்கும் அத்யந்த ஸ்நேகத்தை நானறிவேன். உன் பராக்கிரமம், பலம், பிரபாவம் யாரிடத்திலுமில்லை யென்றுமறிவேன். இப்படியருளிச் செய்து பிறகு தர்மோபதேசம் செய்கிருர். லக்ஷ்மணனுக்குக் கோபம் குறையவில்லை. அப்பொழுது தர்ம விசாரம் செய்யும்போது மத்தியில் ஸ்ரீ ராமபிரான் இவ்விதம் ஒரு வார்த்தையும் சொன்ஞர்:—

कैकेय्याः प्रतिपत्तिर्हि कथं स्यात् मम पीडने ।
यदि भावो न दैवोऽयं कृतान्तविहितो भवेत् ॥

என்னிடம் கைகேயி ப்ரீதியுள்ளவள். இதெல்லாம் தெய்வ ஸங்கல்ப மென்கிருர்.

धारयन् मनसा दुःखमिन्द्रियाणि निगृह्य च ।
प्रविवेशात्मवान् वेश्म मातुरप्रियशंसिवान् ॥
आसाद्य रामः सौमित्रिं सुहृदं भ्रातरं प्रियम् ।
उवाचेदं स धैर्येण धारयन् सत्त्वमात्मवान् ॥

ஸ்ரீ ராமபத்ரனுடைய சக்தியானது துக்கத்தையும் கோபத்தையுமடக்கி தைர்யாவலம்பனம் செய்வது. இந்த அப்பியாஸம் லக்ஷ்மணன் செய்யவில்லை. மனதில் எப்படியோ அப்படியே வெளியில் பிரதர்சனம் செய்வார். ஸ்ரீராமபிரான் கைகேயியும் தசரதனும் ப்ரத்யக்ஷமாக செய்த அக்கிரமத்தை மூடி வைக்கவேண்டுமென்று தெய்வ ஸங்கல்பத்தைக் குறுக்கே தள்ளுகிறாரென்று லக்ஷ்மணன் திருவுள்ளம் சீறியது.

तस्य दुष्प्रतिवीक्ष्णं तद्भ्रुकुटीसहितं तदा ।
बभौ क्रुद्धस्य सिंहस्य मुखस्य सदृशं मुखम् ॥
अग्रहस्तं विधून्वंस्तु हस्ती हस्तमिवात्मनः ।
तिर्यगूर्ध्वं शरीरे च पातयित्वा शिरोधराम् ॥
अग्राक्ष्णा वीक्षमाणस्तु तिर्यग्भ्रातरमब्रवीत् ॥

லக்ஷ்மணன் பயங்கரமான கண்களுடன் கோபம் கொண்ட சிங்கம் மாதிரி யிருந்தார். கையை வீசிக்கொண்டு முன்னும் பின்னும் கீழும் மேலும் கழுத்தைத் திருப்பிக் கொண்டு கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டு பேசுகிறார். ஸ்ரீராமபிரானுக்கு மிஞ்சின தெய்வமொன்று லக்ஷ்மணனுக்குக் கிடையாது. தத்வமும் அவ்வளவே.

विक्लवो वीर्यहीनो यस्स दैवमनुवर्तते ।
वीराः सम्भावितात्मानो न दैवं पर्युपासते ॥
द्रक्ष्यन्ति त्वद्य दैवस्य पौरुषं पुरुषस्य च ।
दैवमानुषयोरद्य व्यक्ताव्यक्तिर्भविष्यति ॥

விசேஷார்த்தம் இங்கு அனவஸரம். தெய்வ ஸங்கல்பத்தை தெய்வமே நிராகரிக்கத்தகும். மானுஷத்திலே யோசிப்போம். ஸ்ரீராம பக்தியைக் காட்டிலும் தெய்வ பக்தி உயர்ந்ததில்லை. ஸ்வபாவமாக லக்ஷ்மணன் மிகவும் சாந்தர். ஆனால் கோபம் வந்தால் அடக்க முடியாதவர்.

विमृज्य वाप्पं परिसान्त्व्य चासकृत् स लक्ष्मणं राघववंशवर्धनः ।
उवाच पित्र्ये वचने व्यवस्थितं निवोध मामेष हि सौम्य सत्पथः ॥

ஸ்ரீராமன் எப்படித் தீர்மானித்தாலும் குறுக்கு சொல்லாத மஹான் லக்ஷ்மணன். தானும் ஸ்ரீராமபிரானோடு வனவாஸம் செய்யப் புறப்பட்டார். இங்கு ஒரு விஷயம் விசாரிக்கத் தக்கது. கௌஸல்யாதேவி ஸ்ரீராமனோடு வனத்திற்குப் போகவேண்டுமென்று ஸ்ரீராமனைக் கேட்க அவர் பதிலுரைத்தார்:—

जीवन्त्या हि स्त्रिया भर्ता दैवतं प्रभुरेव च ।
शुश्रूषामेव कुर्वीत भर्तुः प्रियहिते रता ॥
एष धर्मः पुरा दृष्टो लोके वेदे श्रुतः स्मृतः ॥

ஸ்திரீகளுக்கு பர்த்தாவே தெய்வம். இப்படி சாஸ்திரம் சொல்லுகிறது. ஆகையால் நீங்கள் என் பிதாவுக்கு சுச்ரூஷை செய்து கொண்டிருக்கவும். இப்படிச் சொல்லிக்

கௌஸல்யையை ஸமாதானப் படுத்தினர். பிறகு ஸீதா தேவி தானும் வரவேண்டுமென்று பிரார்த்தித்து,

प्रासादाग्रैर्विमानैर्वा वैहायसगतेन वा ।
सर्वावस्थागता भर्तुः पादच्छाया विशिष्यते ॥

என்று பாதிவ்ரத்ய தர்மத்தைச் சொல்லி நிர்பந்தித்தாள்.

இது "इयं सीता मम सुता सहधर्मचरी तव" என்று விவாஹ காலத்திலேயே சொல்லப்பட்ட தர்மம் தான். இம் மாதிரியான பதிவிரதா தர்மங்கள் ஊர்மிளாதேவிக்கு ஏன் அந்வயிக்காது? லக்ஷ்மணனுக்கும் அவருடைய பத்தினிக்கும் இந்த விஷயமாக ஸம்பாஷணை நடந்திருக்க வேண்டும். லக்ஷ்மணன் இம்மாதிரி ஸமாதானம் சொல்லியிருப்பார்: "நான் ஸ்ரீராமனோடு அரண்யம் செல்வது ஸீதாராம கைங்கர்யம் செய்யும் பொருட்டே. 'ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி யழிவிலா வடிமை செய்யவேண்டும் நாம்' என்கிற அபிஸந்தி எனக்கு எப்பொழுதுமுண்டென்பது உனக்குத் தெரிந்த விஷயமே. ஸ்ரீராமன் வனவாஸம்\செய்தாலும் என் அபிஸந்தி பங்கமாகக்கூடாது. ஆகையால் போய் வருகின்றேன். அதற்கு நிஸ்ப்ருஹத்வமும் ஏகாக்ர சித்தமும் வேண்டும். ஸ்ரீராமபிரானுக்கு ஸீதை போல் நானுமொரு நாயகியாகப் போகின்றேன். நீ வந்தால் நாயகிக்கு ஒரு நாயகி ஏற்படுகிறது. உன் கவலையினாலும் நம் விலாஸங்களாலும் என் கைங்கர்யத்திற்கு மிகவும் லோபமுண்டாகும். நீ இங்கிருந்து என்னிடம் தியானம் செலுத்தினல் உன் பதிவிரதா தர்மம் நிறைவேறும். நீயும் நிஸ்ப்ருஹத்துவத்துடன் என்றைக்கும் ஏகாக்ர மனதைச் செலுத்தி யிருந்தால் என்

கைங்கர்ய பலனில் உனக்கும் ஸமபாகம் கிடைக்கும். இந்த விசேஷ தர்மம் உனக்குத் தெரியாவிட்டால் ஸாமான்ய லோகதர்மத்தையும் சொல்லுகிறேன். இரண்டு ஸ்திரீகள் சேருவது மனஸ்தாப ஹேது. அதிலும் ப்ராதாக்களின் பத்தினிகள் ஓரிடத்தில் சேர்ந்தால் அவர்களுக்குள் மனஸ்தாபம் உதிக்கும். பிறகு அது ப்ராதாக்களை அடையும். அதனால் என் கைங்கர்யத்திற்கு ஹானி ஏற்படும். உனக்கும் ஸீதாதேவிக்கும் பால்யம் முதல் ஆனுகூல்யமிருப்பது உண்மைதான். चला हि प्राणिनां मतिः மனஸ் சஞ்சலமென்பதை பிதாவே சொன்னார். நடத்தியும் காட்டினார். ஸபத்னீகலகங்களுக்குச் சக்ரவர்த்திகள் கூட உட்பட்டவரென்பதை நீயே யறிந்தாய். ஆகலால் உன் பாதிவ்ரத்ய தர்மத்தை இங்கிருந்தே செலுத்துவது உத்தமம்.''
இம்மாதிரியாக லக்ஷ்மணன் ஊர்மிளாதேவியைத் திருப்தி செய்து வனவாஸத்திற்கு வராதபடி அவளை நிறுத்தியிருக்க வேண்டும். மேலும் ஸீதாதேவி ஸ்ரீராமனோடு வனம் செல்வது பாதிவ்ரத்ய தர்மத்தோடு லௌகிக தர்மத்தையும் ஒட்டி யிருக்கிறது. கைகேயி எண்ணப்படிக்கு நடந்திருந்தால் பரத பத்னி பட்ட மஹிஷி. தான் பட்டமஹிஷியாக இருக்கவேண்டிய நிலைமை தவறிப்போய் தன்னுடைய கனிஷ்ட சகோதரிக் கிரமத்தில் வரும் பரதபத்னி பட்ட மஹிஷியானால், தான் கீழ்ப்பட்ட வர்க்கத்திலே கூட இருந்து வருதல் அலௌகிகம். ஆகையால் கூட ஸ்ரீராமனோடு வனவாஸம் செய்வது உத்தமம்.

ரகுநந்தனனோடு அந்த ஸுமுஹூர்த்தத்திலே லக்ஷ்மணனும் மரவுரி தரித்து வனத்திற்குப் புறப்பட்டார்.

அப்பொழுது மாதா ஸுமித்ராதேவி லக்ஷ்மணனுக்குச் சொல்லுகிறாள்:—

रामं दशरथं विद्धि मां विद्धि जनकात्मजाम् ।
अयोध्यामटवीं विद्धि गच्छ तात यथासुखम् ॥

ஸ்ரீராமனை உன் பிதா தசரதனுக்கு ஸமானமாக எண்ணிக்கொள். அப்படியே ஜானகியை எனக்கு ஸமானமாக நினைக்கவும். அரண்யத்தை அயோத்தியையாக நினைத்துக் கொள் என்கிறாள். லக்ஷ்மணனுக்கு அந்த ஸமயம் பிதாவின் பேரிலிருந்த அபிப்பிராயம் எல்லோரும் அறிந்ததே.

प्रोत्साहितोऽयं कैकेय्या स दुष्टो यदि नः पिता ।
अमित्रभूतो निस्संगं वध्यतां वध्यतामपि ॥

'நமது பிதா துஷ்டன். கைகேயிக்கு அடிமை. அவரைக் கொன்று விடலாம். இல்லையேல் சிறையிலடைத்து விடலாம்' என்றுகூட சொன்னவராயிற்றே. இவருக்கு ஸுமித்ராதேவி **"रामं दशरथं विद्धि"** என்று நியமித்ததின் பயனென்ன? மாத்ரு வாக்யத்திற் கெதிராக ஒன்றும் சொல்லாமல் லக்ஷ்மணன் மௌனமாய் மாதாவை நமஸ்கரித்துத் திரும்பினார். ச்லோகத்தின் பதான்வயங்களை மாற்றிக்கொண்டிருப்பார். **"रामं दशरथं विद्धि"** யென்றால் **"रामं विद्धि दशरथं"** தசரதனை ராமனுக்கு ஸமானமாக வைத்துக்கொள். பிதாவினிடம் ஆக்ரஹத்தை விட்டு ஸ்ரீராமனிடமுனக்கெவ்வளவு பக்தியுண்டோ அவ்வளவு பக்தி பிதாவினிடத்திலும் செலுத்தவேண்டும். **"मां विद्धि जनकात्मजां"** என்றால் **जनकात्मजाम् मां विद्धि** ஒருக்கால் உனக்குத் தாயாரென்று

லும் சத்ருக்னனுக்கும் நான் மாதாவாகையால் சத்ருக்னன் பரதனேடு ராஜ்ய போகங்களனுபவித்தாலும் என் புத்திரனை உன்னை நான் மறப்பேனென்று நினைக்காதே. ஸ்ரீராம பக்திக்கு அனுகுணமாக ஜானகியிடம் எவ்வளவு பக்தி செலுத்துவாயோ அம்மாதிரி என்னிடமும் உனக்கு இருக்க வேண்டும். அயோத்தியையை அரண்யமாக நினைத்துக்கொள்.

न हि तद्भविता राष्ट्रं यत्र रामो न भूपतिः ।
तद्वनं भविता राष्ट्रं यत्र रामो निवत्स्यति ॥

ஸ்ரீராமனிருக்குமிடமே அயோத்யை என்று வஸிஷ்ட மஹர்ஷியும் சொல்லவில்லையா! இம்மாதிரியான அபிப்பிராயத்தை மாத்ரு வாக்யத்தில் வைக்கலாம்.

ஸுமந்திரனிடம் லக்ஷ்மணன் சொல்லியனுப்பினதைப் பார்ப்போம்.

अहं तावन्महाराजे पितृत्वं नोपलक्षये ।
भ्राता भर्ता च बन्धुश्च पिता च मम राघवः ॥

ஆகலால் **"रामं दशरथं विद्धि"** என்பதற்கு ஸ்ரீ ராமனையே தசரதனாகவும் வைத்துக்கொள் என்று அர்த்தம் கொள்வது அனுகூலம். இம்மாதிரியாக ஸ்ரீராமன் பித்ரு வாக்யத்திற்காகவும், ஸீதாதேவி பாதிவ்ரத்ய தர்மானுஷ்டானத்திற்காகவும், லக்ஷ்மணன் அவிச்சின்னமான கைங்கர்ய ப்ராப்திக்காகவும் வனவாஸம் செய்யத் தொடங்கினார்கள். கைகேயி தசரதனை வரங்கள் கேட்கும்பொழுது,

नव पञ्च च वर्षाणि दण्डकारण्यमाश्रितः ।
चीराजिनजटाधारी रामो भवतु तापसः ॥

என்று கேட்டாள். ஆனால் கைகேயியே ஸ்ரீராமபிரானிடம் சொல்லும்பொழுது

"तत्र मे याचितो राजा भरतस्याभिषेचनम् ।
गमनं दण्डकारण्ये तव चाद्यैव राघव ॥
सप्त सप्त च वर्षाणि दण्डकारण्यमाश्रितः ।
अभिषेकमिमं त्यक्त्वा जटाजिनधरो वस ॥

"தாபஸ" என்கிற வார்த்தை விட்டுப் போய்விட்டது. ஆதலால் தாபஸத்வம் நிர்ப்பந்தமாகவில்லை. ஆகிலும் "தாபஸ" என்று முதலில் கைகேயி மனதிலிருந்ததைக் கூட லக்ஷ்மணன் ஸ்ரீராமனிடம் கையில் வாங்கி நடத்தினது போல் தன் தாபஸத் தன்மையையும் ஸம்பூர்ணமாக நிறைவேற்றினார். ஸ்ரீராமபிரான் ஜானகியுடன் லீலையிலிருந்து சிலநாளும் வியோக பிரலாபத்துடன் சிலநாளும் வனவாஸம் செய்து தன்னுடைய க்ஷத்திரிய தர்மத்தை (அதாவது ஸாது ஸம்ரக்ஷணத்தையும் துஷ்ட ஸம்ஹாரத்தையும்) நடத்தி,

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

என்ற கீதா வாக்யத்தை ஸார்த்தகமாக்கினார். லக்ஷ்மணன் மாத்திரம் என்ன தவம் செய்தாரென்று கேட்கலாம். வைராக்யத்துடன் ஏகாக்ர சித்தனாய் நிஷ்காமமாய் திவ்ய தம்பதிகளின் கைங்கர்யம் செய்துவந்தார். அதைவிட

விசேஷமான தவம் வேறில்லே. இம்மாதிரியான ஸ்திதப்ர ஜ்ஞத்வம் அடைய நான்கு தசைகளுண்டு. அதாவது யத மானம், வ்யதிரேகம், ஏகேந்திரியம், வசீகரணம். இந்த நான்காவது தசையை யடைந்து ஸ்ரீராமபிரானிடமே மன தைச் செலுத்தினரென்பதை லக்ஷ்மண வனவாஸத்தில் ஸம் பூர்ணமாக அறியலாம்.

ஸ்ரீராமனுக்கு கங்காதீர ப்ராந்தியத்தில் குஹ ஸமாக மம் ஏற்பட்டது. அன்று ராத்திரி ஓர் மரத்தடியில் ஸ்ரீராம னும் வைதேகியும் சயனித்திருக்க, லக்ஷ்மணன் ஜாகரூகனய் திருமேனிக்காவலிருந்தார்.

भवांस्तु सह वैदेह्या गिरिसानुषु रंस्यते ।
अहं सर्वं करिष्यामि जाग्रतः स्वपतश्च ते ॥

என்று தான் சொன்னபடியே கைங்கர்யம் செய்யத் தொடங்கினர். லக்ஷ்மணன் அன்று செய்த கைங்கரியத்தை குஹன் பரதனிடம் இம்மாதிரி வர்ணிக்கிருன்:—

ततस्तज्जलशेषेण लक्ष्मणोऽप्यकरोत्तदा ।

ஸ்ரீராமபிரான் ஸந்தியாவந்தனம் செய்தபிறகு அந்த ஜலசேஷத்தினலேயே தானும் செய்தார்.

सौमित्रिस्तु ततः पश्चात् अकरोत्स्वास्तरं शुभम् ।
स्वयमानीय बर्हींषि क्षिप्रं राघवकारणात् ॥
तस्मिन् समाविशद्रामः स्वास्तरे सह सीतया ।
प्रक्षाल्य च तयोः पादावपचक्राम लक्ष्मणः ॥

एतत्तदिङ्गुदीमूलमिदमेव च तत्तृणम् ।
यस्मिन् रामश्च सीता च रात्रिं तां शयितावुभौ ॥
नियम्य पृष्ठे तु तलाङ्गुलित्रवान् शरैस्सुपूर्णाविषुधी परंतपः ।
महद्धनुस्सज्यमुपोह्य लक्ष्मणो निशामतिष्ठत्परितोऽस्य केवलम् ॥

லக்ஷ்மணன் தான் போய் தர்ப்பங்கள் கொண்டுவந்து சயனமேற்படுத்தினார். ஸீதாராமர்களுடைய திருவடிகளை ப்ரக்ஷாளனம் செய்தார். ஸம்ரக்ஷணைக்காக கொஞ்ச தூரத்தில் நின்றார். கையில் தனுஸும் முதுகில் அம்புகளுமாகக் கவசதாரணம் செய்துகொண்டு ஸ்ரீராமனிருக்குமிடத்தைச் சுற்றித் திரிந்துகொண்டு உஷாராக இருந்தார். பிறகு பரத்வாஜாச்ரமத்தை விட்டு வனம் போகும் பொழுது ஸ்ரீராமன் லக்ஷ்மணனுக்கு ஆஜ்ஞாபித்தார்.

सीतामादाय गच्छ त्वमग्रतो भरतानुज ।
पृष्ठतोऽहं गमिष्यामि सायुधो द्विपदां वर ॥

முதலில் லக்ஷ்மணன், இரண்டாவது ஸீதை, மூன்றாவது ஸ்ரீராமபிரான், இப்படி வரிசையாக நடந்தார்கள். இந்த மூன்று மூர்த்திகளை பரமைகாந்திகள் பிரணவஸ்வரூபமாக வர்ணிப்பார்கள். காவ்யகர்த்தா:—

गच्छतोस्तु तयोर्मध्ये बभूव जनकात्मजा ।
मत्तमातङ्गयोर्मध्ये शुभा नागवधूरिव ॥

இரண்டு ஆண் கஜங்களின் மத்தியிலே பெண் கஜம் போவதுபோலிருந்ததென்று வர்ணிக்கிறார். உண்மையில்

ஸீதா லக்ஷ்மணர்களுடைய அபீஷ்டத்தை ஸ்ரீராமபிரான் நிறைவேற்றுகிறார்.

यदि गन्तुं कृता बुद्धिर्वनं मृगगजायुतम् ।
अहं त्वानुगमिष्यामि वनमग्रे धनुर्धरः ॥

என்று லக்ஷ்மணன் சொன்னதையும்,

यदि त्वं प्रस्थितो दुर्गं वनमद्यैव राघव ।
अग्रतस्ते गमिष्यामि मृद्नन्ती कुशकंटकान् ॥

என்று தேவியார் சொன்னதையும் நினைத்து இங்கு ஸ்ரீராமன் அபீஷ்டபூர்த்தி செய்கிறார். இப்படிச் சித்திரகூடத்திலிருக்கும் பொழுது பரதன் ஸைன்ய பரிவாரத்துடன் ஸ்ரீராமனை அயோத்யைக்கு எழுந்தருளப்பண்ண வேண்டுமென்று புறப்பட்டு வரும்போது லக்ஷ்மணனுக்கு மஹாகோபம் வந்துவிட்டது. க்ரோதமெல்லாம் ஸ்ரீராமவிஷயமே தவிர தன் விஷயமொன்றுமில்லை. அதுவும் ஸ்ரீராம வசனங்களால் சாந்தமாய்விட்டது. லக்ஷ்மண க்ரோதமெல்லாம் க்ஷணிகந்தான். உத்தமபுருஷ லக்ஷணமிது. பிறகு தண்டகாரண்யத்தில் விராதன் ஸீதையை எடுத்துச் செல்ல ஸ்ரீராமன் சொல்லுகிறார்.

परस्पर्शात्तु वैदेह्याः न दुःखतरमस्ति मे ।
पितुर्वियोगात्सौमित्रे स्वराज्यहरणात्तदा ॥

இதற்கு லக்ஷ்மணன்,

अनाथ इव भूतानां नाथस्त्वं वासवोपमः ।
मया प्रेष्येण काकुत्स्थ किमर्थं परितप्यसे ॥

राज्यकामे मम क्रोधो भरते यो बभूव ह ।
तं विराधे प्रमोक्ष्यामि वज्री वज्रमिवाचले ॥

என்கிறார். பரதன்மேல் முன்னிருந்த கோபத்தை இப்பொழுது இந்த ராக்ஷஸன்பேரில் காட்டுகிறேனென்கிறார். பஞ்சவடீயில் ஹேமந்தருதுவை வர்ணிக்கும்போது பரதனை ஸ்துதி செய்கிறார்:—

अस्मिंस्तु पुरुषव्याघ्रः काले दुःखसमन्वितः ।
तपश्चरति धर्मात्मा त्वद्भक्त्या भरतः पुरे ॥

பரதனிடமிருந்த கோபம் சாந்தமாய்விட்டது. பிறகு சூர்ப்பணகை வந்தபொழுது பரிஹாஸோக்திகள் செய்யும் காலத்திலும் தத்வார்த்தமடங்கிய வசனம் சொல்லுகிறார்.

एनां विरूपां असतीं करालां निर्णतोदरीम् ।
भार्यां वृद्धां परित्यज्य त्वामेवैष भजिष्यति ॥

ராக்ஷஸிக்கு அநுகூலமான அர்த்தம் தோன்றினாலும் இந்த ச்லோகம் விசேஷார்த்தமடங்கியது. இந்த ஸீதாதேவி 'விரூபா' விசேஷ ரூபத்தையுடையவள். அதாவது ப்ரணவ ஸ்வரூபத்திலிருப்பவள். 'அஸதி' அகாரம் விஷ்ணுவாசகம். 'விஷ்ணுஸதி' அதாவது மஹாலக்ஷ்மி, 'கராளா' பதிவிரதா சிரோமணியைக் கண்டால் எல்லாரும் நடுங்குவார்கள். 'நிர்ணதோதரீ' யுக்தமான உதரமுடையவள். 'வ்ருத்தா' க்ஞான வ்ருத்தை, தர்மங்களையறிந்தவள். "பரித்யஜ்ய த்வாம்" உன்னைத் தள்ளிவிட்டு ஸீதாதேவியையே அடைவர் என்கிறார். பரிஹாஸத்திலகூட பக்தி மேலிட்டிருக்கிறது.

பிறகு மாரீசன் மாயா மானுகத் தோன்றினபோது லக்ஷ்மணன் அது மானன்று மாரீசன்தான் என்று நன்றாய்த் தெரிவித்தார். அதைக் கவனியாமல் ஸீதாதேவி பிடிவாதமாக மானை அபேக்ஷிக்க ஸ்ரீராமபிரான் ஸீதையைப் பார்த்துக் கொள்ள லக்ஷ்மணனை நியமித்துத் தான் மானின் பின்னேடினார். மாரீசன் மரணகாலத்தில் வஞ்சனையாகக் கூச்சலிடவே ஸீதை பயந்தாள். லக்ஷ்மணனைப் போகச் சொன்னாள். லக்ஷ்மணன் ஸ்ரீராமாக்ஞையைப் பாராட்டி வெளியே போகச் சம்மதிக்கவில்லை. தேவியார் அதி கடினேக்திகள் சொன்னதின் பேரில் லக்ஷ்மணனும் க்ஷணகாலம் கோபங்கொண்டு உடனே சாந்த வசனங்கள் அளித்து ஜானகியை நமஸ்கரித்து ஸ்ரீராமனிடம் சென்றார். உடனே ராவணனால் ஸீதாபஹரணம் நேரிட்டது. இந்த விஷம காலத்தில் விரைவில் பார்த்தால் வனவாஸம் பதிமூன்று வருஷங்களுக்குமேல் ஒரு மாஸமாய்விட்டதென்பார்களாம். இந்த தீர்க்க காலம் முழுதும் ஸீதா ராம லக்ஷ்மணர்கள் சேர்ந்து வனவாஸம் செய்தார்கள். ஸ்ரீராமபிரான் வனவாஸத்திலும் தன் தர்ம பத்தினியோடு லீலா விலாஸங்களைச் செய்து வந்தார். லக்ஷ்மணன் கேவலம் திவ்ய தம்பதிகளுடைய கைங்கர்யத்திலீடுபட்டிருந்தார். அர்ச்சையில் பகவானையும் பிராட்டியையும் திவ்யாபரண பூஷிதர்களாய் விவாஹாதி லீலைகளுடன் அநுபவிக்கும்பொழுது பக்தகோடிக்கு பக்தி யுதிக்குமே தவிர வேறு அபிப்பிராயமொன்றுமுதிக்காது. ஸ்ரீராமனுயவதரித்த போது சுத்த மானுஷாவஸ்தையில் மானுஷ சுக துக்கங்களையெல்லாம் அநுஷ்டிக்கும் நிலைமை. ஸ்ரீராம லக்ஷ்மணர்களிருவரும் துல்ய வயதுள்ளவர்கள். இரண்டு நாள் வித்தி

யாஸத்தாலேற்பட்ட ஜ்யேஷ்ட கனிஷ்டத்வம்தான். ஜானகி அத்யாச்சர்யமான ரூபமுடையவள்.

राज्यं वा त्रिषु लोकेषु सीता वा जनकात्मजा ।
त्रैलोक्यराज्यं सकलं सीताया नाप्नुयात्कलाम् ॥

பிரம்மசர்ய நிஷ்டையுள்ள ஹனுமானே ஸீதாதேவியின் ரூபத்தை இம்மாதிரி வர்ணிக்கிறார். அதாவது ஆபரணங்களொன்று மில்லாமல் மலின சரீரம், மலின வஸ்திரமுள்ள தசை. இவவளவு ஸௌந்தர விக்கிரகம் வனத்தில் ஸ்நானலங்காரத்துடன் ஸ்ரீராமனோடு விலாஸம் செய்யுங் காலத்தில் லக்ஷ்மணனுக்கு ஏதாவது மனோ விகல்பமுண்டா? நினைவிலும் கனவிலுமில்லை. ஸ்ரீராமபிரானுக்கு ஸீதாதேவி எம்மாதிரி ரூப சௌந்தர்யங்களில் அமைந்திருந்தாளோ அம்மாதிரி லக்ஷ்மணனுக்கும் ஊர்மிளா தேவி ரூப சௌந்தர்யாதிசயங்களுள்ளவள். இப்படி விச்வாமித்ரர் ஜனகருடன் சொல்லுகிறார்:—

सदृशो धर्मसम्बन्धस्सदृशो रूपसम्पदा ।
रामलक्ष्मणयो राजन् सीता चोर्मिळया सह ॥

லக்ஷ்மணனுக்குத் தன் பத்னிஞாபகமாவதுண்டா? ஒன்றுமில்லை. பரமபதத்தில் லக்ஷ்மீநாராயணனை எப்படி நித்யஸூரிகளும் முக்தர்களும் அனுபவிப்பார்களோ, எப்படி அர்ச்சாவதாரத்தில் பகவானையும் பிராட்டியையும் பக்தர்கள் ஸேவிப்பார்களோ, அம்மாதிரியாகவே லக்ஷ்மணன் ஸீதாராம கைங்கர்யம் செய்து ஸேவித்து வந்தது விலக்ஷணமான நிஷ்காம கர்மயோகத்தைக் காட்டுகிறது. இளையபெரு

மாள் ஸ்ரீதேந்திரிய ஸார்வபௌமனான மஹானுபாவன். ஸீதாபஹரணமான பிறகு ஸ்ரீராமபிரான் தேவியின் வியோகத்தால் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கெல்லாம் லக்ஷ்மணன் ஸமாதானம் சொல்லுகிறார். இவருடைய ஸ்ரீஸூக்திகளை லக்ஷ்மண கீதை யென்று சொன்னாலும் தகும்.

यदि दुःखमिदं प्राप्तं काकुत्स्थ न सहिष्यसे ।
प्राकृतश्चाल्पसत्त्वश्च इतरः कस्सहिष्यति ॥
महर्षियों वसिष्ठस्तु यः पितुर्नः पुरोहितः ।
अह्ना पुत्रशतं जज्ञे तदैवास्य पुनर्हतम् ॥
याचेयं जगतां माता देवी लोकनमस्कृता ।
अस्याश्च चलनं भूमेर्दृश्यते सत्यसंश्रया ॥
यौ धर्मौ जगतां नेत्रौ यत्र सर्वं प्रतिष्ठितम् ।
आदित्यचन्द्रौ ग्रहणमभ्युपेतौ महाबलौ ॥
सुमहान्त्यभिभूतानि वेदाश्च पुरुषर्षभ ।
न दैवस्य प्रमुञ्चन्ति सर्वभूतानि देहिनः ॥
नष्टायामपि वैदेह्यां हृतायामपि चानघ ।
शोचितुं नार्हसे वीर यथान्यः प्राकृतस्तथा ॥

இம்மாதிரி விண்ணப்பம் செய்து க்ஷமாபணம் செய்கிறார்:—

त्वमेव हि पुरा राम मामेवं बहुशोन्वशाः ।
अनुशिष्याद्धि को नु त्वामपि साक्षात् बृहस्पतिः ॥

बुद्धिश्च ते महाप्राज्ञ देवैरपि दुरन्वया ।
शोकेनाभिप्रसुप्तं ते ज्ञानं संबोधयाम्यहम् ॥

பூர்வம் தேவரீர் எனக்குச் செய்த உபதேசங்களை ஞாபகப்படுத்துகிறேனென்று விண்ணப்பம் செய்கிறார். பின்னிட்டும் ஸ்ரீராமனுடைய துக்கம் குறையவில்லை.

राज्यभ्रष्टेन दीनेन तस्यामासक्तचेतसा ।
कथं मया विना शक्यं सीतां लक्ष्मण जीवितुम् ॥

என்கிறார். பிறகு பம்பாதீரம் சென்றார். வஸந்த ருது பிராரம்பமாய்விட்டது. ஸ்ரீராமபிரான் ஸீதாவியோக துக்கத்தாலே ச்ருங்கார பாவங்களையுமடைந்தார். லக்ஷ்மணனிடம் துக்கமும் சிருங்காரமும் கலந்ததாகப் பேசுகிறார். துக்கத்திலும் காமத்திலும் உணர்வற்று வைராக்ய சிரோமணியாயிருக்கும் தம்பியென்றுகூட யோசிக்காமற் சொல்லுகிறார். பக்ஷிகளையும், மரங்களையும், புஷ்பங்களையுமெல்லாம் பார்க்கப்.பார்க்க மன்மத பீடிதரானார். இவைகளையெல்லாம் லக்ஷ்மணனிடம் விவரித்துச் சொல்லுகிறார்.

यदि दृश्येत सा साध्वी यदि चेह वसेमहि ।
स्पृहयेयं न शक्राय नायोध्यायै रघूत्तम ॥

न ह्येवं रमणीयेषु शाद्वलेषु तया सह ।
रमतो मे भवेच्चिन्ता न स्पृहान्येषु वा भवेत् ॥

इति रामं महात्मानं विलपन्तमनाथवत् ।
उवाच लक्ष्मणो भ्राता वचनं युक्तमव्ययम् ॥

संस्तम्भ राम भद्रं ते मा शुचः पुरुषोत्तम ।
नेदृशानां मतिर्मन्दा भवत्यकलुषात्मनाम् ॥
स्मृत्वा वियोगजं दुःखं त्यज स्नेहं प्रिये जने ।
अतिस्नेहपरिष्वङ्गात् वर्तिरार्द्रापि दह्यते ॥

இம்மாதிரி பலதடவைகள் ஸ்ரீராமபிரான் பாமரன் மாதிரியாகப் புலம்புவதும் லக்ஷ்மணன் சாந்தி வசனங்கள் சொல்லுவதுமாக ஏற்பட்டது. பிறகு ருச்யமூக பர்வதம் சென்று ஸுக்ரீவனோடு ஸ்நேகம் செய்து கொள்ளப் போனார்கள்.

இந்த வனவாஸ பிரகரணத்தில் ராமானுஜனுடைய இன்னுமொரு விசேஷ குணத்தை கவனிக்கவும். வன யாத்திரையில் அநேக ரிஷ்யாச்ரமங்களையும் மஹர்ஷிகளையும் ஸந்தர்சனம் செய்தார்கள். ராமானுஜன் ஸ்ரீராமனோடு போவதும் நமஸ்கார ப்ரதக்ஷிணங்கள் செய்வதுமே தவிற ஒரு ரிஷியினிடமாவது தான் நேராகப் பேசவில்லை. இப்பொழுது ஸ்ரீராமபிரான் சாயையில் பின்னடங்கி யிருந்தனர். ஸம்பாஷணைகளெல்லாம் மஹர்ஷிகளுக்கும் ஸ்ரீராமனுக்குமே நடந்தன. ஏறக்குறைய ஸமான ஸ்கந்தர்கள். இருவர் ஓரிடம் சென்றால் இருவரும் பேசுவது ஸகஜம். இரண்டு நாள் வித்தியாசத்தால் வந்த கனிஷ்டத்வம் லக்ஷ்மணனுக்கு. ஸ்ரீராமன் எப்படியோ அப்படி லக்ஷ்மணனும் சக்கரவர்த்தித் திருமகன். மேலும் புத்திமான், நீதிமான், த்யுதிமான், வீர்யவான். ஒரு குணத்திலும் குறைவில்லை. இப்படியிருக்க அஹங்கார மமகாரங்களுக்கும் லக்ஷ்மணனிடம் பூர்ணானுஸ்வாரம்.

வினய ஸம்பத்தை இவரிடந்தான் கிரஹிக்கவேண்டும். எந்த சமயத்திலாவது ஸ்ரீராமானுஜன் இதரர்களோடு பேசுவதானால் ஸ்ரீராமனுடைய நியமனம் வேண்டும். ஆதலால் ரிச்யமூக பர்வதத்தில் ஹனுமாரிடம் லக்ஷ்மணன் பேசினது ஸ்ரீராம நியமனத்தாலென்று மஹர்ஷி குறிப்பிடுகிறார். ஹனுமான் கேட்ட கேள்விகளுக்கு லக்ஷ்மணன் ஸ்ரீராம நியமனம்கொண்டு தான் பதில் சொல்லுகிறார்.

तस्य तद्वचनं श्रुत्वा लक्ष्मणो रामचोदितः ।

ஸ்ரீராம விருத்தாந்தங்களை முதலில் சொல்லி தன் விஷயத்தைப் பின் சொல்லுகிறார்.

तस्याहमवरो भ्राता गुणैर्दास्यमुपागतः ।

பிறகு ஸீதாவியோக விருத்தாந்தத்தைச் சொல்லி ஸ்ரீராமப்ரபாவத்தையும் அவருடைய தத்கால தைன்ய ஸ்திதியையும் ஹனுமானுக்கு அறிவித்தார்.

एष दत्त्वा च वित्तानि प्राप्य चानुत्तमं यशः ।
लोकनाथः पुरा भूत्वा सुग्रीवं नाथमिच्छति ॥
पिता यस्य पुरा ह्यासीच्छरण्यो धर्मवत्सलः ।
तस्य पुत्रश्शरण्यश्च सुग्रीवं शरणं गतः ॥
सर्वलोकस्य धर्मात्मा शरण्यः शरणं पुरा ।
गुरुर्मे राघवस्सोयं सुग्रीवं शरणं गतः ॥
यस्य प्रसादे सततं प्रसीदेयुरिमाः प्रजाः ।
स रामो वानरेन्द्रस्य प्रसादमभिकांक्षते ॥
येन सर्वगुणोपेतः पृथिव्यां सर्वपार्थिवाः ।

मानितास्सततं राज्ञा सदा दशरथेन वै ॥
तस्यायं पूर्वजः पुत्रः त्रिषु लोकेषु विश्रुतः ।
सुग्रीवं वानरेन्द्रं तु रामश्शरणमागतः ॥
शोकाभिभूते रामे तु शोकार्थे शरणं गते ।
कर्तुमर्हति सुग्रीवः प्रसादं हरियूथपः ॥
एवं ब्रुवाणं सौमित्रिं करुणं साश्रुलोचनम् ॥

இம்மாதிரி ஸ்ரீராமசந்திரனை ப்ரபன்னனுக்குவதற்கு லக்ஷ்மணன் மனம் எப்படித் துடித்திருக்கும்? அகிஞ்சனனை ப்ரபன்னனுக்கலாம். ஸர்வலோக ஶரண்யனை ப்ரபன்னனுக்குவதென்ருல் சுலபசாத்தியமா? லக்ஷ்மணனுடைய பரிதாபமென்னவென்று வர்ணிக்கத்தகும். ஸீதாதேவி தன் உத்தரீயத்திலாபரணங்களை கட்டிப் போட்ட விருத்தாந்தத்தைச் சொல்லி, ஸுக்ரீவன் அவ்வாபரணங்களை ஸ்ரீராமனுக்கு காண்பித்தான். ஸ்ரீராமன் லக்ஷ்மணனைப் பார்த்து ஆபரணங்கள் ஸீதையுடையதுதானு வென்று கேழ்க்க வைராக்ய சிகாமணியான லக்ஷ்மணன் பதில் சொல்லுகிருர்.

नाहं जानामि केयूरे नाहं जानामि कुण्डले ।
नूपुरे त्वभिजानामि नित्यं पादाभिवन्दनात् ॥

தோள்வளைகள் குண்டலங்கள் முதலியவைகளை அறியேன். நித்யம் பாத ஸேவை செய்வதினுல் கால் தண்டைகள் மாத்திர மறிவேன் என்ருர்.

பிறகு ஸுக்ரீவ ஸக்யம், வாலிஸம்ஹாரம், ஸுக்ரீவ பட்டாபிஷேகமெல்லாம் முடிந்தது.

மறுபடியும் ஸ்ரீராமபிரானுக்கு ஸீதாவியோக துக்கம் மேலிட்டது. லக்ஷ்மணன் ஸமாதானம் செய்கிறார். ஸ்ரீ ராமபிரான் இனி துக்கத்தை விட்டு தைர்யாவலம்பனம் செய்கிறேனென்கிறார் :—

एष शोकः परित्यक्तः सर्वकार्यावसादकः ।
विक्रमेष्वप्रतिहतं तेजः प्रोत्साहयाम्यहम् ॥

இப்படிச் சொல்லியும் விரஹதாபம் விடவில்லை. பிறகு யுத்த ஸன்னாஹம் செய்யவேண்டிய ஸமயத்தில் ஸுக்ரீவன் மறந்து ஸுகானுபவத்திலிருக்க, ஸ்ரீராமாக்ஞை பெற்ற லக்ஷ்மணன் ஆக்கிரஹத்துடன் ஸுக்ரீவனிடம் சென்றார். கோபம் கொண்ட லக்ஷ்மணரைச் சாந்தப்படுத்த தாரை ஸர்வாலங்கார பூஷிதையாய் அன்னநடையுடன் குலுங்கிக் கொண்டு வருகிறாள்.

सा प्रस्खलन्ती मदविह्वलाक्षी प्रलंबकांचीगुणहेमसूत्रा ।
सलक्षणा लक्ष्मणसन्निधानं जगाम तारा नमिताङ्गयष्टिः ॥
स तां समीक्ष्यैव हरीशपत्नीं तस्थावुदासीनतया महात्मा ।
अवाङ्मुखोभूत् मनुजेन्द्रपुत्रः स्त्रीसन्निकर्षाद्विनिवृत्तकोपः ॥

ஜிதேந்திரியனிடம் இந்த வேஷமெல்லாம் பலிக்காது ஆகிலும் வந்தது ஸ்திரீயானபடியால் கோபத்தை கொஞ்சம் உபஸம்ஹாரம் செய்துகொண்டு ஸுக்ரீவனை நிந்தித்து பயமுறுத்திப் பேசினார். அதற்குத் தாரை சொல்லுகிறாள்.

तच्चापि जानामि यथाऽविषह्यं बलं नरश्रेष्ठशरीरजस्य ।
जानामि यस्मिंश्च जनेऽववद्धं कामेन सुग्रीवमसक्तमद्या ॥

न कामतन्त्रे तव बुद्धिरस्ति त्वं वै यथा मन्युवशं प्रपन्नः ।
न देशकालौ हि न चार्थधर्मौ अपेक्षते कामरतिर्मनुष्यः ॥

லக்ஷ்மணன் ஸுக்ரீவனை நேராகப் பார்த்து

न च संकुचितः पंथा येन वाली हतो गतः ।
समये तिष्ठ सुग्रीव मा वालिपथमन्वगाः ॥

வாலி போனவழி தூர்ந்துவிடவில்லை. நீயும் அவ்வழியில் போக வேண்டாமென்றார்.

பிறகு ஸுக்ரீவன் ஸர்வ ப்ரயத்நங்களும் செய்து ஹநுமாரால் ஸீதை யிருக்குமிடத்தையும் தெரிந்து யுத்த ஸந்நாஹத்துடன் ஸமுத்ர தீரம் சென்றார். அப்பொழுது விபீஷணன் ஸ்ரீராமனிடம் வந்தார். அவரைச் சேர்த்துக் கொள்ளலாமா கூடாதா என்று ப்ரமுகர்களுடைய அபிப்ராயங்களை ஸ்ரீராமபிரான் கேட்கிறார். லக்ஷ்மணனைக் கேட்கவில்லை. அவர் தானாகச் சொல்லத்தக்கவரன்று. ஸ்ரீராமனுடைய அபிப்ராயமே லக்ஷ்மணனுடைய அபிப்பிராயம். வேறு மாதிரி யிராதென்று கேட்கவில்லை. ஸுக்ரீவன் தன் அபிப்பிராயத்தைச் சொல்லி தத்ஸமயம் ஸ்ரீராமபிரான் பதில் சொல்லும்பொழுது லக்ஷ்மணனைப் பார்க்கிறார் :—

ईदृशं व्यसनं प्राप्तं भ्रातरं यः परित्यजेत् ।
को नाम स भवेत्तस्य यमेष न परित्यजेत् ॥

வ்யசனம் ப்ராப்தமாகும் சமயத்தில் தமையனை விட்டு வந்த க்ருதக்னனை விபீஷணன் யாரைத்தான் விடமாட்டானென்று ஸுக்ரீவன் சொல்லும் சமயம்.

वानराधिपतेर्वाक्यं श्रुत्वा सर्वानुदीक्ष्य च ।
ईषदुत्स्मयमानस्तु लक्ष्मणं पुण्यलक्षणम् ॥

வ்யஸன ப்ராப்தமான காலத்தில் தன்னைவிடாமல் தன்னோடு வ்யசனத்தை அனுபவிக்கும் புண்ய லக்ஷணமுள்ள லக்ஷ்மணனைப் பார்த்து ஆனந்தப்பட்டு ராவண விபீஷணர்களுக்கும், வாலி ஸுக்ரீவர்களுக்கும், ராம லக்ஷ்மணர்களுக்குமுள்ள தாரதம்யத்தைப் புன்சிரிப்பால் காட்டுகிறார். தான் மேலே சொல்லப்போகிற ஞாதி லக்ஷணங்கள் லக்ஷ்மணனுக்கு அன்வயமில்லை யென்று தெரியும் பொருட்டு ஸத்குண ஸம்பன்னனான லக்ஷ்மணனைப் பார்த்து புன்சிரிப்புடன் ஸ்ரீராமபிரான் சொல்லுகிறார்.

अस्ति सूक्ष्मतरं किञ्चित् यदत्र प्रतिभाति मे ।
प्रत्यक्षं लौकिकं वाऽपि विद्यते सर्वराजसु ॥
अमित्रास्तत्कुलीनाश्च प्रातिदेश्याश्च कीर्तिताः ।
व्यसनेषु प्रहर्तारः तस्मादयमिहागतः ॥

தான் சொல்லப்போகிற லோக நியாயத்தை அனுசரித்துத்தான் லக்ஷ்மணன் சித்ரகூடத்தில் பரதன் விஷயத்தில் ஸந்தேகம் கொண்டானென்பதையும், தமயனைக் கொல்லச் செய்து ராஜ்யம் சம்பாதித்த ஸுக்கிரீவன் வாக்கால் ப்ராத்ரு த்ரோகத்தை நிந்திப்பதையும், புன்சிரிப்பால் லக்ஷ்மணனுக்கு ஸூசனை செய்கிறார். பிறகு விபீஷணரைச் சேர்த்துக்கொண்டு ஸேது பந்தனமாய் லங்காவரோதனம் செய்து யுத்தமும் ப்ராரம்பித்தது. யுத்தத்தின் மத்திய காலத்தில் ஸீதாதேவியை ஸம்ஹாரம் செய்ததாக ஸ்ரீராம

பிரான் கேட்டு மூர்ச்சையடைந்தார். லக்ஷ்மணன் ஸ்ரீராமபிரான் சிரஸை தன் மடியில் வைத்துக்கொண்டு பரம துக்கம் கொண்டவராய் நாஸ்திக வாதம் செய்கிறார். "தர்ம மார்க்கமொன்றுக்கும் பயனில்லை. அதர்மங்கள் செய்யும் ராவணன் சுகமாயிருப்பதையும் தர்ம மார்க்கத்தை விடாமலனுஷ்டிக்கும் ஸ்ரீராமபிரானுக்கு ஸகல வ்யசனங்கள் ஸம்பவிப்பதையும் பார்த்தால் தர்மத்தாலொன்றும் பிரயோஜனமில்லை யென்று தெரிகிறது." இம்மாதிரி யெல்லாம் அந்த ஸந்தர்ப்பத்தையொட்டி நாஸ்திக வாதம் செய்தார். இதுவும் லோக வழக்கம். துக்கம் வந்தபொழுது ஈச்வரனைக் கூட நிந்திப்பது வழக்கம். உத்தர க்ஷணத்தில் தன் கர்மானுஸாரம் வந்தவை வ்யசனங்களென்றறிந்து பகவத் பக்தி மறுபடியுமுண்டாகும். லக்ஷ்மணன் இம்மாதிரியாகவே தர்மங்கள் பிரயோஜனமில்லை யென்று வாதித்து முடிவில் சொல்லுகிறார்:—

उत्तिष्ठ नरशार्दूल दीर्घबाहो दृढव्रत ।
किमात्मानं महात्मानं आत्मानं नाववुध्यसे ॥

எழுந்தருள வேண்டும். உம்முடைய பிரபாவத்தை ஏன் அறியாமல் துக்கப்படவேண்டும்?

अयमनघ तवोदितः प्रियार्थं जनकसुतानिधनं निरीक्ष्य रुष्टः ।
सहयगजरथां सराक्षसेन्द्रां भृशमिषुभिर्विनिपातयामि लंकाम् ॥

தர்மானுஷ்டானங்கள் நிஷ்பிரயோஜனமானவை என்று வ்யஸனத்தினால் சொன்னேனே தவிர வேறொன்றுமில்லை. இப்பொழுதே ஸர்வத்தையும் நாசம் செய்கிறேன்.

பிறகு விபீஷணனுடைய நிவேதனனுஸாரமாக ஸ்ரீராம பிரான் லக்ஷ்மணனை இந்திரஜித் வதம் செய்ய நியமித்தார்.

सोभिवाद्य गुरोः पादं कृत्वा चाऽपि प्रदक्षिणम् ।

ஸ்ரீராமபிரானைப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து விட்டு லக்ஷ்மணன் புறப்பட்டார். லக்ஷ்மணனுக்கும் இந்திரஜித்துக்கும் கோரயுத்தம் நடந்து கடைசியில் லக்ஷ்மணன் தன் உபாஸனமான ஸ்ரீராமபிரானை தியானித்தார்.

धर्मात्मा सत्यसन्धश्च रामो दशरथिर्यदि ।
पौरुषे चाप्रतिद्वंद्वश्शरैनं जहि रावणिम् ॥

உடனே பாணப்ரயோகம் செய்ய இந்திரஜித்தின் தலை யறுக்கப்பட்டது. இந்திரஜித் வதையைப்பற்றி எல்லோரும் லக்ஷ்மணனை ஸ்துதி செய்ய, ஸ்துதியை ஸஹிக்காமல் லக்ஷ்மணன் லஜ்ஜையடைந்தார். அப்பொழுது ஸ்ரீராமபிரான் பலாத்காரமாக லக்ஷ்மணனைத் தன் கழுத்தில் கட்டிக் கொண்டு ஆலிங்கனம் செய்துகொள்ளுகிறார்.

स तं शिरस्युपाघ्राय लक्ष्मणं लक्ष्मिवर्धनम् ।
लज्जमानं बलात्स्नेहादङ्कमारोप्य वीर्यवान् ॥

இந்த இந்திரஜித் வதம் ராவண வதத்திற்கு மேலாக எல்லோரும் சிலாகிக்கத்தக்கது. ஸ்ரீராமபிரான் பட்டாபிஷிக்தரான பிறகு ரிஷிகள் வந்து ஸ்ரீராமனை ஸ்துதி செய்தார்கள். தத்ஸமயம் ரிஷிகள் இந்திரஜித் வதத்தை மிகவும் உத்தமமாக ச்லாகித்தார்கள். அப்போது ஸ்ரீராமன் கேட்கிறார்.

भगवन्तः कुम्भकर्णं रावणं च निशाचरम् ।
अतिक्रम्य महावीर्यौ किं प्रशंसथ रावणिम् ॥

महोदरं प्रहस्तं च विरूपाक्षं च राक्षसम् ।
अतिक्रम्य महावीर्यान् किं प्रशंसथ रावणिम् ॥
मत्तोन्मत्तौ च दुर्धर्षौ देवान्तकनरान्तकौ ।
अतिक्रम्य महावीर्यान् किं प्रशंसथ रावणिम् ॥
अतिकायं त्रिशरसं धूम्राक्षं च निशाचरम् ।
अतिक्रम्य महावीर्यान् किं प्रशंसथ रावणिम् ॥
कीदृशो वै प्रभावोऽस्य किं बलं कः पराक्रमः ।
केन वा कारणेनैष रावणादतिरिच्यते ॥

இப்படி அதிசயமான கீர்த்தி லக்ஷ்மணனடைந்தார். நிஷ்காமமாக பராபேக்ஷையில்லாமல் க்யாதி லாப பூஜைகளை அபேக்ஷிக்காதவராய் இவைகளுக்கு விமுகரான மஹான் லக்ஷ்மணன் உயர்ந்த கீர்த்தியடைந்தார். பிறகு லக்ஷ்மணன் ராவண யுத்தத்தில் மூர்ச்சையடைந்தபொழுது ஸ்ரீராமபிரான் துக்க சாகரத்தில் மூழ்கிவிட்டார்.

न हि युद्धेन मे कार्यं नैव प्राणैर्न सीतया ॥
देशे देशे कलत्राणि देशे देशे च बान्धवाः ।
तं तु देशं न पश्यामि यत्र भ्राता सहोदरः ॥

பிறகு ஸுஷேணன் ஸ்ரீராமனுக்கு தைரியம் சொல்லி, ஹனுமான் போய் ஓஷதிகளைக் கொண்டுவந்ததின்மேல் லக்ஷ்மணனுக்கு மூர்ச்சை தெளிந்தது. துக்கிதரான ஸ்ரீராமனைப் பார்த்து லக்ஷ்மணன் சொல்லுகிறார்:—

नैराश्यमुपगन्तुं ते तदलं मत्कृतेऽनघ ।
वधेन रावणस्याद्य प्रतिज्ञामनुपालय ॥

நானொரு பதார்த்தமன்று, என் கவலை வேண்டாம். உம்முடைய ப்ரதிஞ்ஞையை நிறைவேற்றும். ராவண ஸம்ஹாராதி காரியங்களைப் பூர்த்தி செய்யவுமென்று ப்ரார்த்திக்கிறார். ராவண வதானந்தரம் ஸ்ரீராமன் உத்தரவைக்கொண்டு விபீஷணனுக்கு லக்ஷ்மணன் பட்டாபிஷேகம் செய்தார்.

பிறகு ஸீதாதேவி, பர்த்தாவினால் நிந்திக்கப்பட்டவளாய் புத்திர கோஷ்டியில் சேர்ந்த லக்ஷ்மணனைப் பார்த்துச் சிதையடுக்கச் சொல்லும்பொழுது லக்ஷ்மணன் பரம தைன்யத்தை யடைந்து ஸ்ரீராகவனுடைய முகத்தைப் பார்த்தார்

एवमुक्तस्तु वैदेह्या लक्ष्मणः परवीरहा ।
अमर्षवशमापन्नो राघवाननमैक्षत ॥
स विज्ञाय ततश्छन्दं रामस्याकारसूचितम् ।
चितां चकार सौमित्रिर्मते रामस्य वीर्यवान् ॥

ஸ்ரீராமபிரானுக்கு அக்னிப்ரவேசம் சம்மதமென்று 'इङ्गितज्ञाश्च कोसलाः' என்கிறபடி, முக ஜாடையினால் அறிந்தவரான லக்ஷ்மணன் சிதையையும் சேர்த்தார். ஸ்ரீராம நியமனமில்லாமல் தான் ஒரு காரியமும் செய்கிற வழக்க மில்லையாதலால் அந்த கோர கைங்கர்யத்திற்கு ஸாத்விக த்யாகம் ப்ரத்யக்ஷமாகச் செய்து ஸ்ரீராமனைப் பார்த்து "स्वयमेव कारयति" யென்றது போலே ஸ்ரீராம நியமனம் பெற்று

லக்ஷ்மணன் சிதை சேர்த்தார். அக்னி பிரவேசம் செய்த ஜானகிதேவியை பரிசுத்தாத்மாவென்று அக்னி பகவான் ஸ்ரீராமனிடம் ஸமர்ப்பித்தான். பிறகு அயோத்தியையில் ஸ்ரீராமபிரானுக்கு ஸீதா ஸமேதமாக சிம்மாசனுதிபத்திய மாய்விட்டது. அப்பொழுது லக்ஷ்மணனைப் பார்த்து ஸ்ரீ ராமபிரான் சொல்லுகிறுர்:—

आतिष्ठ धर्मज्ञ मया सहेमां गां पूर्वराजाध्युषितां बलेन ।
तुल्यं मया त्वं पितृभिर्धृता या तां यौवराज्ये धुरमद्वहस्व ॥

தர்மங்களறிந்த ஹே லக்ஷ்மண! நம் பெரியோர்கள் பிரபுத்வம் செய்த இந்த ராஜ்யத்தை நீ என்னேடு பரிபாலனம் செய்து யுவராஜாவாகயிருக்க வேண்டுமென்கிறுர். பரதன், ஜேஷ்டனுகயிருக்க, தனக்கு லபித்த ராஜ்யத்தை வேண்டாமென்று ஸ்ரீராமபிரான் திருவடிகளில் சித்திர கூடம் போய் ஸமர்ப்பித்து பிறகு ஸ்ரீராம பாதுகைகளை வைத்துக்கொண்டு ஜடா வல்கல அஜின தாரியாய் பதிநான்கு வருஷங்களும் நந்திக்கிராமத்திலிருந்து ராஜ்ய பரிபாலனம் செய்து ஸ்ரீராமன் திரும்பி வருவதை எதிர்பார்த்திருக்க, ஸ்ரீராமன் திரும்பி வந்தவுடனே பாதுகைகளை தானே நேராக ஸ்ரீராம பாதங்களில் ஸமர்ப்பித்து ஸ்ரீராம பட்டாபிஷேகத்தை விமர்சையாக நடத்தி வைத்திருக்க, “न सर्वे भ्रातरस्तात भवन्ति भरतोपमाः” என்று ஸ்ரீராமனே பரதனை கௌரவித்திருக்க, லக்ஷ்மணனுக்கு ஏன் யௌவராஜ்யத்தைக் கொடுக்க நிச்சயித்தார்? இதற்குக் காரணங்கள் அனேகங்கள். பிரதமத்தில் தசரத சக்கரவர்த்தி ஸ்ரீராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் செய்ய நிச்சயித்த சமயத்தில் லக்ஷ்-

மணனைப் பார்த்து “ लक्ष्मणेमां मया सार्धं प्रशाधि त्वं वसुन्धरां ” என்று சொன்னார். பிறகு சித்திரகூடத்தில் பரதன் ஸைன்யத்துடன் வந்ததைப் பார்த்து லக்ஷ்மணன் கோபங்கொண்ட சமயத்தில் ஸ்ரீராமன் அருளிச் செய்தார்.

यदि राज्यस्य हेतोस्त्वमिमां वाचं प्रभाषसे ।
वक्ष्यामि भरतं दृष्ट्वा राज्यमस्मै प्रदीयताम् ॥

நீ ராஜ்ய காங்க்ஷையினால் இம்மாதிரி பரதனிடம் கோபமாயிருக்கும் பக்ஷத்தில் நான் பரதனைப் பார்த்து உனக்கு ராஜ்யம் கொடுக்கச் சொல்லுகிறேன்:—

उच्यमानोऽपि भरतो मया लक्ष्मण तत्त्वतः ।
राज्यमस्मै प्रयच्छेति बाढमित्येव वक्ष्यति ॥

நான் பரதனிடம் சொன்னால் உடனே அவன் சம்மதித்து உனக்கு ராஜ்யத்தைக் கொடுப்பானென்றார். ஸ்ரீ ராமபிரான் சந்தோஷத்தை மாத்திரம் தன் வ்ரதமாக வைத்துக்கொண்டு நிஷ்காமமான கைங்கர்யம் செய்யும் மஹானுபாவனான லக்ஷ்மணனைப் பார்த்து இம்மாதிரி யருளிச் செய்ய மஹர்ஷி யருளிச் செய்கிறார் :—

तथोक्तो धर्मशीलेन भ्राता तस्य हिते रतः ।
लक्ष्मणः प्रविवेशेव स्वानि गात्राणि लज्जया ॥

லக்ஷ்மணன் எந்தக் காலத்திலும் ராஜ்யமாவது எந்த போகமாவது அபேக்ஷித்தவரன்று. ஸ்ரீராமபிரான் கைங்கர்யம்தான் லக்ஷ்மணனுக்கு ஸகல போகம். மேலும் ஸ்ரீராமன் உத்தேசமிருந்திருக்கலாம். என்னவென்றால் கைகேயி

விவாஹகாலத்தில் கைகேயி புத்திரனுக்கு ராஜ்ய சுல்கம் கொடுக்கிறதாகச் சொன்ன பித்ருவாக்யப்படிக்கு தத்ஸமயம் பரதனை ப்ரத்யேக ராஜ்யத்தில் பட்டாபிஷிக்தராக்க வேண்டுமென்று ஸ்ரீராமரபிப்பிராயமிருக்கலாம். எப்படியிருந்தாலும் பலாபேக்ஷை ஸ்வப்னத்திலேயுமில்லாத லக்ஷ்மணன் ஒப்பவில்லை. ஆகையால் பரதனுக்கு யுவராஜ்யம் கொடுக்கப்பட்டது.

सर्वात्मना पर्यनुनीयमानो यदा न सौमित्रिरुपैति योगम् ।
नियुज्यमानोऽपि च यौवराज्ये ततोऽभ्यषिञ्चत् भरतं महात्मा ॥

ஸம்பூர்ணமாக இளையபெருமாள் நிஷ்காம கைங்கர்யத்தை ஸ்ரீராமபிரானிடம் செலுத்தினது ஸ்ரீ லக்ஷ்மண வன வாஸத்தினால் ப்ரத்யக்ஷம்.

कायेन मनसा बुद्ध्या केवलैरिन्द्रियैरपि ।
योगिनः कर्म कुर्वन्ति संगं त्यक्त्वात्मशुद्धये ॥

என்கிறபடியே அனுஷ்டானத்தில் காட்டின மஹானுபாவன் லக்ஷ்மணன்.

ஸ்ரீஸீதாகாந்தன் வெகு விமர்சையாய் ராஜ்ய பரிபாலனம் செய்து அனேக யாகங்களையும் செய்து வந்தார். வெகு காலம் கழித்து சீதாதேவி கர்ப்பவதியானாள். தத்ஸமயம் ஸ்ரீராமன் ஏவுகாரர்கள் முகமாக சில அஸஹ்யமான ஜன வாக்கியங்களைக் கேட்டு தேவியாரிடம் சொல்லுகிறார்:—

अपत्यलाभो वैदेहि त्वयि मे समुपस्थितः ॥

உன்னால் புத்திர லாபமடையப் போகிறேன். அரண்யத்திற்குப் போய் ரிஷியாச்ரமங்களை மறுபடியும் பார்க்க

வேண்டு மென்று அபிலாஷை கொண்டிருந்தாயே! இப்பொழுது போகலாமென்று சொல்ல, ஜானகியும் சந்தோஷத்துடன் ஒப்புக் கொண்டாள். சந்தோஷத்துடன் புறப்பட்ட ஜானகியை அனுதையாகக் காட்டில் வால்மீகி ஆச்ரமத்தின் சமீபத்தில் விட்டுவரும் கோர கைங்கர்யமும் லக்ஷ்மணனுக்கே விதிக்கப்பட்டது. அதையும் செய்தார்.

அந்திய காலத்தில் லக்ஷ்மணன் துர்வாஸ மஹர்ஷியை ஸ்ரீராம ஸன்னிதானத்திற்கனுப்பின சந்தர்ப்பத்தில் தன் பிராணனையும் விடவேண்டியவரானர். பித்ரு வாக்ய பரிபாலனத்திற்கு ஸ்ரீராமபிரான் ராஜ்யத்தை விட்டு பதிநாலு வருஷங்கள் வனவாஸம் செய்தார். அதை லக்ஷ்மணனும் அனுபவித்தார். அந்தியத்தில் தன் ப்ராணனைக்கூடப் பெரிதாக நினைக்காமல் ப்ராத்ரு வாக்ய பரிபாலனம் செய்தார். இம்மாதிரி இளவீரன் நிஷ்காம கைங்கர்யத்தை ஸ்ரீராமபிரானிடம் வனவாஸத்திலும் மற்றெல்லாக் காலங்களிலேயும் செலுத்தி ஸ்ரீராம பக்தர்களுக்கு ஓர் விலக்ஷணமான மார்க்கதர்சியானர்.

மூவரின் மோக்ஷம்

आब्रह्मभुवनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन ।
मामुपेत्य तु कौन्तेय पुनर्जन्म न विद्यते ॥

மேற்சொன்ன கீதாசார்யனுடைய ஸ்ரீஸூக்தியாலே ப்ரம்ம லோகபர்யந்தமான ப்ராகிருதலோகங்களிலுள்ள சேதனன் **क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति** என்கிற நியாயத்தாலே கர்ம பூமியில் மறுபடியும் ஜனிக்கிறுன்.

बहूनां जन्मनामन्ते ज्ञानवान्मां प्रपद्यते இப்படி பல ஜன்மங்களைப் பெற்றுக் கடைசியில் முக்தனானவனுக்கு மாத்திரம் மறுபிறப்பில்லை. இந்த பிரகாரம் மறுபிறப்பில்லாமலும் புனராவிருத்தியில்லாமலும் மோக்ஷத்தையடைந்த மஹான்கள் யாரென்று வால்மீகி பகவானின் ஸ்ரீஸூக்திகளிலிருந்து சற்று விசாரம் செய்வோம். ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸ்ரீராமசந்திரனுடைய கிருபையை யடைந்து அநேகர் ஸ்வர்க்கம் போனதாய்த் தெரிகிறது. ஸ்வர்க்க சப்தத்திற்கு மோக்ஷமென்று பொருள் என்று அநேக ஆசிரியர்கள் வ்யாக்யானம் செய்திருந்த போதிலும், க்ரமார்த்தத்தைப் பார்த்தால் அது அவ்வளவு பொருத்தமாகாதென்பது விளங்குகிறது. ஸர்வேச்வரனுக்கு விபவாவதாரத்தில் ஆசார்யபதம் வகித்த வஸிஷ்ட விச்வாமித்திராதிகளும், புருஷோத்தமனைப் பிள்ளையாய்ப் பெறும் பாக்கியத்தைப்

பெற்ற தசரத கௌஸல்யாதிகளும், திருமகனாரின் திருக் குமாரர்களான குசலவர்களும், புனராவ்ருத்தியில்லாத மோக்ஷத்தை யடைந்தார்களென்று வால்மீகி பகவானுடைய ஸ்ரீஸூக்திகளாலே ஏற்படவில்லை. ஆனால் எவருக்கும் மோக்ஷ ப்ராப்தியில்லையென்று சொல்வதும் தவறு. ஸ்ரீமத் ராமாயணத்தில் மோக்ஷ மடைந்தவர்கள் மூவரேயென்று வால்மீகி பகவான் கண்டோக்தியாய்ச் சொல்லுகிறார். திர்யக் கணத்திலொருவரும், மனுஷ்ய வர்கத்திலொருவரும், வானர கோடியிலொருவருமே. அவர்கள் யாரெனில் ஜடாயு—சபரீ—ஸுக்ரீவன். இம் மூவர்களில் ஒருவருக்குக் கேட்காமலே மோக்ஷம் லபித்தது. மற்றொருவருக்கு கேட்காமலும் கொடுக்காமலும் கிடைத்தது. இன்னுமொரு வருக்கு ப்ரார்த்தித்துக் கிடைத்தது.

(1). ஜடாயுவின் நிர்யாண காலத்தில் ஸ்ரீராமபிரான்.

या गतिर्यज्ञशीलानां आहिताग्नेश्च या गतिः ।
अपरावर्तिनां या च या च भूमिप्रदायिनाम् ॥
मया त्वं समनुज्ञातः गच्छ लोकान् अनुत्तमान् ।
गृध्रराज महासत्त्व संस्कृतश्च मया व्रज ॥

என்றபடி அவ்வுத்தமனை யநுக்ரஹித்து தன் திருக் கைகளாலே அவருக்கு தன் பிதாவுக்கும் துர்லபமான ஸம்ஸ்காரத்தைச் செய்து, மறு பிறப்பில்லாத மோக்ஷத்தை யளித்தார்.

न च पुनरावर्तते என்ற ச்ருதி ப்ரதிபாத்யமான மோக்ஷ ஸாம்ராஜ்யம் **अपरावर्तिनां** என்ற பதத்தாலும் **अनुत्तमान् लोकान् (पूजायां बहुवचनम्)** என்ற வாக்யத்தாலும் ஸுவ்யக்த

மாய் ஏற்படுகிறது. न शूद्रा भगवद्भक्ताः என்கிறது போல் ஜடாயு திர்யக்யோநியில் பிறந்திருந்த போதிலும் திவ்ய தம்பதிகளுக்கு பக்தி புரஸ்ஸரமாய் கைங்கர்யம் செய்து அந்த கைங்கர்யத்தி லேயே தேகவியோக மடைந்த படியால் இவருக்கு கேழ்க்காமலே மோக்ஷம் கிடைத்தது.

(2). லோகமான்யாள் தண்டகாரண்யம் எழுந்தருளும் போது நூற்றுக்கணக்கான மஹர்ஷிகள் ஸ்ரீராமபிரானைத் தண்டகாரண்ய ப்ராந்தியத்திலேயே அடைக்கலம் புகுந்து ராக்ஷஸர்களினலே தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை விஞ்ஞாபனம் செய்து கொண்டார்கள். இந்த கோஷ்டியில் சேராதவளாயும் மஹா தாபஸியுமான சபரியின் ஆச்ரமத்திற்கு பகவான் தானே எழுந்தருளினர். ஸாங்கோபாங்கமாய் அத் தாபஸியைக் குசலப்ரச்னம் பண்ணும் காலத்தில் அவள் ராக்ஷஸர்கள் முதலானவர்களில் ஒருவர் பேரிலும் ஒரு வித குற்றமும் சாட்டாமல் ஸ்ரீராம கடாக்ஷத்தாலே தான் தபஸ் ஸித்தியை யடைந்ததாகவும் அவருடைய கடாக்ஷ வீக்ஷணத்தாலேயே தான் நச்வரமான ஸகல லோகங்களையும் தாண்டி நித்ய லோகத்திற்குப் போவதாயும் த்ருடமான விச்வாஸத்துடன் விஞ்ஞாபனம் செய்தாள்.

चक्षुषा तव सौम्येन पूतास्मि रघुनन्दन ।
गमिष्याम्यक्षयान् लोकान् त्वत्प्रसादादरिन्दम ॥

இந்த மோக்ஷ ப்ராப்தியானது கேட்காமலும் கொடுக்காமலும் கேவலம் சபரியின் பக்தி விசேஷத்தாலேயும் ஸ்ரீராமபிரானுடைய பரிபூர்ண கடாக்ஷத்தாலேயும் கிடைத்ததென்பது திண்ணம்.

(3). உத்தர ஸ்ரீமத் ராமாயணத்தில் மஹாப்ரஸ்தான கட்டத்தில் புருஷோத்தமன் வைகுண்டாரோஹணம் செய்யும் காலத்தில் ஸுக்ரீவ விபீஷணாதிகள் எல்லாரும் சரண்யனை ஸேவிக்க வந்தார்கள். அப்போது ஸுக்ரீவன்

तवाऽनुगमने राजन् विद्धि मां कृतनिश्चयम् ।

என்று ஸ்ரீராமனை ப்ரார்திக்கும் பொழுது ரகுநந்தனன்

सखे शृणुष्व सुग्रीव न त्वयाऽहं विना कृतः ।
गच्छेयं देवलोकं वा परमं वा पदं महत् ॥

என்று, தேவ லோகத்தையும் தாண்டிதான் பரமபதம் (மோக்ஷம்) போகும் போதும் ஸுக்ரீவனை விட்டுப் பிரிவதில்லை என்று அபயப்ரதானம் செய்தார். இந்தவிடத்தில் ஸுக்ரீவன் சரணாகதி செய்ததற்கு பலமாக பகவான் பரமபதத்தை யளித்தார். இது ப்ரார்த்தித்துக் கிடைத்தது என்ற மேற்கண்ட மூன்றாவது வகுப்பிற் சேரும்.

बहूनां जन्मनामन्ते ज्ञानवान् मां प्रपद्यते ।
वासुदेवस्सर्वमिति स महात्मा सुदुर्लभः ॥

என்ற கீதாவாக்யத்தின் படிக்கும், ஸ்ரீமந்நிகமாந்த மகாதேசிகன் அருளிச் செய்த "कश्चिद्द्विपश्चित्तमः" என்ற படிக்கும், பரபக்தி, பரக்ஞான வைராக்யாதிகளாலே ஸர்வலோக சரண்யனுடைய பரிபூர்ண கிருபைக்கு பாத்திரமாகி, தேகாவஸானத்தில் "இனி இப்பிறவி யான் வேண்டேன்" என்றபடி அவன் திருவடியை யடைகிறவர் அனேகரிலொருவரே.

பஞ்ச கன்னிகைகள்

अहल्या द्रौपदी सीता तारा मन्दोदरी तथा ।
पञ्चकन्याः स्मरेन्नित्यं महापातकनाशनम् ।।

அகல்யா, த்ரௌபதி, ஸீதா, தாரை, மந்தோதரி, இவ்வைந்து கன்னிகளில் ஏக பர்த்ரு வ்ரதத்தை யனுஷ்டிக்காத அகல்யை, த்ரௌபதி, தாரை இம் மூவருக்கும், உத்தம பதிவ்ரதா தர்மானுஷ்டானம் செய்த ஸீதாதேவி, மந்தோதரியுடன் ஸாம்ய மேற்பட்டதற்கு காரண மென்ன?

1. அகல்யா:—திவ்ய ஸ்வரூபத்துடன் தேவேந்திரன் அகல்யையின் எதிரில் வந்து நின்றவுடன் அவளுடைய ப்ராரப்த கர்மத்தின் கொடுமையினுலே

मतिं चकार दुर्मेधाः देवराजकुतूहलात् ।

என்றபடி அவள் மதிமயங்கி கற்பையிழந்தாள். உடனே கௌதமரின் சாபம் ஏற்பட்டது. அந்த சாப விமோசன காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு தன் நாதனுடைய சொற்படி ஸ்ரீராகவனுடைய வரவை நிரீக்ஷித்துக்கொண்டு அநேக வருஷகாலம் தவம் செய்து வந்தாள். பகவானும் திருப்தியடைந்து அவளை யனுக்ரஹிப்பதற்காக அவளுடைய ஆச்ரமம் வந்து தன்னுடைய திவ்ய சரணாரவிந்த ஸ்பர்சத்தினுலே அவளுடைய சாபத்தை விமோசனம் செய்தார். அதற்குமேல் அவள் ஸர்வசுத்தையாய்விட்டபடியால் அவளை உத்தம பதிவ்ரதா கோஷ்டியில் சேர்க்கப்பட்டது.

2. த்ரௌபதி:—ஐந்து பர்த்தாக்களோடு வாழ்ந்த த்ரௌபதியின் புண்ய சரித்திரத்தில் ஒரு விசேஷமுண்டு. அவள் ஒவ்வொரு வர்ஷாரம்பத்திலும் வரிசைக்கிரமமாய் பாண்டவர்களில் ஒருவரை பர்த்தாவாக வரித்து மற்ற நால்வரையும் பர்த்தாவின் சகோதர கோஷ்டியில், அதாவது மைத்துனர் கோஷ்டியில் சேர்ந்து அனன்யபரையாய் ஏகபர்த்ருவ்ரதம்கொண்டு அந்த வர்ஷக்கடைசியில் தன் சரீரத்தை அக்னியில் ஆஹுதி செய்து சுத்தியைப்பெற்று வேறு சரீரத்துடன் அக்னியிலிருந்து கிளம்பி மற்றொரு பாண்டவரை பர்த்தாவாக வரித்து வந்தாள். இது அவளுக்கேற்பட்ட ஓர் அனுக்ரஹவிசேஷம். இம்மாதிரி அவள் பர்த்ருவரணம் செய்ததினால் அவளுக்கு பாதிவ்ரத்யபங்க தோஷம் வராதென்று ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீ ஸூக்தியாலே தெரிந்து கொள்ளலாம்.

अतिप्रसंगादवधीरयन्त्या प्राचीनया संयमितो नियत्या ।
पाञ्चालकन्यामिव पंचभुक्तां धर्मस्सतीराद्दत तादृशीस्ताः ॥
(यादवाभ्युदयम्)

(தாத்பர்யம்) எப்படியானால் பஞ்சபர்த்தாக்களை யனுபவித்த பாஞ்சாலியை பாதிவ்ரத்ய பங்கதோஷம் வராதபடி தர்மம் தலைகாத்ததோ, அப்படியே ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவோடு க்ரீடை செய்த கோபிகைகளுக்கு தோஷ மேற்படவில்லை யென்றார். இது ஒரு ஸூக்ஷ்மமான தர்ம சாஸ்த்ரம்.

அநேகமாய் த்ரௌபதி சரித்திரத்தின் ஐதிஹ்யத்தைக் கொண்டே நாளது வரையில் பல விடங்களில் த்ரௌபதியம்மன் கோவில் திருவிழாக் காலங்களில் வருஷத்திற்கொரு நாள் பக்த கோடிகள் ஸம்ஸார ஸமேதர்களாய் அகாதமா

யும் துர்நிரீக்ஷயமாயு முள்ள தீயில் குதித்து ஒருவிதமான சரீர வைகல்யத்தையு மடையாமல் அத் தீயிலிருந்து வெளி யேறுகிறார்கள். இதை அநேகர் நேரில் பார்த்திருக்கலாம்.

3. தாரை:—வாலிஸுக்ரீவர்களை மாறி மாறி பர்த்தா வாக வரித்த தாரையையும் பதிவ்ரதா கோஷ்டியில் சேர்ப்ப துண்டு. பாதிவ்ரத்ய பங்கத்திற்கு கேவலம் சரீர ஸ்பர்ச தோஷமே காரணமாகாது.

मनो हि हेतुस्सर्वेषां इन्द्रियाणां प्रवर्तने ।
शुभाऽशुभास्ववस्थासु तच्च मे सुव्यवस्थितम् ॥

என்றுரைத்த ஹநுமாருடைய வாக்யமே இதற்கு ப்ரமாணம். அதாவது ஸர்வேந்திரியங்களால் ஏற்படும் ஸர்வ மங்களாமங்கள கார்யங்களுக்கு மனஸுதான் காரணம். மனஸு நிஷ்கல்மஷமாயிருந்தால் இந்திரியங்களா லேற்படும் எந்த கார்யங்களுக்கும் தோஷம் வராது.

தாரை, வாலியை மணந்தபின் ஸுக்ரீவனை க்ரமப்படி சகோதர கோஷ்டியில் சேர்த்திருந்தாள். பிறகு வாலி துந்துபி யுத்தத்தில் காரணாந்தரத்தினாலே வாலி மரண மடைந்ததா யெண்ணி சுக்ரீவனை அக் காலத்தில் அவர்களுக் கிருந்த ஆசாரப்படி விதவாவிவாக முறையினால் கல்யாணம் செய்து கொண்டாள். வாலி பிழைத்து வந்தது தெரிந்து தான் அக்ஞான பூர்வமாய்ச் செய்த கார்யத்திற்காக அநு தாபப்பட்டு மறுபடியும் வாலி பத்தினியாகவே யிருந்தாள். ஸ்ரீராமனால் வாலி ஸம்ஹாரமானவுடன் திரும்பியும் சுக்ரீ வனை மணந்தாள். எந்த காலத்திலேயும் தனக்கு பர்த்தா வாக ஏற்பட்டவனிடம் அனந்ய பக்தியுடன் அவளிருந்த

படியால் இவளுக்கு பாதிவ்ரத்ய பங்கதோஷமில்லை யென்று சாஸ்த்ர மறிந்த பெரியோர்கள் சொல்லுவதுண்டு. இதெல்லாம் தவிர ஸ்ரீராமபிரானைத் தான் நேரில் பார்ப்பதற்கு முன்னமேயே அவன் குணங்களைக் கேட்டு பக்தி மேலிட்டு

निवासवृक्षस्साधूनां आपन्नानां परा गतिः ।
आर्तानां संश्रयश्चैव यशसश्चैकभाजनम् ॥

என்றபடி குணானுபவம் செய்த படியாலும் ஸ்ரீராமபிரானை நேரில் பார்த்தபின்னிட்டு அவன் திருவடிமுதல் திருமுடிவரையில் ஸேவித்து,

त्वमप्रमेयश्च दुरासदश्च जितेन्द्रियश्चोत्तमधार्मिकश्च ।
अक्षय्यकीर्तिश्च विचक्षणश्च क्षितिक्षमावान्क्षतजोपमाक्षः ॥

என்றபடி பக்தி புரஸ்ஸரமாய் அவனுடைய திவ்ய குணங்களிலீடுபட்டு அசுத்தரையும் சுத்தராக்கும் ஸ்ரீராம கடாக்ஷ வீக்ஷணத்திற்குப் பாத்திரமான படியாலும், இவளையும் உத்தம பதிவ்ரதா கோஷ்டியில் சேர்த்தது நியாயமே யாகும்.

4. மந்தோதரி—இன்னு மனேக கற்புடைய ஸ்திரீகளிருக்க ஒரு ராக்ஷஸியை ஸீதா கோஷ்டியில் சேர்த்ததின் காரணமென்ன?

नाहमौपयिकी भार्या परभार्या सती तव ।
साधुधर्ममवेक्षस्व साधु साधुव्रतं चर ॥

"நான் உன் பத்தினியல்ல, அயலாருடைய தர்ம பத்னி, மேலும் பதிவ்ரதை, உன் புத்தியைத் திருப்பி ஸன்மார்க்கத்தில் அநுஷ்டித்து ஸாதுக்களின் தர்மத்தைக்

கார்ப்பாய்" என்று ஸீதா தேவியார் ராவணனுக்கு உபதேச ரூபமாய் பதில் சொல்ல அப்போது அவன்

स्वधर्मो रक्षसां भीरु सर्वथैव न संशयः ।
गमनं वा परस्त्रीणां हरणं संप्रमथ्य वा ॥

அயலார் ஸ்திரீகளை விரும்புவதே ராக்ஷஸர்களின் தர்மமென்று பதிலுரைத்தான். இப்படிச் சொன்ன மஹாபாபியின் தர்மபத்தினியான மந்தோதரியின் வாக்யத்தைப் பார்த்தால் இவனனுஷ்டித்த தர்மத்திற்கு நேர் விரோதமா யிருக்கிறது. ரணரங்கத்தில் ராவணனுடைய சவத்தைப் பார்த்து மந்தோதரி இம்மாதிரி சொல்லி புலம்பியழுகிறாள்.

पतिव्रतानां नाकस्मात्पतन्त्यश्रूणि भूतले ।
पतिव्रतायास्तपसा नूनं दग्धोऽसि मे प्रभो ॥

தாத்பர்யம். "பதிவ்ரதா ஸ்திரீகளின் கண்ணீர் நிஷ்காரணமாய் பூமியில் விழுவதில்லை. பதிவ்ரதா சிரோமணியான ஸீதா தேவியின் தபோக்னியால் நீ எறிக்கப்பட்டாய்" என்றாள். இப்படி துர் தசையில் கூட பதிவ்ரதா தர்மத்தை ஸர்வோத்க்ருஷ்டமாய்ச் சொன்ன உத்தமி அந்த தர்மத்தை நன்றாகவே யனுஷ்டித்திருக்க வேண்டும். அது ஸ்வ தர்ம விரோதமாயிருந்த போதிலும் அப்படிப்பட்ட உத்தமமான தர்மத்தை மந்தோதரி யனுஷ்டித்து பிறருக்கு மார்க்க தர்சியானபடியாலே அவ்வுத்தமியையும் மஹனீயாளுடைய கோஷ்டியில் சேர்ப்பது நியாயமே.

(5). ஸீதா :—கற்பைக் காப்பதற்காகவும் உத்தமமான பதிவ்ரதா தர்மத்தைப் பிறருக்கு அநுஷ்டித்துக் காட்டுவதற்காகவுமே யவதரித்த ஜானகியின் சரித்திரத்தை இங்கே விஸ்தரித்து சொல்வது அனவசரம்.

अचिन्तयन्ती त्रीन्लोकान् चिन्तयन्ती पतिव्रतम् ।
शुश्रूषमाणा ते नित्यं नियता ब्रह्मचारिणी ॥

ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தையிலேயும் மூன்று லோகங்களிலுமுள்ள போகங்களை யெல்லாம் வெறுத்து தன் நாதனுக்கு பக்தி பூர்வமாய் ஸர்வ ப்ரகாரத்தாலேயும் கைங்கர்யம் செய்த பெண்மணி யன்றோ ஸீதா தேவி.

यद्यस्ति पतिशुश्रूषा यद्यस्ति चरितं तपः ।
यदि वास्त्येकपत्नीत्वं शीतो भव हनूमतः ॥

ஹநுமாரின் வாலில் தீயிட்ட சமயத்தில், தான் அநுஷ்டித்த பதிவ்ரதா தர்மத்தைத்தானே பரீக்ஷை செய்து, அதனாலவரைக் காத்த உத்தமியன்றோ வைதேஹி.

33 கோடி தேவதைகள் முன்னிலையில் தான் அக்னி ப்ரவேசம் செய்து

यथा मे हृदयं नित्यं नापसर्पति राघवात् ।
तथा लोकस्य साक्षी मां सर्वतः पातु पावकः ॥
कर्मणा मनसा वाचा यथा नातिचराम्यहम् ।
राघवं सर्वधर्मज्ञं तथा मां पातु पावकः ॥

தான் அநுஷ்டித்து வந்த பதிவிரதா தர்மம் ஸத்யமாயிருக்கும் பக்ஷத்தில் அத் தர்மம் தன்னைக் காக்கக்கடவதென்று சபதம் கூறி, அக்னி பகவானால் ஸர்வ சுத்தை யென்ற பிருதைப் பெற்று, தேவர்களனைவரும் பார்த்திருக்க, திருமேனியில் ஒருவித வைகல்யமில்லாமல் அக்னியிலிருந்து வெளிக் கிளம்பின புண்யவதியின் பதிவ்ரதாநுஷ்டானத்தை யறியாதார் யாருமுண்டோ இவ்வுலகில் ?

ஸுந்தரகாண்டம்

ஸ்ரீமத் ராமாயணத்தில் ஒவ்வொரு காண்டத்திற்கும் காரணப் பெயருடன் பேருண்டு. ஐந்தாவது காண்டத்திற்கு மாத்திரம் ஸுந்தர காண்டமென்று வால்மீகி பகவான் பெயரிட்டதற்குக் காரணமென்ன? தவிர, இந்த காண்டத்தை ஸர்வோத்க்ருஷ்டமான காண்டமென்றும் நித்ய பாராயணத்திற்கு உசிதமானதென்றும் பெரியோர்கள் சொல்லுவதற்குக் காரணமென்ன? இவைகளை விசாரிக்க வேணும்.

'ஸுந்தர' சப்தத்திற்கு 'அழகு' 'மங்களம்' 'வானரம்' என்றும் அர்த்தம். க்ரந்தகர்த்தாவின் கவிதாஸாமர்த்யம் ஸர்வப்ரகாரத்தாலேயும் இந்த காண்டத்தில் விளங்குவதால் அழகிய காண்டமென்று சொல்வது பொருத்தமே. மங்கள தேவதையான பிராட்டிக்கும் கஷ்டம் நேரிட்டு அந்த கஷ்டம் நிவாரணமாகி அவளுக்கு மங்களமுண்டானதை அறிவிக்கிறபடியால் மங்களகாண்ட மென்று சொல்வதும் தகும். ஸ்ரீராகவன் திருவடிகளில் அசஞ்சலமான பக்தி செய்து திவ்ய தம்பதிகளுக்குப் பூர்ணமாய் கைங்கர்யம் செய்த வானர ச்ரேஷ்டரான ஹநுமாரின் பிரபாவம் முழுமையும் இந்த காண்டத்தில் வெளியாவதால் இதை வானரகாண்டமென்று சொல்வதும் சரியே. இம்மூன்று அர்த்தமும் 'ஸுந்தரம்' என்ற ஒரே பதத்திலடங்கினபடியாலே இந்த காண்டத்திற்கு ஸுந்தர காண்டமென்று வால்மீகி பகவான் பெயர் வைத்திருக்கலாம்.

ஆனால் இது ஸர்வோத்க்ருஷ்டமான காண்ட மென்ப

தற்கும் நித்ய பாராயணத்திற்கு யோக்யதையுள்ள தென்ப தற்கும் காரணம் என்னவென்றால்:—

ஸ்ரீமத் ராமாயணம் வேதோபப்ருஹ்மணமாகையால் வேதத்திற்குப் பொருளாயுள்ள புருஷன் ஸ்ரீராமனாய் பூமியிலவதரித்தபோது வேதமே ஸ்ரீமத் ராமாயணமாயவதரித்த தென்பது ஸுப்ரஸித்தம். வேதப்ரதிபாத்யமானது காயத்ரீ மஹாமந்த்ரம். ஸ்ரீமத் ராமாயண ப்ரதிபாத்யமானது ஸ்ரீராம தாரகம். இதிஹாஸத்தில் மந்த்ரத்தை ஸாக்ஷாத் தாய்ச் சொல்லுவதற்கு நியாயமில்லாததினாலே இஹபர ஸாதகமான அந்த அபூர்வமான ஸ்ரீராமதாரக மந்த்ரத்தின் அர்த்தத்தை பகவான் வால்மீகி 24,000 ச்லோகங்களுக்குள் ஓரிடத்திலடக்கி அதை சரியான சமயத்தில் ஒரு மஹா புருஷன் மூலமாய் உலகிலுள்ளவர்களுக்கு வெளியிட்டிருக்கிறார். அந்த அபூர்வமான ச்லோகம் ஸுந்தர காண்டத்திலடங்கி யிருப்பதால் இந்த காண்டத்திற்கு அதிக ஏற்றம் வந்ததிற்கு இது ஒரு முக்யமான காரணம்.

தவிர, ஸ்ரீமத் ராமாயணம் ஒரு சரணாகதி சாஸ்த்ரம். இந்த மகா காவ்யத்தில் வெளிப்படையாயும் உள்ளடக்கமாயும் சொல்லப்பட்ட அநேக சரணாகதி கட்டங்களில் பரிபூர்ணமாயும் ஸர்வோத்க்ருஷ்டமாயுமுள்ள சரணாகதி மேற்கூறிய காண்டத்தில் அடங்கியிருக்கிறது. அதாவது அசோகவனிகையில் பிராட்டியினிடம் த்ரிஜடை செய்த சரணாகதி. அடியில் கண்ட ச்லோகங்களால் அது வ்யக்தமாகிறது.

तदलं क्रूरवाक्यैर्वः सान्त्वमेवाभिधीयताम् ।
अभियाचाम वैदेहीं एतद्धि मम रोचते ॥

भर्त्सितामपि याचध्वं राक्षस्यः किं विवक्षया ।
राघवाद्धि भयं घोरं राक्षसानामुपस्थितम् ॥
प्रणिपातप्रसन्ना हि मैथिली जनकात्मजा ।
अलमेषा परित्रातुं राक्षस्यो महतो भयात् ॥

விபீஷண சரணாகதியை ஒருக்கால் த்ருஷ்ட பலத்திற்காகச் செய்த ப்ரபத்தி என்று காரணாந்தரங்களைக்கொண்டு சிலர் அபிப்ராயப்பட்டாலும் ராக்ஷஸிகளின் க்ஷேமத்தோடு தன் விஷயத்திலே நிஷ்காமமாயும் ஆத்மார்த்தமாயும் செய்த சரணாகதி த்ரிஜடையின் சரணாகதி. மேலும்

मातर्मैथिलि राक्षसीस्त्वयि तदैवार्द्रापराधास्त्वया
रक्षन्त्या पवनात्मजाल्लघुतरा रामस्य गोष्ठी कृता ।
काकं तञ्च विभीषणं शरणमित्युक्तिक्षमौ रक्षतः
सा नस्सान्द्रमहागसस्सुखयतु क्षान्तिस्तवाकस्मकी ॥

என்கிற ச்லோகத்திலே பட்டர் அருளிச் செய்தபடி காகாஸுர விபீஷண சரணாகதிகளைவிட பிராட்டி ஸன்னிதானத்தில் நேராக அநுஷ்டிக்கப்பட்ட த்ரிஜடா சரணாகதிக்கு ஏற்றமுண்டு.

ஸர்வ சேதனர்களும் ஸர்வ காலங்களிலேயும் அநுஸந்திப்பதற்கு யோக்யமான ஸ்ரீராமதாரக மந்த்ரார்த்தமும் பக்த்யாதி உபாயங்களை யநுஷ்டிப்பதற்கு சக்தியற்ற நமக்கு உபாயமாயிருக்கும் பரந்யாஸமும் இந்த காண்டத்திலடங்கியிருக்கிற படியாலே இது ஸர்வோத்க்ருஷ்டமான காண்டமென்று சொல்வது நியாயமாகும். மேலும்,

अद्यत्वे हनुमत्समेतगुरुणा प्रख्यापितार्थः पुमान्
लंकारुद्धविदेहराजतनयान्यायेन लालप्यते ।

என்று 'ஸங்கல்ப ஸூர்யோதய' த்தில் ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகன் அருளிச் செய்தபடி அழகிய இலங்கையில் மோஹங்கொள்ளாத ஸீதைக்கு ஹநுமாரால் ஏற்பட்ட ஸ்ரீராம விருத்தாந்தத்தைச் சொல்லும் வியாஜத்தால் ஜீவனுக்கு ஸம்ஸாரத்திலுள்ள பலங்களில் ஆசையற்றிருக்கும் படியையும், அப்படிப்பட்டவனுக்கு ஆசார்ய மூலமாய் ஏற்படும் தத்வ ஜ்ஞானத்தையும், இந்த காண்டத்தில் சொன்னபடியால் இது ஸுந்தரமான காண்டம்.

தவிர ஸ்ரீமத்ராமாயண கதாஸாரம் பூராவும் இந்த காண்டத்தில் காணலாம். எங்ஙனே யென்னில், முதன் முதல் சிம்சபாவிருக்ஷத்தின் மேலிருந்து ஸ்ரீராமகர்ணாம்ருதத்தை ஹநுமான் ஸீதாதேவிக்கு வர்ஷிக்கும்போது திருமகனாரின் திவ்யசரித்திரத்தைத் திருவவதாரம் முதல் ஸீதாந்வேஷண கைங்கர்ய ப்ராப்தி தனக்குக் கிடைத்துத் தான் தேவியைச் சேவித்த வரையிலுள்ள கதையைச் சொல்லி முடித்தார். அதற்குப்பின் நடந்த வ்ருத்தாந்தங்கள் ஸுந்தரகாண்டத்தில் கவியின் வாக்கால் நமக்கு நன்றாய்த் தெரியும். பிற்பாடு நடக்கபோகிற லங்காநாசம், ராவண வதம், புருஷோத்தமன் ஸீதாஸமேதனாய் புஷ்பக விமானாரோஹணம் செய்தது, ஸ்ரீமதயோத்யா பட்டணத்தில் திவ்ய தம்பதிகளின் பட்டாபிஷேகம், இவைகளெல்லாம் த்ரிஜடை ஸ்வப்ன விருத்தாந்தத்தாலே ஸாங்கோபாங்கமாய்த் தெரிவிக்கப்பட்டது. ஸ்ரீமத் ராமாயண திவ்யசரிதம்

பூராவும் இம்மூன்று பாகங்களாக உத்தம புருஷனான ஹநுமாராலேயும், ஸித்த கவி வால்மீகி பகவானுடைய ஸ்வவாக்யத்தாலேயும், உத்தம ஸ்திரீயான த்ரிஜடையினாலேயும் ஸம்பூர்ணமாய் இந்த காண்டத்தில் நமக்கு வெளியாக்கப் பட்டதாலே ஸுந்தர காண்டத்திற்கு ஒரு ப்ராசஸ்த்யம் ஏற்பட்டது.

ஸ்ரீராம தாரக மந்த்ரார்த்த ச்லோகம்:—

नमोऽस्तु रामाय सलक्ष्मणाय देव्यै च तस्यै जनकात्मजायै ।
नमोऽस्तु रुद्रेन्द्रयमानिलेभ्यो नमोऽस्तु चन्द्रार्कमरुद्गणेभ्यः ॥

(தாத்பர்யம்) லக்ஷ்மண ஸமேதனான ஸ்ரீராமனுக்கும் ஜனகநந்தினியான ஸீதாதேவிக்கும், ருத்ர, இந்த்ர, யம, வாயு, சந்த்ர, ஸூர்ய, மருத்கணங்கள் முதலிய தேவதைகளுக்கெல்லாம் நமஸ்காரம் செய்கிறேன்.

இதை எந்த ஸந்தர்ப்பத்தில் யார் அநுஷ்டித்தது என்றால், न रावणसहस्रं मे युद्धे प्रतिबलं भवेत् । என்னும் आनयिष्यामि वैदेहीं लङ्कां भित्वा सहस्रशः । என்றும் ப்ரதிஜ்ஞை செய்து வீராவேசத்துடன் ஸமுத்திரத்தைத் தாண்டி, லங்கையையடைந்து ராத்ரி முழுதும் காமரூபம் தரித்து ஸீதாந்வேஷணம் செய்து चतुरङ्गुलमात्रोऽपि नावकाशः स विद्यते । என்றபடி 4 அங்குலம் இடங்கூட பாக்கியில்லாமல் தேடின ஸர்வ சக்தனான ஹநுமாருக்கும் தேவியார் புலப்படவில்லை. அதன்பின் தான் ரொம்பவும் துயரப்பட்டு தைச்யாநுஸந்தானம் செய்து "भयेष्वभयदः श्रीमान्" என்று விருது பெற்ற ஸ்ரீராமனைத் தனக்கு அநுக்ரஹம் செய்யும்படி ப்ரார்த்தித்தார். இந்த இடத்தில் ஹநுமான் ஸ்ரீராம தாரக மந்திர ஜபம்

செய்தாரென்றே சிஷ்டாசார பரம்பரையில் சாஸ்த்ர மறிந்த பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அதற்கு விஷயவாக்யம் மேற்கூறிய ச்லோகமே. மூன்றெழுத்துக்கள் கொண்ட ப்ரணவஸ்வரூபியான ப்ரம்மத்தை ச்லோகத்தின் பூர்வார்த்தத்தாலே தியானிக்கிறார். அதிர்ஷ்டார்த்த ப்ரபத்தி செய்பவர்கள் கேவலம் பகவானை மாத்திரம் த்யானம் செய்தால் போது மென்றும், த்ருஷ்டார்த்தமாகில் ஸர்வதேவதாப்ரணாமமும் கூடுமென்றும், சாஸ்த்ரங்கள் முறையிடுகிற படியால், தத் காலத்தில் தான் தேவியைச் சேவித்து ஸ்ரீராம கைங்கரியத்தைப் பூர்த்தி செய்யவில்லையே என்ற மனக்குறை ஹநுமாருக்கு மேலிட்டு அவர் த்ருஷ்டார்த்த ப்ரபத்தி செய்தபடியால் மேற்கூறிய ச்லோகத்தின் உத்தரார்த்தமும் யுக்தமாகிறது. இந்த அபூர்வமான ஸ்ரீராம தாரக மந்த்ரோபாஸனையை பகவான் வால்மீகி ஸ்ரீராம பக்த சிகாமணியான ஹநுமார் மூலமாக லோகோஜ்ஜீவனார்த்தம் வெளியிடுகிறார். ஸர்வப்ரயத்னத்தாலேயும் ஸாதிக்க முடியாத கார்யத்தை ஹநுமார் ஸ்ரீராம தாரக மந்த்ரஜபம் செய்தவுடனே ஸாதித்து விட்டார். இந்த ச்லோகத்தை அநுஸந்தானம் செய்தவுடனே தேவி எழுந்தருளியிருக்கும் அசோகவனம் மாருதிக்குப் புலப்பட்டு உடனே அவர் அசோகவனம் சென்று ஜானகியை ஸேவித்து ஆநந்தபரிதரானார்.

மேற்கூறிய நிகரற்ற காரணங்களால் ஸ்ரீமத் ஸுந்தர காண்டத்திற்கு உத்கர்ஷ மேற்பட்டது.

திருமகனுரின் திருமேனி

ஹநுமான் ஸீதா தேவியை அசோக வனத்தில் ஸேவித்து ஸ்ரீராம கதாம்ருதத்தை தேவியாருக்கு வர்ஷிக்கும்போது ரகுநாயகி ஸ்ரீராமதூதனைப் பார்த்து தன் நாதனுடைய ஸ்வர்ணம் போன்ற நிறமுள்ள திருமுக மண்டலம் தன் பிரிவினுல் சோர்வை யடையாமலிருக்கிறதா வென்று கேட்கிருள்.

"कच्चिन्न तद्धेमसमानवर्णं तस्याननं पद्मसमानगन्धि ।
मया विना शुष्यति शोकदीनं जलक्षये पद्ममिवातपेन ॥

'பச்சைமா மலைபோல் மேனி' என்கிறபடி புராண புருஷன் நீலமேக ச்யாமளனென்றும்

हिरण्यवर्णां हरिणीं सुवर्णरजतस्रजाम् ।
चन्द्रां हिरण्मयीं लक्ष्मीं जातवेदो ममावह ॥

என்றபடி பிராட்டி பொன் மேனியாள் என்றும் ச்ருதி ப்ரஸித்தம். அப்படியிருக்க தன் நாதனை வர்ணிக்கும் பொழுது **हेमसमानवर्णं** (ஸ்வர்ணம் போன்ற நிறம்) என்று சொல்லுவது எப்படி பொருத்தமாகும். இதை விமர்சை செய்து சாஸ்திர ஸம்மதமாகவும் லோக ஸம்மதமாகவும் ஸமாதானம் சொல்லலாம்.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த கீதா பாஷ்ய தாத்பர்ய சந்திரிகையில் உயர்ந்த ஸ்வர்ணத்தின் நிறத்தை வர்ணித்திருக்கிருர். அம்மஹான் அருளிச் செய்த ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்திலும் பரமைகாந்திகளின்

லக்ஷணங்களைச் சொல்லும்போது 'ஷோடசகலா ஸ்வர்ணம் போலே' என்று அருளிச் செய்கிறார். தத்காலத்தில் லோகத்தில் வழங்கிவரும் சுத்தமான தங்கமானது 10¾ மாத்திற்கு மேல் கிடையாது. எந்த ப்ரமாணத்தைக்கொண்டோ ஸ்வாமி தேசிகன் பதினாறு மாத்துத் தங்கமென்று ஸாதிக்கும்பொழுது இதற்கு மேற்பட்ட விலக்ஷணமான ஒரு தங்க முண்டென்று ஏற்படுகிறது. எப்படியானால் ஸர்வோத்க்ருஷ்டமான வைரம் கொஞ்சம் தூரத்திலிருந்து பார்க்குமளவில் நீலகாந்தியைக் கொடுத்து ஸமீபத்தில் நெருங்கிப் பார்க்கும் பொழுது வெள்ளையாகவே தெரிகிறதோ அதே மாதிரி ஸர்வோத்க்ருஷ்டமான பதினாறு மாத்து தங்கம் தூரத்திலிருந்து பார்க்க நீலவர்ணத்தோடும் நெருங்கிப் பார்த்தால் ஸாதாரணமான மஞ்சள் நிறமுள்ள ஸ்வர்ணம் போலவும் காணப்படுமென்று ஸயுக்திகமாய்ச் சொல்லலாம். இந்த ஸமாதானத்தை நாம் ஒப்புக்கொண்டால் தூரத்திலிருந்து சேவிக்கும் அனந்த கோடி சேதனர்களுக்கு பகவானுடைய திருமேனி நீலமேக ச்யாமளமாகவும், ஸமீபத்திலிருந்து ஏகபோகமா யனுபவிக்கும் பிராட்டிக்கு மாத்திரம் ஸ்வர்ணவர்ணத்துடன் ஸேவிக்கப் படலா மென்பது பொருத்தமான ஸமாதானமாகும்.

தவிர, नीलतोयदमध्यस्था विद्युल्लेखेव भास्वरा என்ற ச்ருதி வாக்யத்தின்படி பகவான் நீலமேக ச்யாமளனு யிருந்த போதிலும் ஸ்வர்ணச் சாயையையுடைய பிராட்டியின் ஸாந்நித்யத்தில் தன்னுடைய சாயை உள்ளடங்கி பிராட்டியின் திருமேனிக் காந்தியே நீருண்ட மேகத்தில் மின்னலொளிபோல் வியாபித்து, அந்த நீலவர்ணத்தையும்

தன்னொளியினால் மறைத்து விடுகிறது. ஆகையால் பிராட்டியின் திருக்கண்களுக்கு பகவான் எக்காலத்திலேயும் ஸ்வர்ண வர்ணத்துடன் ஸேவை ஸாதிப்பார் என்று சொல்லுவது சாஸ்த்ர ஸம்மதமேயாகும்.

"திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன், என்னாழி வண்ணன் பால் இன்று" என்றல்லவோ நேரில் ஸாக்ஷாத்கரித்தவர் பாசுரம்.

[17]

பதிவ்ரதா ஸ்பர்சம்

ஹநுமான் அசோக வனத்தில் ஸீதா தேவியை ஸேவித்து, தேவியார் தன் முதுகின்மேல் ஏறிக்கொண்டால் உடனே ஸ்ரீராம ஸன்னிதானம் போய்ச் சேர்த்து விடுவதாய் வினயமாய் விண்ணப்பம் செய்த போது, அதற்கு ஜானகி பதில் சொல்லுகிறாள் :—

भर्तृभक्तिं पुरस्कृत्य रामादन्यस्य वानर ।
न स्पृशामि शरीरं तु पुंसो वानरपुङ्गव ॥

நீர் ஜிதேந்த்ரியராயிருந்த போதிலும் பதிவ்ரதா தர்மானுஷ்டானம் செய்யும் நான் ஸ்ரீராமன் திருமேனியைத் தவிர பர புருஷனுடைய சரீரத்தை ஸ்பர்சிப்பது நியாயமில்லை என்றாள். இப்படி அருளிச் செய்த வைதேகியார் ஜடாயுவின் அந்திய காலத்தில் அவரை ஆலிங்கனம் செய்து புலம்பியழுதாள்.

ततस्तु तं पत्ररथं महीतले निपातितं रावणवेगमर्दितम् ।
पुनः परिष्वज्य शशिप्रभानना रुरोद सीता जनकात्मजा सा ॥

இப்படி தன்னுடைய ஸங்கல்பத்துக்கே விரோதமாய் ஜானகி அனுஷ்டித்ததின் காரணம் என்ன? ஜடாயு பக்ஷி வர்க்கத்தில் சேர்ந்தபடியால் இதற்குத் தோஷமில்லை என்று ஸமாதானம் சொன்னால், ஹநுமாரும் வானர கோஷ்டியில் சேர்ந்தவரே தவிர மனுஷ்யவர்க்கத்தில் சேர்ந்

தவரன்று. இம்மாதிரியான பூர்வோத்தர விரோதமாய்க் காணப்பட்ட ஸீதா தேவியின் தர்மானுஷ்டானத்தில் ஒரு விசேஷ சாஸ்த்ரார்த்த முண்டு. नाग्यहतस्य लोकोऽस्ति பிராம் மணன் கையால் மரண மடைந்தவனுக்கு ஸத்கதியில்லை என்று சாஸ்திரமானபடியால், விச்ரவஸ் ப்ரம்ம ரிஷியின் புத்திரனான ராவணன் கையால் அடிபட்டு சாகப்போகும் ஜடாயுவுக்கு துர்கதி வந்து விடுமோவென்று சங்கித்து, அவர் பகவத்கிருபைக்குப் பாத்ரமாய் ஸ்ரீ வைகுண்டத்தை யடைய வேண்டுமென்ற திருவுள்ளத்தால், அவருக்கேற் பட்ட தோஷநிவாரணார்த்தம், தன் திருக்கைகளினால் அவ ரைத் தழுவினாள். எந்த ஜீவனுக்கும் நிர்யாண காலத்தில் உத்தம பதிவ்ரதா ஸ்திரீகள் கரஸ்பர்சம் பட்டால் அவனுக்கு ஸத்கதி கிடைக்கு மென்றும், பட்டுப் போன மரங்களை பதி வ்ரதா ஸ்திரீகள் காலால் உதைத்தால் அவைகள் மறுபடியும் துளுத்துவிடுமென்றும் காதம்பரி, வாஸவதத்தை முதலிய மகா காவ்யங்களிலும் பெரியோர்களின் சிஷ்டாசாரத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

பாபிகளுக்குக் கடைசி காலத்தில் யமதூதர்கள் தர்சன மும் புண்யாத்மாக்களுக்கு ஸாக்ஷாத் யமதர்சனமு முண்டு. ஸ்ரீராமாவதார ஸமாப்தி காலத்திலே, யமதர்மராஜன் ப்ரம்மரிஷிவேஷம் பூண்டு ஸ்ரீராமன் ஸன்னிதானத்தில் வந்து ஸவினயமாய் அவதாரஸமாப்தி காலத்தை ரஹஸ்ய மாய்த் தெரிவித்தான்.

कस्य चित्त्वथ कालस्य रामे धर्मपथे स्थिते ।
कालस्तापसरूपेण राजद्वारमुपागमत् ॥

ஸ்ரீராமனை த்ரோஹம் செய்த தசரத சக்ரவர்த்திக்கு யமதூதர்கள் தர்சனம் ஸம்பாவிதமாயிற்று. दूताः वैवस्वतस्येते कौसल्ये त्वरयन्ति माम् என்றும் कौसल्ये साधु मां पाणिना स्पृश "கௌஸல்யே உன் அம்ருதம் போன்ற கையினால் என்னைத் தடவிக் கொடு," என்றும் சக்ரவர்த்தியார் கதறுகிறார்.

இந்த சாஸ்த்ரார்த்தம் தெரிந்த ஸீதா தேவியும் தன் விஷயத்தில் உயிரை விட்ட ஜடாயுவினிடம் நன்றியறிவைப் பாராட்டித் தன் திருக்கைகளாலே அவரைத் தழுவிக் கொடுத்தாள். அதனால் அவர் தோஷ விமோசனமடைந்து ஸ்ரீராமனுடைய கிருபைக்குப் பாத்ரமாகி, மோக்ஷ மடைந்தார். தேவியார் அப்படி செய்யாத பக்ஷத்தில் ஜடாயுவுக்கு மோக்ஷப்ராப்தியிராது.

தவிர, ஜடாயு தன் மாமனருக்குத் துல்ய வயதுள்ள வயோதிகர், சரமதசை. இந்த ஸந்தர்ப்பத்தில் கரஸ்பர்சம் செய்தால் யாரும் தோஷாரோபணம் செய்ய மாட்டார்கள்.

मनो हि हेतुस्सर्वेषां इन्द्रियाणां प्रवर्तने ॥

ஸர்வ இந்திரிய ஸம்பந்தப்பட்ட கார்யங்களுக்கு மனோபாவம் தான் காரணமென்றபடிக்கு சாஸ்திரதோஷமுமிராது.

ஹநுமார் விஷயத்தில் அவருடைய திருமேனி ஸ்பர்சம் ஏற்படுவது ஸ்வ ப்ரயோஜனத்துக்காக. ஜடாயு விஷயத்தில் பர ப்ரயோஜனத்துக்காக. ஹநுமார் யௌவன மத்யஸ்தர். ஜடாயு வயோதிகர். ஆகையால் ஜடாயு விஷயத்தில் தேவியார் அனுஷ்டித்தது சாஸ்த்ர ஸம்மதமான ஆபத் தர்மம்.

[18]

இந்த்ரஜித் வதம்

ராவணன் அநேகமான பாப க்ருத்யங்களைச் செய்திருந்த போதிலும் யுத்தத்தில் அஸகாய சூரனென்ற பிருதை ஸ்ரீராமபிரானிடத்திலிருந்தே பெற்றவன். ராக்ஷஸ வ்யூகத்தில் தர்ம யுத்தம் செய்தவன் அவனொருவனே. இவன் குமாரன் இந்த்ரஜித்தோ போர் வீரனென்ற பேர் வாங்கியிருந்த போதிலும் தர்மயுத்தம் செய்தவனன்று. கூடயோதி (கபட யுத்தம் செய்பவன்) யாதலால் அவனோடு போர் புரிவது ஸுலப ஸாத்தியமன்று. அப்படிக்கிருந்தும் இளைய பெருமாள்

अद्य मत्कार्मुकोन्मुक्ताः शराः निर्भिद्य रावणिम् ।
लङ्कामभिपतिष्यन्ति हंसाः पुष्करिणीमिव ॥
अद्यैव तस्य रौद्रस्य शरीरं मामकाश्शराः ।
विधमिष्यन्ति भित्त्वा तं महाचापगुणच्युताः ।

தாத்பர்யம்: 'என்னுடைய மகா தனுஸ்ஸிலிருந்து கிளம்பப்பட்ட பாணங்கள் பாபியான இந்திரஜித்தின் சரீரத்தைப் பிளந்து சின்னம் பின்னமாய்ச் செய்து விடும்,' என்று சபதங் கூறினார். யுத்தம் ஆரம்பித்து மூன்று நாள்கள் ஆகியும் ஒரு பக்கத்திலும் ஜயாபஜயம் ஏற்படாததினால் இளைய பெருமாள் ஆபத் பந்து (भयेष्वभयदः श्रीमान्) வான தன் நாதனை த்யானித்து அடியில் கண்டவாறு அநுஸந்தானம் செய்கிறார்.

धर्मात्मा सत्यसन्धश्च रामो दाशरथिर्यदि ।
पौरुषे चाप्रतिद्वन्द्वः शरैनं जहि रावणिम् ॥

(தாத்பர்யம்) ஸ்ரீராமன் தர்மாத்மாவாக இருக்கும் பக்ஷத்தில் எப்போதும் ஸத்யத்தையே யனுஷ்டிப்பது நிஜமாயிருக்கும் பக்ஷத்தில், சக்ரவர்த்தியாரின் தபோ பலத்தால் அவதரித்தது பொய்யாகாதிருக்கும் பக்ஷத்தில், யுத்தத்தில் முன் வைத்த காலை பின் வையாத தோராத தனி வீரனு யிருக்கும் பக்ஷத்தில், ஏ பாணமே, இந்த இந்த்ரஜித்தின் தலையைத் தூக்கிவிடு.

இப்படி அனுஸந்தித்து பாணத்தை ப்ரயோகம் செய்தவுடனே இந்த்ரஜித்தின் சிரசு சேதிக்கப்பட்டது. இளவீரர் ஜயமடைந்தார். ஸ்ரீராமபிரானிடத்தில் நான்கு விதமான சம்சயங்கள் லோகத்திலுண்டாகலாமென்று லக்ஷ்மணனுக்குத் தோன்றி அந்த ஸந்தேகங்களை இந்த ஸமயத்தில் நிவாரணம் செய்தார் போலும்.

அவையாவன :—

1. வாலியை விசாரியாமல் மறைந்திருந்து ஸம்ஹாரம் செய்தது.

2. मम चक्षुष्पथं प्राप्य न जीवन्प्रतियास्यति ராவணன் தம் கண்ணுக்கு நேராகப் புலப்பட்டால் அவன் உயிருடன் திரும்பிப் போவதில்லை யென்று சபதம் கூறின ரகுநந்தனன் பரமகாருண்யத்தாலே ப்ரதிஜ்ஞாபங்கமும் செய்து முதல் நாள் ராவண யுத்தத்திலே गच्छानुजानामि रणार्दितस्त्वं என்றும் न त्वां शरैः मृत्युवशं नयामि என்றும் சொல்லி அவனைத் தப்பவிட்டு உயிர் பிச்சை கொடுத்தார்.

3. पुत्रमन्त्ये च कर्मणि। நிர்யாண காலத்தில் ஜ்யேஷ்ட புத்ரன் ஸமீபத்திலிருந்து தகப்பனருக்குச் சரம கைங்கர்யம் செய்யவேண்டும் என்ற சாஸ்த்ரார்த்தத்தை ஸ்ரீராமபிரான் அநுஷ்டிக்கவில்லை.

4. ஜனஸ்தானத்தில் கரனேடு போர் புரியும் காலத்தில் अपासर्पत्प्रतिपदं किञ्चित् त्वरितविक्रमः என்றபடி இரண்டோரடி பின் வாங்கினது.

இந்த்ரஜித்தின் ஸம்ஹார காலத்தில் மேற்கூறிய 4 ஸந்தேகங்களை ராமாநுஜன் கசடற நிவாரணம் செய்துவிட்டார். மேற் கூறிய ஸம்சயங்களுக்கு ஸ்ரீவால்மீகி பகவான் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டே சாஸ்த்ர ஸம்மதமாய் ஸமாதானம் சொல்லலாம்.

(1). வாலிவதப்ரகரணத்தில்

सूक्ष्मः परमदुर्ज्ञेयः सतां धर्मः प्लवङ्गम ।
हृदिस्थस्सर्वभूतानां आत्मा वेद शुभाऽशुभम् ॥

அதாவது "ஸாதுக்கள் அநுஷ்டிக்கும் தர்மங்கள் தர்க்காதிகமான தென்றும், ஸாமான்ய சாஸ்த்ரங்களாலே நிர்ணயிக்க முடியாதென்றும், ஆத்மஸ்வரூபமறிந்த ஆத்மாராமர்களுக்கு மாத்திரம் வெளிச்சமாகு" மென்றும் அருளிச் செய்கிறர். ஸ்ரீராமன் வாலியோடு தர்மாதர்ம சர்ச்சை செய்து "ஆவி போம் வேலை வாய் அறிவு தந்தருளினுய்" என்றும் न दोषं राघवे दध्यै धर्मेऽधिगतनिश्चयः என்றும் நோவுபட்ட வாலியே த்ருப்தியடையும்படி தர்மோபதேசம் செய்தார். தவிர,

अग्निदो गरदश्चैव शस्त्रपाणिर्धनापहा ।
क्षेत्रदारहरश्चैव षडैते आततायिनः ॥
आततायिनमायान्तं हन्यादेवाऽविचारयन् ।

"வீட்டிற்கு நெருப்பு வைப்பவன், விஷம் கொடுப்பவன், தீங்கிழைப்பதற்காக ஆயுத மெடுத்தவன், கொள்ளைக்காரன், ஒருவன் பூமியை யபஹரித்தவன், ஸ்த்ரீகளை யபஹரித்த வன் இவர்கள் ஆறு பேர்களும் 'ஆததாயி' எனப்படுவார்கள். ஆததாயிகளைக் கண்டால் விசாரிக்காமலே ஸம்ஹரிக்க வேண்டும்" என்று சாஸ்த்ரம் சொல்லுகிறபடியாலே களத்ர ஹரணம் செய்த ஆததாயியான வாலியை விசாரியா மல் வதம் செய்ததில் தர்ம லோபமில்லை. **राज्यभारनियुक्तानां एष धर्मस्सनातनः** என்றபடி இது ஒரு முக்யமான க்ஷத்ரிய தர்மமானதாலே, சாஸ்த்ர ரீதியாய் வத்ய கோஷ்டியில் சேர்ந்த வாலிக்கு

न हि धर्मविरुद्धस्य लोकवृत्तादपेयुषः ।
दण्डादन्यत्र पश्यामि निग्रहं हरियूथप ॥

என்றபடி உயிர்ப் பிச்சைக் கொடுப்பது ஸாத்யமில் லாததினாலும், சரணாகத ரக்ஷகனுயிருப்பதால் ஒரு வேளை ராம பலம் அறிந்த வாலி சரணாகதி செய்து விட்டால் அனதி காரிக்குச் சரணாகதி உபாயமாகாதாகையாலே தனக்கு ஒரு வேளை தர்ம ஸங்கட மேற்படுமோவென்று சங்கித்து ஸ்ரீராமன் மறைந்து வதம் பண்ணாதில் நியாய விரோத மில்லை யென்று சாஸ்த்ர மறிந்த பெரியோர்கள் சொல்லு வதினாலும், ஸர்வ ப்ரகாரத்தாலேயும் வாலி வதத்தில்

ஸ்ரீராமனுக்கு தர்ம லோபமில்லை யென்று நிர்தாரணம் செய்யலாம்.

(2) யுத்தரங்கத்தில் எதிரியின் கொடியை வெட்டித் தள்ளி அவன் தரித்திருக்கும் கிரீடத்தையும் உடைத்து விட்டால், சத்ரு தோல்வி யடைந்தவனென்றும், அவன் உயிர் தப்பிப் போனாலும் அவன் வாழ்க்கை நடை பிணத்தின் வாழ்க்கை போலுள்ளது என்று ரணரங்க தீரர்கள் சொல்லுகிறபடியாலே ராவணனோடு முதல் நாள் யுத்தக் கடைசியில் அவனுடைய ரதம், ஸாரதி வில்லு, கிரீடம் முதலியவை யெல்லாம் ஸ்ரீராமனாலே அறுபட்டு கீழே விழுந்து, ராவணன் **'गतश्री'** சோபை யிழந்தவனாய் விட்டபடியாலே பரம காருணிகனான ஸ்ரீராமபிரானின் ஸத்ய ஸந்தத்திற்கு லோப மில்லை. மேற்கூறிய விஷயம் அடியில் கண்ட வால்மீகி வாக்யங்களாலே வயக்தமாகும்.

तेनार्कवर्णं सहसा किरीटं चिच्छेद रक्षोधिपतेर्महात्मा ।
गतश्रियं कृत्तकिरीटकूटं उवाच रामो युधि राक्षसेन्द्रम् ॥
गच्छानुजानामि रणार्दितस्त्वं प्रविश्य रात्रिंचरराज लङ्काम् ।
आश्वास्य निर्याहि रथी च धन्वी तदा बलं द्रक्ष्यसि मे रथस्थः ॥

(3) ஸீதாபதி கங்கையைத் தாண்டி கானக மடைந்தாரென்கிற துக்கஸமாசாரத்தைச் சக்ரவர்த்தியார் செவியுற்றதும் அர்த்த ராத்ரியில் தேக வியோகம் அடைந்தார்.

गतेऽर्धरात्रे भृशदुःखपीडितः तदा जहौ प्राणमुदारदर्शनः ।

அர்த்தராத்ரியில் ரொம்பவும் துக்கத்தாலே பீடிக்கப்பட்டவராய் சக்ரவர்த்தியார் கம்பீரமான பார்வையோடு

ப்ராணனை விட்டார் என்று இதற்கு ஸாமான்ய அர்த்தம். இதில் ஒரு விசேஷார்த்தம் உண்டு. उदारदर्शनः என்கிற பதத்துக்கு ஸப்தமீ பஹுவ்ரீஹி ஸமாஸார்த்தம் சொன்னால் उदारे दर्शनं यस्य सः [उदारः परमोदारः என்றபடி उदार சப்தத்திற்கு பகவானென்று அர்த்தமாகையாலும் உ என்று இலக்ஷ்மிக்குப் பெயராகையாலே இலக்ஷ்மியை தாரமாக (களத்ரமாக) வுடையவன் என்றிப்படி லக்ஷ்மி ஸமேதனை பகவானென்று ஸ்பஷ்டமாவதாலும்] ஸீதாகாந்தரூபியான பகவானைப் பார்த்துக்கொண்டே தேக வியோகம் அடைந்தார் என்றும் சொல்லலாம். இதற்கு விஷய வாக்யம் रामं मेऽनुगता दृष्टिः अद्यापि न निवर्तते என்பது உசிதமான ஸமாதானமாகும். இதனால் தசரதர் நிர்யாண காலத்தில் ராகவன் தன் பரத்வத்தைக் காட்டி தசரதன் ஸமீபத்திலேயே ஸீதையோடுகூட இருந்ததாகப் பொருள் படுகிறபடியால் पुत्रमन्त्ये च कर्मणि என்கிற சாஸ்த்ரத்திற்கு விரோதமாய் நடக்காததினால் ஸ்வாமியின் தாசரதித்வத்திற்கு லோபமில்லை என்று ஸித்தாந்த ஸ்தாபனம் செய்யலாம்.

(4) अपासर्पत्प्रतिपदम् என்ற தோஷாரோபணத்திற்கு இந்த ச்லோகத்தின் பூர்வார்த்தத்திலேயே வால்மீகி பகவான் ஸமாதானம் சொல்லுகிறார் அதாவது

तमापतन्तं संरब्धं कृतास्त्रो रुधिराप्लुतम् ।

ஸ்ரீராமபிரான் பாணத்தைப் பூட்ட கொஞ்சமும் இடம் கொடுக்காமல் கரன் மேல்விழுந்து வந்தான். ஆகையால் தனுஸ்ஸை எடுத்து பாணத்தைப் பூட்ட எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுவரை, அதாவது இரண்டு மூன்றடி, பின் வாங்கினது தவறில்லை. யுத்த சாஸ்திரத்தில் த்வந்த்வயுத்

தம் நீங்கலாக எல்லாவித யுத்தங்களுக்கும் சத்ருக்கள் இருவருக்கும் ஓர் வரம்பும் எல்லையும் உண்டு. காயுத்தம் சஸ்த்ர யுத்தமானதாலே இது இந்த வரப்பிற்கு உள்பட்டது. அப்படி எல்லை தாண்டி கரன் தர்மயுத்தம் செய்யாததனால் அவனோடு போர் புரியும் விஷயத்தில் தர்ம யுத்தமே செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தமும் இல்லை.

ஆரண்ய காண்டத்தில் புருஷோத்தமன் ரிஷிகளுக்கு அபயப்ரதானம் செய்த பின்னிட்டு ஸீதாதேவி தன் நாதனோடு தர்ம விசாரம் செய்கிறாள்.

त्रीण्येव व्यसनान्यत्र कामजानि भवन्त्युत என்று ஆரம்பித்து லோகத்தில் பெரிதான பாபங்கள் மூன்று என்றும், அவைகளில் பொய் சொல்வது மஹாபாபம் என்றும் கூறினாள். இந்த மாதிரியாக புருஷோத்தமனுக்கும் தர்மோபதேசம் செய்யத் துணிந்த தேவியார் ஹநுமான் தன்னுடன் அசோக வனிகையில் வார்த்தையாடின விஷயத்தைப் பற்றி ராவணன் கேழ்க்கும்போது,

" अहमप्यस्य भीतास्मि नैनं जानामि कोन्वयम् ।
वेद्मि राक्षसमेवैनं कामरूपिणमागतम् ॥ "

வந்தவன் யாரென்று எனக்கும் தெரியாது. உன்னைப்போல் காமரூபியான ஒரு ராக்ஷஸனை யிருக்கலாமென்று நானும் பயந்திருக்கிறேன் என்று பதில் சொல்லி புத்தி பூர்வமாய் யாதார்த்யத்தை மறைத்து விட்டாள். இப்படி அநுஷ்டித்ததில் பொய்சொன்ன தோஷம் தேவியாருக்கு இருக்கலாம் என்று சாஸ்த்ர மறியாத பாமரர்கள் சொல்லலாம்.

ஆனால் இது ஸூக்ஷ்ம சாஸ்த்ர மென்றே ஞானியர்கள் அபிப்பிராயப் படுவார்கள்.

தர்மத்தைக் காக்கும் விஷயத்தில் மஹாபாபிகளிடத்தில் பொய் சொன்னால் எப்படித் தவறுதல் இல்லையோ அந்த சாஸ்த்ர ப்ரமாணத்தினாலேயே தர்ம யுத்தம் செய்யாதவர்களிடம் தர்மயுத்தம் செய்ய வேண்டியதில்லை என்ற சாஸ்திரத்தை அனுஷ்டித்துக் காட்டினாராகையாலே வீர கோதண்டபாணி கர யுத்தத்தில் இரண்டடி பின் வைத்தது அவருடைய ஆண்மைத்தனத்துக்கு லோபமாகாது.

ஆகையால் மேற்கூறிய நாலு வகையான தோஷாரோபணங்கள் सत्येन लोकान् जयति ஸத்தியத்தினால் லோகங்களை எல்லாம் ஜயிக்கிறவர் என்று பிருது பெற்ற ஸத்ய புருஷனான ஸ்ரீராமனிடம் ஒவ்வாதது ஒவ்வாதது ஒவ்வாதென்பது திண்ணம்.

[19]

மஹாதேவ ப்ரஸாதம்

ராவண வதத்திற்குப் பிறகு ஸீதாஸமேதனுய் ஸ்ரீராம பிரான் புஷ்பகவிமானத்தின் மேலேறி ஆகாசமார்க்கமாய் ஸ்ரீமதயோத்யா பட்டணம் போகுமளவில் கீழ் நடந்த முக்கியமான சில விருத்தாந்தங்களை தேவியாருக்கு அங்கங்கே சொல்லிக் காட்டுகிருர். விபீஷணன் சரணுகதிக்குப் பின்னிட்டும் ஸேது பந்தனத்திற்கு முன்னிட்டும்

"अत्र पूर्वं महादेवः प्रसादमकरोत्प्रभुः"

என்று சொன்னதாக அநேக ஸ்ரீமத் ராமாயண ஸ்ரீகோசங்களி லிருக்கிறது. இந்த இடம் சைவ வைஷ்ணவ மதஸ்தர்களுக்கு விவாதத்துக்கு இடமானது. மஹாதேவ சப்தத்துக்கு கிரமமாய் சங்கரனென்று அர்த்தம் கொள்ள வேண்டியிருந்தாலும், முன் பின் ஸந்தர்ப்பங்களை யொட்டிப் பார்த்தால், அந்த பதத்திற்கு வருணனென்று அர்த்தம் சொல்லுவது தான் யுக்தமாகும். ஆனல் வருணனைக் குறிக்க வால்மீகி பகவானுக்கு வேறு ஸம்ஸ்க்ருத பதம் கிடைக்காதா? அப்படி யிருக்க சிவபிரதானமான அர்த்தமுள்ள மகாதேவசப்தத்தை க்ரந்தகர்த்தா உபயோகப்படுத்தினல் ஸ்ரீராமபிரான் இவ்விடத்தில் சிவ பூஜை செய்ததாகவே அர்த்தங் கொள்ள வேணு மென்று சைவர்களின் கொள்கை. ஆனல் இப்படி அர்த்தம் சொன்னல் அநேக உபரோதங்கள் ஏற்படுகின்றன.

இக்ஷ்வாகுவம்சஸ்தர்கள் எல்லோரும் வைஷ்ணவர்கள். அதாவது விஷ்ணுவை ஆராதித்தவர்கள்.

"सह पत्न्या विशालाक्ष्या नारायणमुपागमत् ।"

"श्रीमत्यायतने विष्णोः शिश्ये नरवरात्मजः ।"

"प्राणायामेन सदा ध्यायमाना जनार्दनम् ।"

"आराधय जगन्नाथं इक्ष्वाकुकुलदैवतम् ।"

இத்யாதி வால்மீகி பகவானுடைய ஸ்ரீஸூக்திகள் ப்ரமாணங்களாகும். தூர்வாஸ ராமாயணத்தில் ஸ்ரீராமபிரான் சிவபூஜை செய்ததாக இருந்த போதிலும், மும்மதஸ்தர்களும் ஒப்புக்கொண்ட வால்மீகியத்தில் இல்லாததினால் அது நமக்கு ப்ரமாணமாகாது. இந்த முடிவில்லா சர்ச்சைக்கு உத்தர தேசத்தையலங்கரித்த ஸ்ரீமத் ராமாயண வ்யாக்யான துரந்தரரான ஸ்ரீமதுடாரி ரொம்பவும் அழகாயும் ஸர்வமத ஸம்மதமாயும் செய்திருக்கும் வ்யாக்யானம் நன்கு பொருந்தும். அதாவது, மேற் சொன்ன விவாதக்ரஸ்தமான ச்லோகம் புருஷோத்தமன் விமானரூடனாய் லங்கையைப் பார்க்கும் போதே சொன்னதாயிருக்க வேண்டும். ஏதோ ஓலைச்சுவடியில் ஐந்தாறு ச்லோகங்களுக்கு முன்னிருக்க வேண்டியது தவறுதலாகவோ காரணாந்தரத்தாலே புத்தி பூர்வமாகவோ பின்னாலே அச்சிடப்பட்டிருக்கலாம். அப்படியிருந்தால் மகாதேவ சப்தத்திற்குயோக ரூடியாகவே சங்கர பகவானென்று யாதொரு தடையுமின்றி அர்த்தம் கொள்ளலாம். சித்ர கூடத்தில்

त्वामेव शोचंस्तव दर्शनेप्सुस्त्वय्येव सक्तामनिवर्त्य बुद्धिम् ।
त्वया विहीनस्तव शोकरुग्णस्त्वां संस्मरन्नस्तमितः पिता ते ॥

"நிர்யாண காலத்தில் உம்முடைய பிரிவினல் ரொம்பவும் துக்கப்பட்டு உம்மையே பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் விஷயாந்தரங்களில் புத்தி செலுத்தாமல் உம்மையே நினைத்துக்கொண்டு உம்முடைய தகப்பனர் காலகதியானர்" என்று பரதாழ்வான் ஸ்ரீராமனுக்குக் கூறும்பொழுது

किं नु तस्य मया कार्यं दुर्जातेन महात्मनः ।
यो मृतो मम शोकेन मया चापि न संस्कृत : ॥
पुरा प्रेक्ष्य सुवृत्तं मां पिता यान्याह सान्त्वयन् ।
वाक्यानि तानि श्रोष्यामि कुतः कर्णसुखान्यहम् ॥

தாத்பர்யம்: எனக்காக ப்ராணனை இழந்து என்னலே ஸம்ஸ்காரமும் செய்யப்படாத உத்தமமான என் தகப்பனருக்கு நான் ஒரு ப்ரயோஜனமற்ற பிள்ளையாய்ப் பிறந்தேன். என்னுடைய நல்ல நடத்தையைப் பார்த்து அம்ருதம் போன்ற இனிய சொற்களால் என்னை த்ருப்தி செய்த பிதாவின் இனிய மொழிகளை மறுபடியும் நான் எப்போது கேட்பேன் என்று குறை கூறிக் கொண்டார். தேவதைகளின் வேண்டுகோளுக்கு இணங்கி பகவான் ராவணஸம்ஹாரம் செய்து தேவ கார்யத்தைப் பூர்த்தி செய்தபடியாலே தேவதைகளெல்லோரும் க்ருதக்ஞதையைக் காட்டுவதற்காக லங்கையில் பிராட்டியின் அக்னி ப்ரவேச காலத்தில் புருஷோத்தமனைத் ஸேவித்து ஒவ்வொருவரும் தனித் தனியாய் அவர்களுடைய க்ருதஜ்ஞதையைக் காட்டினர்கள். ப்ரஹ்மதேவன் भवान्नारायणो देवः என்றாரம்பித்து இதுவரையில் ரஹஸ்யமாயிருந்த ஸ்ரீராமனுடைய தத்வத்தை

வெளியிட்டு நிரூபமாய் ஸீதாகாந்தனுடைய பரத்வத்தை நிர்ணயம் செய்தார். தேவேந்த்ரன் ராம கைங்கர்யத்தில் உயிரிழந்த வானர வீரர்களைப் பிழைப்பு மூட்டி வைத்தான். அக்னிபகவான் பிராட்டியை ஏந்தி ஸ்ரீராம ஸந்நிதானத்தில் ஸமர்ப்பித்தான். அதே மாதிரி சங்கர பகவானும் कृत्वोपदर्शं दशरथं (அதிமாநுஷஸ்தவம்) என்றபடியே ஸ்வர்க்க லோகத்திலிருந்து தசரதசக்ரவர்த்தியை பூலோகத்திலிருந்த மாதிரியாகவே விமானத்தில் அழைத்து வந்து ஸ்ரீராம பிரானுக்கு தர்சனம் கிடைக்கச் செய்து இருவருக்கும் ஸம்பாஷணை ஏற்படும்படி ஸந்தர்ப்பத்தை உண்டு பண்ணி ஸ்ரீராமனுடைய மனக்குறை நீங்கி, அவர் உள்ளம் பூரிக்க, தான் க்ருதார்த்தனுர். இதுவே மஹாதேவ ப்ரஸாதம். ஆகையால் अत्र पूर्वं महादेवः प्रसादमकरोत् என்ற வாக்யத்துக்கு “இந்த இடத்தில் மஹா தேவனுன சங்கரன் என்னை அநுக்ரஹித்து என் பிதாவின் தர்சனத்தை யளித்தார்” என்ற வியாக்யானம் ஸர்வ ப்ரகாரத்தாலேயும் பொருந்தும். இதற்கு அநுகுணமாகவே இதே பதங்களைக்கொண்டு

“ महादेवप्रसादाच्च पित्रा मम समागमम् ”

“மஹாதேவனுடைய அநுக்ரஹத்தாலே நான் என் தகப்பனுரை ஸேவித்தேன்.” என்று ஹநுமார் மூலமாய் பரத்வாஜாச்ரமத்திலிருந்து ஸ்ரீராமன் பரதனுக்குத் தூது சொல்லியனுப்பும்போது அநுவாதம் செய்தார். இப்படி வால்மீகி பகவானே நிஸ்ஸந்தேகமாய் வ்யாக்யானம் செய்தபடியாலே ஸர்வமத ஸம்மதமாயும் ஸர்வ ஜனரஞ்ஜகமாயுமுள்ள மேற்கூறிய வ்யாக்யானமே பொருந்தும்.

ஸ்ரீராமஷாட்குண்யம்

आनृशंस्यमनुक्रोशः श्रुतं शीलं दमश्शमः ।
राघवं शोभयन्त्येते षड्गुणाः पुरुषोत्तमम् ॥

ஆந்ருசம்ஸ்யமநுக்ரோசः ச்ருதம் சீலம் தமः சமः।
ராகவம் சோபயந்த்யேதே ஷட்குணாः புருஷோத்தமம் ॥

(1) ஹிம்ஸிக்காமலிருக்கை, (2) பிறருடைய துக்கத்தை நீக்க முயல்வது, (3) வித்யை. (4) நீசரென்று நினைத்தொதுங்காமல் நெருங்கி, வேற்றுமை யின்றி கலந்து கொள்வதுக்குரிய மனோ பாவம். (5), வெளி இந்திரியங்களைக் கண்டபடி விடாமல் கட்டுப் படுத்துவது. (6) மனதை அடக்கிக் கொள்வது, இந்த மஹா குணங்கள் ரகுவம்சத்திலே அவதரித்துள்ள புருஷோத்தமனுக்கு சோபையைத் தருகின்றனவென்றர்த்தம்.

இங்கே பகவானுக்கு ஸ்வபாவமாக விருப்பதாக ப்ரமாணங்களிலே வ்யக்தமாயுள்ள ஷாட்குண்யம் போல் பகவானுடைய விபவாவதாரமான ஸ்ரீராமபிரானிடத்திலே இப்படியொரு ஷாட்குண்ய மிருந்த தென்று வால்மீகி பகவான் அநுபவிக்கிறார். இந்த விசேஷத்தைத் தெரிவிப்பதற்காகவே 'புருஷோத்தமம்' என்னும் பதத்தை ப்ரயோகித்தார். இவன் இவ்வுலகில் உத்தமமானவொரு புருஷன் என்பது மாத்திரமல்ல. புருஷோத்தமனென்று ப்ரமாணங்களிலே புகழப்பட்ட ஸ்ரீமந் நாராயணனேயிவன். இங்குள்ள

ஷாட்குண்யம் இம்மாதிரி. பகவானுக்கு ஸ்பாவத்திலேற்பட்ட ஷாட்குண்யமாவது—ஜ்ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ்ஸு என்பனவை யென்று ஸ்ரீவிஷ்ணு புராணத்திலும் ஆகமசாஸ்திரங்களிலும் காணலாம். இவ்வாறு குணங்களிலொன்றுகூட பகவானுக்கு ப்ரஜைகளிடத்திலிருக்கும் அன்பை வ்யக்தமாகக் குறிப்பதாக வில்லை. இப்படி ஸ்பஷ்டமாக ஏற்படாதபடியாலே அந்த ஷாட்குண்யத்தை விட்டு வேறு ஷாட்குண்யம் வால்மீகி பகவானல் வர்ணிக்கப்படுகிறது. ஸ்ரீவைகுண்டத்திலே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந் நாராயணன் எப்படி நம் கண்ணுக்கிலக்காக வில்லையோ, அப்படியே அவருடைய வாத்ஸல்யாதி குணங்களும் மறைந்த வண்ணமே இருக்கின்றன. ஸ்ரீராமனுய் அவர் அவதரித்து ஸர்வ ஜனங்களும் ஸேவிக்கும்படி எதிரிலே நின்றபோது அவருடைய விசேஷ குணங்கள் வால்மீகி முதலிய மஹர்ஷிகளுக்கு மிக ஸ்பஷ்டமாய் விளங்கின. ஆகவே ஸ்ரீராமனிடத்திலே ஆயிரக்கணக்கான குணங்களை வர்ணித்து பகவான் வால்மீகி இவ்விதம் ஒரு ஷாட்குண்யத்தை வகுத்தெடுத்தார். இப்படி ஒரு ஷாட்குண்யத்தை அறியாத வரையில் பகவானிடத்திலுள்ள எந்த குணமும் குணமாகத் தோன்ருது. இதை ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் தயாசதகத்திலே அருளிச் செய்கிருர்.

वृषगिरिगृहमेधिगुणाः बोधबलैश्वर्यवीर्यशक्तिमुखाः ।
दोषा भवेयुरेते यदि नाम दये त्वया विनाभूताः ॥

(ஜ்ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி முதலிய குணங்கள் தயையில்லாத போது தோஷங்களாகவே முடி

யும்) இங்கே 'ச்ருதம்' என்னும் பதத்தாலே 'ஜ்ஞான'த்தையே சொல்லுகிறார். ஆனால் பகவானுடைய ஜ்ஞானம் ஸ்வபாவமாயேற்பட்டிருக்கும்போது 'ச்ருத' மெனப்படமாட்டாது. இங்கே அவதாரதசையிலே லோகாபினயத்துக்காக வஸிஷ்ட விச்வாமித்ராதிகளிடத்திலே வேத சாஸ்திரங்களை அத்யயனம் செய்தபடியாலே இப்போது ஸ்ரீராமனுக்குள்ள ஜ்ஞானத்தை 'ச்ருத' மென்கிறார். "शीलवृत्त-फलं श्रुतम्" என்கிறபடியே ச்ருதத்திற்கு பலமான சீலத்தையும் நடத்தையையுமே இங்கு மற்ற குணங்களாக விவரித்தருளினார். இந்த குணங்களை சில உதாரணங்களைக் கொண்டு இனி சுருக்கமாகக் காண்பிக்கிறேன்.

(1). ஆந்ருசம்ஸ்யம்—**मम चक्षुष्पथं प्राप्य न जीवन् प्रतियास्यति** என்று கண்ணுற்கண்டபோதே ராவணனை வதிக்க வேண்டு மென்று ஸங்கற்பித்திருந்தும் ஸ்ரீராமன், ராவணனுடைய கிரீடத்தை அறுத்துத் தள்ளின பிறகு அவன் தவித்து நிற்பதை கவனித்து இந்த சமயம் அவனை ஹிம்ஸிக்க வேண்டா மென்று தீர்மானித்து அருளிச் செய்கிறார்.

न त्वां शरैर्मृत्युवशं नयामि ॥
गच्छानुजानामि रणार्दितस्त्वम् ॥

"உன்னை பாணங்களைக் கொண்டு யமலோகம் அனுப்பவில்லை. ஏனெனில் நீ யுத்தத்தில் பல விதம் பீடிக்கப்பட்டு சோர்வை யடைந்திருக்கிறாய். இப்படி நிராயுதமாய் தவிக்கிற நீ யுத்தத்தை விட்டுப்போக நான் அனுமதி கொடுக்கிறேன், போ" என்றார். ஸீதாதேவி முன் போலவே அசோக வனத்தில் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறாள்

இவரும் அவனை ஸம்ஹரிக்கவே இங்கு வந்து சேர்ந்தார். அவனும் சரியானபடி அகப்பட்டுக் கொண்டு விட்டான். ஆயினும் அவனை ஹிம்ஸிக்க வேண்டாமென்று விட்டு விட்டாரென்றால் இவருடைய ஆந்ருசம்ஸ்யமே இதனால் வ்யக்தமாகிறது.

(2) தயையென்கிற மஹா குணமும் ஸீதாதேவியினிடத்திலே கடுமையாக அபராதப்பட்டு வத்ய கோஷ்டியிலே சேர்ந்திருந்த காகாஸுரனுக்கும், "**वधार्हमपि काकुत्स्थः कृपया पर्यपालयत्**" என்றபடி தம் கிருபையினாலே உயிர்ப் பிச்சை கொடுத்துக் காத்தருளினதிலிருந்து வ்யக்தம். இம் மஹா குணம் வாலியின் வாயிலிருந்தும் கூட வெளியாயிற்று:—

"रामः करुणवेदी च प्रजानां च हिते रतः ।
सानुक्रोशो जितोत्साहस्समयज्ञो दृढव्रतः ॥
इति ते सर्वभूतानि कथयन्ति यशो भुवि ॥"

(3) ச்ருதம்—இவரிடத்திலுள்ள வித்யையின் பெருமையும் வாசாமகோசரம். வஸிஷ்ட மஹர்ஷியிடத்திலே கற்றதுமின்றி சரணாகதி சாஸ்த்ரத்திற்கு மார்க்கதர்சியான விச்வாமித்ரரிடத்திலே ஸம்பூர்ணமாக அந்த சாஸ்த்ரார்த்தத்தையும் தனுர் வித்யையும் கற்றார்.

रामः स्नात्वा तु नियतः श्रुतवान् जप्यकोविदः ।
संग्रहेणाकरोत्सर्वान् मन्त्रान् सत्रावसानिकान् ॥

என்றபடி அரண்யத்தில் தனியாக வாஸம் செய்த காலத்திலே பர்ணசாலைக்கு வாஸ்துப்ரதிஷ்டாதி விதிகளை யனுஸரித்து சாஸ்திரப்படி இவர் அனுஷ்டித்திருப்பதையும்,

ஜடாயுவுக்கு பிதாவுக்குப்போலே தாமே சாஸ்த்ரோக்தமாய் உத்தரக்கிரியைகளை செய்ததையும், வாலியினிடத்திலும், விபீஷண சரணாகதி ஸமயத்திலே வானரர்களிடத்திலும் தர்மவிசாரம் செய்து பெரியோர்களுடைய புராதனமான ஆசார பத்ததியைப்பற்றி உபதேசித்ததையும், சித்ர கூடத்திலே ஜாபாலி மஹர்ஷி பேசினபோது பதில் அளித்ததையும், பரதனுக்கு कच्चित्सर्ग த்திலே ராஜ்ய பரிபாலன முறையை விஸ்தாரமாகக் குறித்ததையும், அவருக்கே இவ்வுலக வாழ்க்கையில் வைராக்யத்தையும் ஆத்மஜ்ஞானத்தையும் உபதேசித்திருக்கிற விதத்தையும், முதன் முதல் ஹனுமாரோடு ஸந்தித்தபோது அவருடைய வார்த்தையிலே ஸர்வ வேதசாஸ்திரார்த்தங்கள் அடங்கியிருப்பதாகச் சொன்னதையும் விமர்சித்தபோது இவருடைய யோக்யதை அஸாதாரணமானதென்பது சொல்லாமலே விளங்கும்.

(4) சீலம்:—தம்மை குஹஸகர் என்று எல்லோரும் கொண்டாடும்படி நீசஜாதியான குஹனிடத்திலே பேதத்தைப் பாராட்டாமல் ப்ராதா என்கிற அபிப்ராயத்தோடு நெருங்கிப் பழகி வந்தார். சபரியின் ஆச்ரமம் சென்று அவளை பகுவிதமாய் குசலப்ரச்னம் செய்து கௌரவித்தார். வானரர்களையும், ராக்ஷஸர்களையும் கொஞ்சங்கூட நிக்ருஷ்டமாக நினைக்காமல், தம்முடைய ஸ்வபாவமாயுள்ள பரத்வத்தையும் தம் அவதாரத்தாலே தன்யமான சக்ரவர்த்தி வம்சத்தின் பெருமையையும் மறந்து, நீசரிடத்திலே நீசதமர்போலே கலந்து பழகினார்.

व्यसनेषु मनुष्याणां भृशं भवति दुःखितः ।
उत्सवेषु च सर्वेषु पितेव परितुष्यति ॥

என்று எல்லோரிடத்திலும் பேதமின்றி இவர் நடந்து வந்ததை வால்மீகி வர்ணிக்கிறார்.

(5-6) சம-தமங்கள் இவரிடம் பரிபூர்ணம் என்பது—

नाहमर्थपरो देवि लोकमावस्तुमुत्सहे ।
विद्धि मामृषिभिस्तुल्यं केवलं धर्ममास्थितम् ॥

என்று தமக்கு அர்த்த-காமங்களிலே அடியோடு பற்றுதலில்லையென்று கைகேயினிடம் சொன்னதிலிருந்தும் அதன்படி ராஜ்யத்தை த்ருணீகரித்து வனத்திலே இருந்த மாதிரியிலிருந்தும் வ்யக்தம். ராவண வதத்திற்குப் பிறகு ஸீதா தேவியை வரவழைத்து—

प्राप्तचारित्रसंदेहा मम प्रतिमुखे स्थिता ।
दीपो नेत्रातुरस्येव प्रतिकूलासि मे दृढम् ॥

என்கிறபடி ஸீதா பரித்யாகத்திலே துணிந்ததிலிருந்து இவருக்குள்ள ஜிதேந்திரியத்வம் விசதமாகிறது. ஸீதையை விட்டிருந்தபோது வெகு விதம் புலம்பினவர் இப்போது இவ்விதம் சொன்னாரென்றால், சாஸ்திரத்திற்கும் உலகத்திற்கும் விரோதமான வழியில் காமம் கூடாதென்று இவர் அதை ஜயித்திருப்பதையே காண்பிக்கிறது.

प्रिया तु सीता रामस्य दाराः पितृकृता इति ।
गुणाद्रूपगुणाच्चापि प्रीतिर्भूयोऽभ्यवर्धत ॥

என்கிறபடியே ஸ்ரீராமனுக்கு ஸீதா தேவியிடத்தில்—**सधर्मचारिणी मे त्वं प्राणेभ्योऽपि गरीयसी** என்றிவ்வளவு ப்ரீதியும் தம் பிதா சம்மதித்து ஏற்படுத்தின தர்ம பத்னி இவள்

என்கிற அபிப்ராயத்தாலேயே என்றும், அதற்குப் பிறகு அவளுடைய ஆத்ம குணங்களை அநுபவித்ததாலே அது வ்ருத்தியடைந்ததென்றும், அவளுடைய ஸௌந்தர்ய-லாவண்யாதிகளைக் கண்டு அபிவிருத்தமான ப்ரீதியெல்லாம் முன் ஏற்பட்டுள்ள ப்ரீதிக்குப் போஷகமத்தனை யென்றும் வால்மீகி அருளிச் செய்ததிலிருந்தும் இவருக்குள்ள இந்திரிய ஜயத்தை அறியலாம். உலகில் சாமான்யமாக மேல் அழகைக் கண்டு மோஹிப்பதே அதிகம்; ஆத்மகுணங்களை கவனிப்பதே கிடையாது. சிலர் அவற்றை கவனித்தாலும் பெரியோர் அபிப்ராயம் எப்படிஎன்று பார்ப்பது துர்லபமே. இப்படியிருக்க ஸ்ரீராமனிடத்தில் இருந்த க்ரமமானது எவ்வளவு அழகாகக் காண்கிறதென்பதை வாசகர்கள் விமர்சித்துக்கொள்க.

இப்படி மஹா குணங்களோடு அவதரித்துத் தம் அநுஷ்டான முகத்தாலே உலகத்தை நல்வழி நடத்தி ரக்ஷித்தருளின ஸ்ரீராமபிரானுடைய ப்ரபாவத்தை எத்தனை தரம் அநுபவித்தாலும், எவ்வளவு அநுபவித்தாலும்,

न ततर्प समायान्तं पश्यमानो नराधिपः ॥

என்கிறபடியே மேல் மேல் அநுபவிக்க ஆசை வளர்ந்த வண்ணமேயிருக்கும்.

முற்றிற்று.



मङ्गलं कोसलेन्द्राय महनीयगुणाब्धये ।
चक्रवर्तितनूजाय सार्वभौमाय मङ्गलम् ॥
विभीषणकृतप्रीत्या विश्वाभीष्टप्रदायिने ।
जानकीप्राणनाथाय मम नाथाय मङ्गलम् ॥

Gold Medals and Souvenirs

Awarded to

T. SRINIVASA RAGHAVACHARYA

for

Ramayana Discourses

By The

1.	South Indians, **Nagpur**	...	17-3-1928
2.	S.R.B.J. Samaj, **Chittoor**	...	20-12-1928
3.	Madrassees, **Nagpur**	...	1929
4.	Public of **Cheyyar**	...	1931
5.	Ramakrishna Samaj, **Cuddapah.**	...	24-4-1932
6.	Brahmana Sabha, **Cuddalore**	...	29-11-1933
7.	Y.M.I.A., **Kurnool**	...	30-3-1934
8.	Railway Club, **Nandalur**	...	12-4-1935
9.	Lakshmipuram Association, **Madras**	...	14-7-1935
10.	Town Club, **Arkonam**	...	13-10-1925
11.	Sri Vedanta Desika Sampradaya Sudhaswadini Sabha, **Tirupati**	...	20-3-1936
12.	Vedaparayana Sabha, **Mylapore.**	...	31-3-1936
13.	Public of **Tiruttani**	...	1936
14.	Public of **Puttur**	...	1937
15.	Annanavasanti Sangam, **Bangalore Cant**	...	19-4-1937
16.	Hindu Mathabimana Sabha, **Nagapatam**	...	4-3-1938
17.	Public of **Devakotta**	...	8-4-1938
18.	Public of **Tiruvannamalai**	...	3-10-1938
19.	Public of **Chingleput**	...	1939
20.	Sangeetha Sabha, **Vellore**	...	29-3-1939

Sri Kanchi Kamakoti Peetadhipathi

Jagathguru

Sri Sankaracharya Swamigal Mutt.

KUMBAKONAM.

No. G. C. 907 / 1931-32.	SEAL	Camp: Tirupathi. 29—3—1932.

மகா-ள-ள-ஸ்ரீ T. ஸ்ரீனிவாஸ ராகவாசாரியார் அவர்கள் சித்தூரில் ஸ்ரீ மடம் ஸமஸ்தானம் விஜயமாயிருந்தகாலத்தில் ஸ்ரீ மஹாஸந்நிதானத்தில் ஸ்ரீமத் ராமாயணத்தை உபந்நியஸித்தார்கள். இவர்கள் செய்யும் உபந்நியாஸம் ஆஸ்திகர்கள் அனைவரும் அவசியம் கேட்டு ஆனந்திக்கக்கூடிய அரிய பல விஷயங்கள் அடங்கியிருப்பதோடு சொற்சுவையும் சரியான ஹேதுக்களுடன் விஷயங்களை நிரூபணம் செய்வதும் எவர் மனதையும் கவரக்கூடியதாயிருக்கின்றது. இவர்கள் இந்த ஸத்விஷய உபந்நியாஸத்தை வெகு ஜனங்கள் கேட்டு ஆனந்திக்கச்செய்து ஸ்ரீபகவத்க்ருபா பாத்திரர்களாக வேண்டியதென்பதாய் ஸ்ரீமஹாஸந்நிதானத்தில் அநுக்கிரஹிக்கிறார்கள்.

(By command of His Holiness.)

Despatched,
30th Mar. 1932.

C. S. VISVANATHA IYER,
Manager.

श्रीः

Mahamahopadhyaya
Kapisthalam Desikacharya

TIRUPATI
20—3—1936

श्रीमद्वेदान्तदेशिकसम्प्रदायसुधास्वादिनी सभा ।

अयिभोः सत्संप्रदायाधिगतसकल श्रीमद्रामायणार्थाः श्रीमन्तः श्रीनिवासराघवाचार्याः ।

अस्मदभ्यर्थनामनुरुध्य आदितः श्रीमद्रामायणसारं अद्भुतमुपन्यस्तवतां केवलकथाभागकथनव्यग्रतामनादृत्य तत्रतत्र मधुस्यन्दीनि महर्षेर्वाक्यानि स्थलान्तरसन्दब्धैरस्यैव वाक्यैः व्यक्तं व्याख्यातवतां, अभिनीतमानुष्यकस्य भगवतः श्रीरामस्यातिमानुषं वृत्तं अत्यन्तपरत्वं चादरेण महर्षिणा व्यञ्जनया निबद्धमनेकत्राविष्कृतवतां, वालि-खर-ताटकावधेष्वपि श्रीमतो दाशरथेर्धर्मैकनिष्ठतां विश्वामित्रसमागमनिदानं विभीषणशरणागतिं आदित्यहृदयस्य हृदयं अद्भुतां भरतलक्ष्मणादि-सौभ्रात्रसंपदं अन्यच्चानेकं लोकशास्त्राविरोधेन पण्डितपामरहृदयङ्गमं विशदं परिशीलितवतां, तत्रतत्र श्रीपादुकासहस्रादिप्रकृष्टग्रन्थप्रामाण्येन परिष्कृतार्थानां अत्रभवतां विमर्शसरणिं दैवभक्तिं लोकज्ञतां आचार्य-संप्रदायप्रावण्यं चात्यर्थमनुभूयामन्दानन्दभरितमस्माकमन्तरङ्गम् ।

प्रार्थयामहे अजस्रमीदृशैरुपन्यासैरास्तिक्यपोषणैदम्पर्यं आयुरारोग्यसन्तानसंपत्समृद्धिश्च अत्रभवतामनुगृह्णात्वयं श्रीपद्मावतीसमेतः श्रीनिवासः इति शम् ।

क. देशिकाचार्यः
महामहोपाध्यायः-श्रीरामानुजसिद्धान्तविजयध्वजः
(अध्यक्षः)

V. V. SRINIVASA AYYANGAR, B.A., B.L..
(Ex-High Court Judge)

MADRAS,
12th August 1939.

Sriman T. Srinivasa Raghavacharya whom I had known from his boyhood has during the last several years blossomed into **one of the finest exponents of Ramayana.** His art may be accurately described as the art by which he conveys to the hearer or reader **his own literary, artistic** and **critical appreciation** of that wonderful epic in all the warmth, the **keenness and the joy of his own intimate appreciation.**

He **has** thus **struck a new path of his own and developed,** if I may say so, **a new critical art.** His is, of course, not the ancient method of reading each stanza and expounding its meaning. Nor is it the art of the Puranist, who sitting in the pial of a street house makes the text only a pretext for entertaining the audience with something lively and amusing. Nor yet is it the art of the Bhagavathar who merely tells the story in the stereotyped manner in which the main theme is the music and the story or exposition but an accompaniment. In a word **he is himself an artist expounding the art and beauty of the Ramayana.**

As even in all arts the law of demand and supply operates, I can state without hesitation that Sriman Srinivasa Raghavacharya's **art is the rare art of the scholar and the critical artist for the delectation of a cultured audience.**

V. V. SRINIVASAN.

K. S. RAMASWAMI SASTRI,
DT. & SESSIONS JUDGE.

CUDDAPAH,
9—3—1932.

M. R. Ry., T. SRINIVASA RAGHAVACHARYA delivered a series of lectures a few days ago here on the Ramayana His exposition is characterised by an almost **uncanny memory, a rare power of bringing out the beauty of sentiments and ideas in Valmiki's inspired poesy. and an admirable ability to supplement Valmiki's thoughts by Kamban's equally sublime poetry. His frequent flashes of humour and irony increase the effect of his delineation of moral and spiritual truths. Mr. Acharya is a great Ramabhakta, a master of the Ramayana and an able lecturer. We were all very much attracted by his learned and lovely presentation of the truths and sentiments contained in Valmiki and Kamban.** He is yet young and in the height of his powers. I shall be glad to watch his **career of social and spiritual service** of his country and his community.

K. S. RAMASWAMI SASTRI.
Dt. & Sessions Judge.

The Hon'ble Mr. Justice.
K. S. KRISHNASWAMI IYENGAR

Mylapore, Madras,
Dated 18th July 1939.

It has not been my good fortune to have had many opportunities of listening to Mr. T. Srinivasa Raghavacharya's discourses on Ramayana. But the few that I have had, have been enough to impress me that Mr. Srinivasa Raghavacharya possesses **a rare combination of knowledge and skill** in handling his subject, not often met with even amongst the professional exponents. **His method of exposition is specially attractive and impressive,** and makes a strong appeal to modern minds. He has a **profound knowledge of traditional interpretations,** but what is noteworthy is that he is able to bring to bear on his discourses a **freshness of outlook,** and an **attractiveness of manner rarely met with** even amongst the professional exponents. One wishes that there were many more of his type to interpret our ancient culture.

K. S. KRISHNASWAMI IYENGAR.

PROF. K. SUNDARARAMA AIYAR, M.A.,
(OF KUMBAKONAM.)

CUDDAPAH
4—4—32.

In connection with this year's Sri Rama Navami Celebration by the local Sri Ramakrishna Samaj, Brâhma Sri T. Srinivasa Raghavacharya has been giving an exposition of almost **all the chief and significant events** in the life of Sri Rama during the last 10 evenings. I have attended all of them with **immense pleasure and profit.** His **reasoned and eloquent expositions** have been followed throughout with **undiminished interest** by all who formed his audience. **His knowledge** of the great Maharshi's epic **is profound,** and his **numerous and ready quotation were relevant** to his exposition of all his chosen themes. Finally his **manner of delivery was effective and clear to a degree rarely to be met with now-a-days** and I am glad to be able to say that I fully believe that **his explanations and exposition must have a spiritual value for all** who care to enter into them with a genuine and sympathetic desire to derive **practical and immediate benefit** to themselves.

K. SUNDARARAMAN.

LECTURES ON VALMIKI RAMAYANA.

Lakshmipuram, Madras.

Mr. T. Srinivasa Raghavacharya of Chittoor delivered during the months of June and July a series of lectures on Valmiki Ramayana. Pattabhishekam was celebrated on the evening of Sunday the 14th instant, Dewan Bahadur K. S. Ramaswami Sastrigal, presiding. The **exposition** of the subject by the lecturer **was of a very high order and brought out very well the beauty, sentiments, and ideas of the poem by Valmiki. Mr. Srinivasa Raghavacharya's mastery of the important portions of the great epic is remarkable and the power of impressive presentation is as remarkable as his memory. He threw additional and valuable light on the much-debated episode about Vali vadham and Vibhishana Saranagathi.** The lectures were all delivered under the auspices of the Lakshmipuram Association. The Chairman complimented the lecturer on his **excellent performance and the public service** done by him by giving a clear presentation of Ramayana, and on behalf of the public, **presented** the lecturer with **a gold medal**, with the figure of Goddess Lakshmi embossed on it, which was the gift of Lakshmipuram Association.

PROF. K. RAMANUJACHARIAR
(RETD.) OF PACHAIYAPPA'S COLLEGE

KRISHNA BAVANAM,
Cuddalore, *N.T.*, *9th July' 36*

I have listened with considerable pleasure and profit to Mr. T. Srinivasa Raghavacharya's exposition of select topics from the Ramayana. He has a **thorough mastery of the grand Epic** and is familiar with every detail. **His discourses have been lucid and interesting and always held the audience spell-bound. Not one of them would leave the hall until the Upanyasam was over. His thorough grasp of the philosophy** profounded in the great Classic and **his wonderful memory** which makes him quote without effort are indeed **remarkable and praise worthy.**

K. RAMANUJACHARI.

C. N. KUPPUSWAMI AYYAR,
B.A., M.L.
District & Sessions Judge.

JUDGE'S BANGALOW,
NEGAPATAM.
4th March 1938.

I had the delight of attending the series of lectures delivered at Negapatam by Sri Ubha. Ve. T. Srinivasa Raghavacharya of Chittoor covering the entire Srimad Ramayana. **His lucid style and mastery of the language, his clear exposition of the 'Thathwarthas' and the 'Goodarthas' of various important passages** in the Text **revealed his extraordinary mastery over the subject.** His delineation of the mighty Epic as **an exposition of the Great Dharma of 'Saranagathi' was not only interesting but very instructive.** The large and varied audience of men, ladies and boys who thronged to hear his lectures and waited till the end each day disclosed how **popular and lucid his discourses were. He combines in himself the ancient Pundit and the modern critic,** and his quotations from other great works in support of the ideas dealt with in the Ramayana disclosed his wide learning. **It is such expositions that appeal to modern India** and I am glad he is rendering a very usefel and necessary service to the community.

C. N. KUPPUSAMI AYYAR.

DR. M. KRISHNAMACHARYA
M.A., M.L., PH. D., M.R.A.S.
DISTRICT & SESSIONS JUDGE.

CHINGLEPUT.
1—4—1939.

To

SRI T. SRINIVASA RAGHAVACHARYA,

Dear Sir,

It was indeed very kind of you to have spent a week with us to the deteriment of your professional work, **a selfless task for the benefit of man and man's soul.**

Your exposition of Valmiki Ramayana was **not a mere narrative** of the story such as would sound stale to a modern audience. It was a **quick and exquisite resume of the tale, with an outer garb of erudite commentary—an aesthetic appreciation of situations and sentiments, human and divine** enhanced in its merit by the citation of graceful words of eminent religious teachers with **supreme relevancy** in a manner that was at once **impressive and devotional.**

I wish you will live long and hale, to serve Rama and to your hearers attain what all the 'Phalasruti' promises.

Yours sincerely,

M. KRISHNAMACHARYA

R. RANGASWAMY IYENGAR, B.A., B.L.,
SUBORDINATE JUDGE.

SIVAGANGA
Dated 9—10—32.

M. R. Ry., T. Srinivasa Raghavacharya delivered in Sivaganga, discourses on important portions of Sri Valmiki Ramayana before cultured audiences. He was able to produce a **profound impression.** The **discourses were thrilling.** The wealth of **learning** revealed in them was **remarkable.** The eloquence of Mr. Acharya captured the audience and he **kept them spell-bound.** The **intense devotion** that he brings to bear on his exposition renders the same **pure, soul-stirring** and extremely conducive to the achievement of the chief aim of such discourses viz. the **creation of an atmosphere of Bhakti.**

The greatness of Sri Valmiki's work can be brought out only by such exponents of it as Mr. Acharya is, who have **dived into the depths of the meaning of the Maha Rishi,** and not contented themselves with a superficial study of the same.

At a time when faith n the Sri Ramayana is seriously threatened and wrong ideals are caught and held by the young and immature intelects of the land, I for one, believe that **Mr. Acharya is rendering a service of unique value to the Hindu** by preserving his faith in the principles of "SANATHANA DHARMA" so ably and fully illustrated in — life of Sri Rama and the other great souls that lived with Him and under His guidance.

R. RANGASWAMY IYENGAR,
Subordinate Judge.

Brahmasri

T. SRINIVASA RAGHAVACHARYA, AVARGAL,

OF CHITTOOR.

We, the Public of Negapatam, pay our tribute of praise and admiration to your **beautiful and inimitable exposition** of the Great Epic Ramayanam.

You have, Sir, **in so short a period, indelibly impressed on us the essential truths by your comprehensive and masterly survey of the subject,** and your wide study of Sanskrit, Tamil and English has easily earned for you the name of **Thribasha Praveena.**

In token of our humble appreciation of your fine interpretation of Ramayanam, we beg to present this address on the Pattabhisekam day.

Negapatam,
4-3-1938

THE PUBLIC OF NEGAPATAM.

A. SESHAGIRI RAU, B.A., B.L.,
SUB-JUDGE

KURNOOL
2—7—34.

My friend Mr. T. Srinivasaraghavachariar was good enough to accede a request made to him by me while at Chittoor to be here and delivered discourses on the Ramayana, arranged here under the auspices of the local Y. M. I. A. The audience grew in numbers every day and the discourses were listened to with rapt attention and deep devotion as they deserved to be. The deep erudition of Mr. Acharya, his virile presentation, occasional flashes of humour, his remarkable memory, his knowledge of English literature and modern tendencies, all helped to make his discourses useful and illuminating. I trust there will be more occasions in which to hear and more men and women to hear his discourses and benefit by them.

A. SESHAGIRI RAU,
Sub-Judge.

R. S. SUBRAHMANYA AYYAR,
SUB-JUDGE.

SIVAGANGA,
15—4—1939.

Brahma Sri T. Srinivasa Raghavacharya gave a series of discourses on Valmiki's Ramayana for a week, in connection with Sri Rama Navami at Chingleput, in the Kothanda Ramaswamy temple, in March 1939.

He has a **facile and charming method of exposition.** The **presentation** of the story with its settings is **simply facinating.** It is **not the usual pandit style** that beats along trodden paths, that refuses to take note of the necessity for a change in social life with the changing of times, and that falls flat upon a discriminating audience. While dealing with particular incidents in the story, he is able to visualise and present them to the audience with **a broad outlook, that pictures to us the past, the immediate present, and the possible future of the Hindu society.** For doing this, he draws upon immense resources, such as the sentiments expressed in the Ramayana of Kambar and the sayings of Sankara, and the Alwars. Here and there, he **punctuates the discourses with bits of humour or irony** (natural and not artificial), which go to set the story in better and finer relief.

May he live long and continue to render to the Hindu society the service which he has taken upon himself of social and spiritual regeneration.

R. S. SUBRAHMANYAN.